
www.padippakam.com

# வித்தியாலயம்

## 2004



வேலணை மத்தியமகாவித்தியாலய ப. மா. சங்கம்
பிரெஞ்சுக்கிளை

படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com



# வித்தியாலயம் 2004

▷▶ **மலர்க்குழு :**

க. வாசுதேவன்

செ. தேவன்

அ. இயல்வாணன்

ப. கந்தப்பிள்ளை

▷▶ **பொறுப்பாசிரியர்:**

சு. கருணாநிதி

▷▶ **கணனி எழுத்துப்பதிவு :**

ப. கந்தப்பிள்ளை

திருமதி. வாசவன்

க. வாசுதேவன்

பி. இரயாகரன்

▷▶ **வடிவமைப்பு :**

சங்கீதா அச்சகம்

**வெ**ளியீடு என்பது இன்று எங்கும் நடக்கிற சாதாரண நிகழ்வாயிருக்கிறது. ஒரு படைப்பாக்கம் படைப்பாளியிடமிருந்து வெளியே போய் மக்கள் பார்வைக்கு படும்போது அது மக்களுடையதாகிறது. ஆகவே அதன் தரநிர்ணயம் முக்கியமாக கவனம் கொள்ளப்படவேண்டிது. தரம் பற்றிய நிர்ணயம் மக்களின் மனநிலை? உண்மைநிலை? க்கு அப்பால் இருப்பதால் வெளியீடுகளை இலகுவாக "விளையாட்டாக" நினைக்கும் மனப்போக்கு நம்மிடையே காணப்படுகிறது.

புகலிடச் சூழலில் எமது வெளியீடுகள் பல கவனக்குறைவாக (மறைத்தல், மழுப்பல் அல்ல ) வெளிவருகின்றன. உழைப்பு ஈரோ ஆகவும், பதிப்பு ரூபாய் ஆகவும் இருக்கும் போது பெருக்கல் வாய்பாடு வெளியீடுகளைச் சாதாரணமாக நினைக்க வைக்கிறது. "சுண்டக்காய் காற் பணம் சுமை கூலி முக்காற் பணம்" என்பது போல வெளியீடுகளின் தாற்பரியங்கள் நினைப்பது போல் இலகுவல்ல.

புகலிட இலக்கியச்சூழலில் எமது வித்தியாலயம் மலரும் கொஞ்சம் அக்கறையுடன் வெளிக்கொணரப் படுகிறது. இத் தொகுப்பினுள் சிலரின் முதற்படைப்புகள் சேர்க்கப்பட்டிருப்பதுடன், பிரான்சில் வதியும் எமது சிறார்களின் தமிழார்வமும் உற்சாகமும், மாமா நான் எழுதினால் போடுவீர்களா? என்ற கேள்வியும் போட்டியும் . . . அவர்களுக்கு உற்சாகமூட்டும் நோக்கோடு இடம் கொடுத்திருக்கிறோம்.

இம் மலர் வெளிவர ஆக்கங்களைத் தந்துதவிய ஆக்கதாரர்களுக்கும், கணணியில் பதிப்பித்த ப.கந்தப்பிள்ளை, திருமதி. வாசவன், க.வாசுதேவன், பி. இரயாகரன், ஆகியோரும், மலரை வடிவமைத்த சங்கீதா அச்சகத்தினரும் என்றும் எம் நன்றிக்குரியவர்களாகின்றனர்.

- மலர்க்குழு -

04.07.2004

**ASSECVEL**

73, RUE DOUDEAUVILLE, 75018 PARIS


Tél.: 01 42 51 29 92 - Fax : 01 42 51 35 25

படிப்பகம்

www.padippakam.com



# கல்லூரிக்கீதம்



வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவொம்
வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

ஆழி சூழும் ஏழு தீவும்
அறிவு காணும் சாலையாம்
ஊழி ஊழி ஓங்கும் சேவை
உயர்வு காணும் சாலையாம்
வாழி வேலணை மத்திய மகா
வித்தியா சாலையாம்
வாழி ஊழி ஊழி யென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவோம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

அன்பு ஒளியைக் காட்டும் வழியே
ஆய சின்னம் அதுவாய்க்
கொண்டு ஊங்கும் கொள்கை வழியே
குலாவும் சிறார்கள் வாழ்கவே
நன்று கல்வி நாழும் நல்கி
நல்லொழுக்கம் வளர்க்குமே
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவோம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

ஞானம் சீலம் நாடு எங்கும்
நல்கி மல்கி பெருகவே
மான வீர மாணவர்கள்
வளர்த்தெடுக்கும் தாயிவள்
ஆயகலைகள் அறிவியல்கள்
அள்ளி அள்ளி ஊட்டுவாள்
தேனருந்து வண்டு எனத்
திளைத்து நாங்கள் போற்றுவோம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

அன்பு ஆசார் அதிபர் கூடி
ஆக்கம் காட்டும் கோவிலாம்
இன்பத் தமிழோடாங்கிலத்தை
ஏந்திப் போற்றும் கோவிலாம்
நன்று ஆட நயந்துபேச
நமக்கருள் செய் கோவிலாம்
நின்று நாமும் நாடும் வாழ
நிலைக்கும் சேவை போற்றுவொம்

வாழ்க பாட சாலையென்று
வணங்கிக் கூடி வாழ்த்துவொம்

போற்றுவோம் போற்றுவோம்
வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோம்



படிப்பகம்

www.padippakam.com



## தலைவரிடமிருந்து ...

# தத்துவமற்ற நடைமுறையும் நடைமுறையற்ற தத்துவமும்

பலர் நல்ல விடயங்களை செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். செய்ய முயன்று கொண்டிருக்கிறார்கள். சில நினைவுகள் நினைவுகளாகவே இருந்துவிட்டு செத்துப் போகின்றன. சில செய்து முடிக்கப்படுகின்றன. நினைவாயிருக்கின்ற திட்டங்கள் பல சமூகத்திற்கு நன்மை பயப்பனவாக இருந்தும் செய்து முடிக்க முடியாமல் போகின்றன. இயன்ற வேலையைச் செய்யக்கூட இடையில் அக, புற, காரணிகள் இடையூறுகளாக அமைந்து விடுகின்றன. தயக்கமானவர்களும், மயக்கமானவர்களும் இதைக் காரணமாக்கி விலகிப்போவதும், தப்பிப்பதும் இயல்புதான். இவற்றையெல்லாம் தாண்டி நல்ல விடயங்களைச் செய்யத்தவறுவோமாயின் அது வளர்ந்து (அது எனக் கருதுவது இங்கே தேவை நிவாரணம் அல்லது பிரச்சினை) பெரிதாகி, பெரிதான ஒன்றை செய்ய வேண்டிய நிற்ப்பந்தத்தைத் தோற்றுவிக்கும்.

அந்த வகையில் வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையினரும் தயக்கம், மயக்கம் விலகல் சேரலாய் தன் இயங்கு சக்தியை இழக்காது இயங்கிக் கொண்டிருக்கிறது. இன்றைய ஓரளவு சமாதான சூழ்நிலையிலும்கூட தீவுப்பகுதி கடற்படை, ஈ.பி.டி.பி., புலிகள் ஆகியோரின் அலுவலக நிர்வாகச் சூழலில் இருப்பதென்பது பலருமறிந்தவொன்று. பொதுவாக தமிழ்ப்பகுதிகளில் கல்வித்துறை இன்று வியாபாரமயப்படுத்தப்பட்டு விட்டது. தமிழ்ப்பகுதிகளில் சாதாரண, உயர்தர பரீட்சைகளில் பெறுபேறுகள் பெருமளவில் வீழ்ச்சியடைந்திருப்பதாகவும், பாடசாலைக்குச் செல்லாத மாணவர்கள் தொகை அதிகரித்திருப்பதாகவும் அண்மித்திய ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதற்குக் காரணம் பெற்றோரின் பொருளாதார நிலைமை, கல்லூரிகளில் கற்றலுக்கான அடிப்படை வசதிகளற்ற குறைபாடுகள், நகர்ப்புற ஆசிரியர்களின் வியாபாரத்தனப்போக்கு கல்வி அதிகாரிகளின் அசமந்தப்போக்கு புவியியல், புறநிலை காரணிகளின் அச்சுறுத்தல், சூழலியல் வளக்குறைபாடுகள் என்பனவாகும்.

வடகிழக்கில் இன்று புனரமைப்பு என்று சொல்லி இலங்கை அரசு கோயில்களை மட்டுமே மீள் நிர்மாணம் செய்கின்றது. மேற்குலகங்களுக்கு புலம்பெயர்ந்த தமிழர்களும் இக்காரியத்தையே சுயாதீன திட்டங்களில் செய்ய ஒத்துழைக்கின்றார்கள். இலங்கை கல்வி அமைச்சு கூட பாடசாலை அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் பாடசாலைக்குள் கோயில் கட்டவும், மதில் கட்டவும் கட்டளையிடுகின்றது.

பொதுவாக அனைத்துப் பாடசாலைகளிலும் பயிற்றப்பட்ட தகுதியான ஆசிரியர் இன்மை, ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட வசதியின்மை, நூல் நிலையம், கணனி போன்ற நவீன கற்கை நெறிகளுக்கான பல அடிப்படை வசதிகள் தேவைப்படுகையில் எமது கல்லூரிக்குள் இருந்த சிறிய கோயிலை பெரிதாக நீட்டி ஒன்றுகூடல் மண்டபத்துடன் இணைத்திருக்கின்றது. இதற்கு அரசு வழங்கிய நிதிக்குப் பெயர் «பாடசாலைக்கான அபிவிருத்தி நிதி» இதன் தொடர்பணியாகவே எமது கனடாக் கிளையும் சுற்றுமதில் கட்டிக் கொண்டிருக்கிறது. மதில் தேவைதான் மதிலுக்குமுன் செய்யவேண்டிய அவசிய தேவைகள் உண்டு.

கல்லூரியிலுள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ப.மா.சங்கம் அரசியல் நிர்வாகச் சூழல் போன்றவற்றிற்கிடையே வேலியடைக்கவும், பள்ளம் நிரப்பவும், மைதானம் நிர்மாணிக்கவும் இலகுவாகயிருக்கிறது. ஆங்கில கணனி கற்பித்தலுக்கான ஆசிரியர்களை நியமிக்க, வசதிகளைச் செய்ய அங்குள்ள இயல்பு இசைவாக்கமடையவில்லை. கனடாக்கிளையும் பிரான்ஸ் கிளையும் கணனி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்து அதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. பாதுகாப்பான மண்டபம் சுற்றுமதில், வேலி போன்ற விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. க. வாசுதேவனின் ஊக்கமான முயற்சியால் தமிழகத்திலிருந்து உயர்தர ஆங்கில அகராதிகள் நேரடியாக கல்லூரிக்குத் தருவிக்கப்பட்டு உயர்தர மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பது நாம் செய்த மிகப்பெரிய உருப்படியான விடயமாகப்படுகிறது. மற்றும் நூல் நிலையத்தின் முழு வேலைத்திட்டங்களையும் எமது சங்கம் பொறுப்பெடுத்து வேலைகள் நடைபெறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு பிரேத்தியேக ஆசிரியர்களை நியமிக்க (ப.மா.ச. நிதியுதவியுடன்) முன் வந்தோம். அதற்கு பா.அ.ச., ப.மா.சங்கத்தினரிடமிருந்து தன்னிச்சையாக தங்களால் செய்யமுடியாதெனவும், அப்படி நியமனங்களை வழங்கும் அதிகாரம் கல்வி அதிகாரிகளிடமேயுண்டு என்று பதில் வருகின்றது. இங்கு நாங்கள் நினைப்பதெல்லாவற்றையும் அங்கு செய்து முடிக்க இயலாது என்ற அதிபரின் பதிலின் தார்ப்பரியத்தில் பல அரசியல் விடயங்கள் தொக்கி நிற்பதை நாங்கள் அறிய முடிகிறது. இந்தச் சூழ்நிலையில் நாங்கள் நினைப்பதெல்லாவற்றையும் செய்து முடிக்க முடியாதிருப்பது மனவருத்தமே.

இன்றைய யதார்த்தசூழலின் வேகமான மாறுதல்கள் எந்தத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவிடுவதாயில்லை. மனிதனை மனிதன் மதிக்காமையால் மனிதர்களிடையேயான முரண்பாடுகளை விரிவடைந்து கொண்டே போகின்றன. மனிததேவைகளை எட்ட, முன்னேற்றங்களை அடைவதற்கான எத்தனிப்புகளையும், உரிமைகளையும், எதேச்சதிகாரமும் மூர்க்கத்தனமும் முடக்கி விடுகின்றன. அனைத்து நல்ல காரியங்களுக்கெதிராக இடையூறுகளையும் ஏக காலத்தில் நாம் வளர்த்துக் கொண்டேயிருக்கிறோம்.

தத்துவமற்ற நடைமுறை குருட்டுத்தனமானது
நடைமுறையற்ற தத்துவம் மலட்டுத்தனமானது

— கார்ல் மார்க்ஸ்

நடைமுறைக்கு சாத்தியமற்ற தத்துவங்களில் நின்று கொண்டு தத்துவமற்ற நடைமுறைச் சூழலில் இயங்கிக் கொண்டும் வாழ்ந்து கொண்டுமிருக்கிறோம். மலடாயிருக்கின்ற தத்துவங்களைவிட குருடாயிருக்கின்ற நடைமுறை ஓரளவேனும் பயன் தருபவையாக இருக்கின்றது. இந்த நடைமுறைக்கு கைகொடுக்க பல உதவிகள் கிட்டலாம். இயல்பையும் புரிந்து கொண்டு யதார்த்தத்தினுடாக பயனிப்பது சாதுாரியமாக தென்படுகிறது.

பல சிந்தனையாளர்களும், சமூகத்தொண்டர்களும் செயல்பாட்டாளர்களும், சூழ்நிலையை காலத்தை கவனிக்கத் தவறிவிடுகிடுகிறார்கள். தங்கள் சிந்தனையைத்தான் இந்த உலகம் பிரதிபலிக்க வேண்டுமென்று நினைத்தல் எந்தவகையிலும் சாத்தியப்படாத ஒன்று. அனைவரும் ஒரே நிலையில் நின்றால் பூமி சுழலாது. வேறுபட்டும், முரண்பட்டும், விலத்தி விலத்தி நிப்பதால்தான் பூமி சுழன்று கொண்டிருக்கிறது.

தத்துவார்த்தமும், தன்னிச்சாவாதமும் தனித்தியங்கி எதையும் சாதிக்க முடியாது. தத்துவங்கள் யதார்த்தத்திற்கு வெளியே நின்று மலடாகிப் போகாமல் யதார்த்த சூழலுக்குள் இறங்கி வரவேண்டும் இன்றைய 'யதார்த்தம்' என்பது மானிடனின் உள்ளடக்கத்தைச் சிதைத்து மனிதத்தை பிய்த்து ஆக்கிரமிப்புக்கும் அழித்தலுக்குமான சூழ்நிலைதான். இந்த நடைமுறை சூழலுக்குள் தத்துவங்களைக் கொணர்ந்தால் அவிந்து விடுமே என்று பயந்து தூரத்தே தள்ளி வைக்கப்படுகின்றன. தத்துவங்கள் உயரத்தே நின்று கைதட்டிக் கூப்பிட்டால் நடைமுறை இயக்கம் மேலேறி வராது. தத்துவங்கள் யதார்த்தத்திற்கு இறங்கி வந்து நடைமுறை இயக்கத்தை கைப்பிடித்து கூட்டிச் செல்ல வேண்டும். சிதைவுண்டு போன மனிதகுலத்தின் வாழ்வுத் துண்டங்களை கூட்டிச் சேர்த்து உயிருட்டி வாழ்வாக்க முயல வேண்டுமென வேண்டிக் கொள்கிறேன்.

நன்றி

சு. கருணாநிதி
ப.மா.சங்கம் — பிரான்ஸ் கிளை




படிப்பகம்

www.padippakam.com



# எமது தற்போதைய சூழ்நிலை



1991ம் ஆண்டுக்கு முன்புள்ள நிலமைக்கு முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையிலேயே எமது பிரதேசமும் கல்லூரிச் சூழலும் இருக்கிறது.

பாடசாலைக்கான பிரதான போக்குவரத்துப் பாதை போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டு இருத்தல்.

பாடசாலைக்கு வருகைதரும் மாணவர்கள் பலர் பல்வேறு கஸ்ரமான குடும்ப சூழ்நிலைகளில் இருந்துவருதல்.

வெளியாட்கள் எவரும் சுதந்திரமாக வருகைதரமுடியாதநிலை.
வேலணையிலுள்ள ஏனையபாடசாலைகளிலிருந்து தரம் 6க்கு அப்பாடசாலை அதிபர்கள்மாணவர்களை எமது கல்லூரிக்கு அனுப்ப மறுத்தல்.
மாலை5.00 மணிக்குப் பிறகு பாடசாலைச் சூழல் மனிதநடமாற்றமற்ற பகுதியாக மாறிவிடும்.

**இத்தகைய ஒரு சூழ்லிலேயே நாம் கடமையாற்றுகிறோம்.**

1. மாணவர்களின் கல்வி முன்னேற்றமே பாடசாலையின் பிரதான இலக்காக இருக்கவேண்டுமென்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. கல்வியின் விளைவுகள் வெளித்தெரிவதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

2. மாணவர் முன்னேற்றத்திற்குச் சில உதாரணங்கள்

- 2003இல் 3மாணவிகள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டு தற்போது அங்கு கற்றுக்கொண்டிருக்கிறார்கள். தம்பு ஞாபகர்த்த புலமைப்பரிசில் பணம் மாதாந்தம் வழங்கப்பட்டுவருகிறது.

- எமது கல்லூரியிற் கற்ற ஏறக்குறைய 15 மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவர்களாகக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். 2004ல் ஒரு மாணவி பல்கலைக்கழகம் செல்ல உள்ளார். 3 மாணவர்கள் கல்விக் கல்லூரிக்குச் சென்றுள்ளார்கள்.

- எமது பிரதேசத்தில் தற்போது பிரதேச செயலகம், பிரதேசசபை, ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றில் எமது பாடசாலை மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெற்று வேலை செய்கிறார்கள்.

- தீவக் கல்வி வலயத்தில் அனைத்து விளையாட்டுச் செயற்பாடுகளிலும் எமது கல்லூரி முதன்மை வகிக்கிறது. உதைபந்து, வலைப்பந்து, உடற்பயிற்சி ஆகிய துறைகளில் எமது கல்லூரியே முதன்மை இடத்தை வகிக்கிறது. மாவட்ட, மகாண நிலைகளுக்கும் எமது மாணவர்கள் சென்றுள்ளார்கள்.

- 2003 ஆம் ஆண்டு எமது பாடசாலை மாணவன் தீ.துஜந்தன் (தரம் 11)இலங்கைப் புத்தாக்குனர் கழகம் மாவட்ட மட்டத்தில் நடத்திய புத்தாக்குனர் போட்டியில் இளநீரில் இருந்த மின்கலமொன்றைத் தயாரித்து காட்சிப்படுத்தியமைக்கு மாவட்ட மட்டத்தில் தங்கப்பதக்கத்தையும் 5000 ருபா பணப்பரிசையும் பெற்றுள்ளான்.

- 2003 க.பொ.த (சா.த) பரீட்சையில்எமது கல்லூரி மாணவன் 7 ஏ 1சி 2 எஸ் எடுத்து உயர் பெறுபேற்றைப் பெற்றுள்ளான். இது யாழ்நகர் பாடசாலையோடு ஒப்பிடக்கூடியது.



படிப்பகம்

www.padippakam.com



4. 145000/- பெறுமதியான மின்பிறபாக்கி இயந்திரம் ஒன்றை கொள்ளவனவு செய்து பயன்பாட்டுக்கு வழங்கியுள்ளது.
5. 200000/- பெறுமதியான ஆட்டோ வாகனமொன்று இந்து கலாச்சார அமைச்சரின் உதவியுடன் பாடசாலைக்குப் பெறப்பட்டுள்ளது.
6. 100000/- பெறுமதியான பான்ட் வாத்தியக்கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
7. 500000/- பெறுமதியான மாணவர்களுக்கான தளபாடங்கள், போரூட் நிறுவன உதவியுடன் பாடசாலைக்குப் பெறப்பட்டுள்ளது.
8. 400000/- பெறுமதியில் கணணிக்கற்கை நெறிக்குரிய கட்டங்கள் ஒப்பந்த அடிப்படையில் செயற்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளது.

மேற்கூறப்பட்ட செயற்பாடுகளுடன் ஆசிரியர் தினம், பரிசளிப்பு விழா, பாடசாலை இல்லவிளையாட்டுப்போட்டி போன்ற செயற்பாடுகளில் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் தன்னை வலுவாக இணைத்துக்கொண்டுள்ளது.

## தாய்ச்சங்கத்திடமிருந்து....

**தலைவர் செயலாளர்**
**வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம்**
**பிரான்ஸ்.**

தாங்கள் எழுதிய கடிதங்கள் கிடைத்தன. விபரமான, விளக்கமான விடயங்களை எழுத விரும்புவதால் உடனடியாக உங்களுக்குக் கடிதங்கள் எழுத முடியாமைக்கு சங்கத்திடம் மன்னிப்புக்கோருகிறோம். உண்மையில் எமது பழைய மாணவர் சங்க செயலாளர், பொருளாளர் ஆகியோர் முழுநேரமாக வேலைசெய்ய முடியாதவர்கள் இதனால் கடிதமெழுவதில் சில தாமதங்கள் ஏற்படுகின்றன. அதிபருடைய அலுவலகத்தில் எழுதுவினைஞரோ அல்லது தட்டெழுத்தாளரோ எவரும் கடமையாற்றுவதில்லை. அலுவலக உதவிக்கென ஒரு பியோன் கூட அரசாங்கத்தால் நியமிக்கப்படவில்லை. இதைவிட முன்னர் இரண்டு காவலாளிகள் இருந்த எமது கல்லூரியில் ஒரு காவலாளி கூட அரசாங்கத்தால் நியமிக்கப்படவில்லை.

பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் நீண்டகாலமாக எமது கல்லூரியின் அபிவிருத்திக்காகக் உழைத்து வருவதை எல்லோரும் அறிவார்கள். உங்கள் சங்க உறுப்பினர்கள் தொலைபேசியில் தொடர்புகொள்வதால் பலவிடயங்களை நேரில் கலந்துரையாடுகின்றோம். உங்கள் சங்க உறுப்பினர்கள் திரு.நா.மகேந்திரன், திரு.எம்.கேதீஸ்வரன், திரு.கே.வாசுதேவன் ஆகியோர் கல்லூரிக்கு நேரில் வருகைதந்து கல்லூரியின் நிலைபற்றி அறிந்து வந்துள்ளார்கள். அவர்கள் விபரமாக எல்லாவற்றையும் கூறியிருப்பார்கள். என எண்ணுகின்றோம். பல காட்சிகளையும் அவர்கள் புகைப்படங்களாகவும் எடுத்துவந்தார்கள். கல்லூரிமீது நீங்கள் அனைவரும் வைத்துள்ள பற்றையும், பாசத்தையும் கண்டுநாம் பெருமையடைகிறோம். நீங்கள் கற்ற கல்லூரி அன்னையின் உயர்வுக்காக தன்னலம் கருதாமல் பலர் தொடர்ந்தும் உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். பழையமாணவர்கள் பலரின் உழைப்பினால்த்தான் இன்று எமது கல்லூரி தலை நிமிரத்தொடங்கியுள்ளது. எங்கள் கல்லூரியின் முன்னைய பொற்காலம் மீண்டும் ஒரு முறை உருவாகவேண்டும் என்பதற்காக பலர் சக்திக்கு மீறிய வகையில் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்புரிந்துகொள்ள முடியாதவர்கள் சிலர். இதையிட்டு எங்களில் பலர் மனம் வருந்துகிறோம்.

நூலக அபிவிருத்திக்காக தங்கள் சங்கம் அனுப்பிய பணம் ரூபா 500000 தங்கள் கோரிக்கையின் பெயரில் அதிபர்,பழையமாணவர் சங்க பொருளாளர் திரு.சி.மகாலிங்கம் பிரதி அதிபர் திரு.சு.சிவானந்தன் ஆகியோர் கல்லூரி கடிதத் தலைப்பில் பணம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்பம் இட்டு வழங்கிய பின்னரே பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது. இப்பணம் பழைய மாணவர் சங்க வங்கிக்கணக்கு இலக்கம் இலங்கை வங்கி ஊர்காவற்றுறை 7037இல் 26-092003இல் வைப்புச்செய்யப்பட்டது. எமது கடிதத்ததை தாங்கள் உங்கள் சங்கத்திற்கு உடனே அனுப்புவதாக கூறியதாலேதான் நாங்கள் அதன் பிரதியை உங்களுக்கு அனுப்பவில்லை.
இந்த பணத்தில் பின்வரும் செலவுகள் நடைபெற்றன-

1 தளபாடங்கள், அலுமாரிகள் கொள்வனவு சுமார் 100000/=
2 நூல்கள் கொள்ளவனவு 80000/=



படிப்பகம்

www.padippakam.com



3. ரூபா 2000/= மாத வேதனத்தில் நூலகர் ஒருவர் முழுநேரமாக நியமிக்கப்படடுள்ளார்.
4. நூல்களை மாணவர்களுக்கு ஆசிரியர்களுக்கும் இரவல் கொடுத்து வாங்குவதற்கேற்ற வகையில் அட்டைகள், காட், லேபல்கள் அச்சிடப்பட்டு நூலகசெயற்பாடு துரிதமாக நடைபெறுகிறது
5. நூலகக் கட்டிட புனரமைப்புக்காக பெயின்ற வகைகள் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ரூபா 30000/=
   மேலும் மண்டபத்திற்காக சீற் அடிக்க வேண்டியுள்ளது, மின்னிணைப்பு வேலைகள் செய்யவேண்டியுள்ளது. நூலக மேசைகள் கொள்வனவு செய்யப்படவேண்டியுள்ளன. இவற்றை செய்வதா என்பதை நீங்கள்தான் எமக்கு சொல்லவேண்டும்.
2. ஆசிரியர்களும், உயர்தர மாணவர்களுக்கும் வழங்கவென நீங்கள் அனுப்பிய ஆங்கில அகராதி, ஆங்கில இலக்கணப் புத்தகங்கள் 30.03.2004 கல்லூரியில் வைபவரீதியாக வழங்கப்பட்டது. இதில் முன்னாள் அதிபர் திரு.கு.கணேசலிங்கம் அவர்களும், திரு.சு.கலாதரன் அவர்களும் கலந்துகொண்டு நூல்களை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கிச் சிறப்பித்தன. விபரங்கள் இதற்கு முன்னைய கடிதத்தில் உங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

3. காணிக்கொள்வனவுக்கென உங்கள் சங்கத்தின் நடவடிக்கைகளுக்கேற்ப லண்டன் கிளையால் அனுப்பிவைக்கப்பட்ட பணம் ரூபா 300000 கொழும்பு பழைய மாணவர் சங்கத்திடம் உள்ளது. காணியை அளந்து எடுப்பதில் பாதுகாப்புப்படையினரின் சில நெருக்கடிகளினால் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. விரைவில் இது தீர்க்கபட்டு உறுதி எழுதப்படும். பணம் கொழும்பில் வழங்கப்பட்ட வேண்டியுள்ளதால் பணம் கொழும்பில் உள்ளது. (இக்காணி திரு. ஆ. பொ. பரராசசிங்கம் குடும்பத்தினரால் வாங்கி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.)

4. கணணிக் கல்வியை வழங்குதல்

மேற்படி விடயம் தொடர்பாக தாங்கள் எமக்கு உதவுவதற்கு தயாராக இருக்கும் செய்தி எங்கள் எல்லோருக்கும் மகிழ்சியைத் தருகிறது. தற்போது எமது கல்லூரியில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 10 கணணிகள் அமையுள்ளது. இதற்கு இன்றநெற் வசதிகளும் கிடைக்கவுள்ளது. இதற்குரிய அறை வசதிகள் வேலைகள் மின்னிணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இந்த அறைக்கு இணைந்ததாக இன்னொரு அறையினையும் நாம் புனரமைப்பு செய்து வைத்துள்ளளோம். இதில் மேலும் கணணிகளை பொருத்த முடியும்.

மேற்படி திட்டத்தின் கீழ் எமது கல்லூரி ஆசிரியர்கள் 15 பேருக்கு 15 நாட்கள் பயிற்சி வழங்கியுள்ளது. நீங்கள் வழங்கவிருக்கும் கணணிகளையும் கொண்டு 30 மாணவர்களுக்கு ஒரு நேரத்தில் கணணிக்கல்வியை வழங்கமுடியும். இது தொடர்பாக நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை எமக்கு விபரமாக அறியத்தரவும். இது தொடர்பாக இலண்டன் கிளைக்கும் நாம் கடிதங்களை எழுதுகிறோம் இலண்டனில் இருந்து இங்கு பழைய மாணவர்கள் பிரான்ஸ் கிளையின் முயற்சி கண்டு உங்கள் அனைவரையும் பாராட்டிச் சென்றுள்ளார்கள். பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் எமது கல்லூரியைப் பொறுத்து சாதித்தவை நிறையவே உண்டு. 1991இல் இடம் பெயர்ந்த காலத்தில் இருந்து இன்றுவரை கல்லூரியைத் தக்க வைப்பதற்கும் பிரான்ஸ் பழையமாணவர் சங்கம் நிறையவே உதவியுள்ளது. கல்லூரியின் செயற்பாடுகளில் அர்பணிப்புடன் உழைத்த அத்தனைபேருக்கும் இது நன்கு புரியும்.

கனாடா- பாடசாலைச் சுற்றுமதில் வேலைகள் தம்பு ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம்.

லண்டன்- பிரதான மண்டப மின்னிணைப்பு, குழாய்நீர் வசதி வழங்கல், கணனி உதவிகள்.

அவுஸ்ரேலியா- புலமைப்பரிசில் வசதிகள் (தரம் 6-13) நூல்கள் வழங்கல்.

பிரான்ஸ்- விளையாட்டு மைதானப் புனரமைப்பு, நூலக அபிவிருத்தி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நூல்கள் வழங்கல், கணனி கொள்வனவு.

கொழும்பு- சுற்றுமதில் வேலைகள், விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், மாணவர்களைக் கொழும்புக்கு அழைத்து முத்தமிழ் விழாவில் கலந்து கலைநிகழ்சிகள் செய்ய



படிப்பகம்

www.padippakam.com



உதவியமை, மாணவர்களுக்கான சுற்றுலா ஒழுங்குகள்.

தாய்சங்க நிருவாக சபைக்கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் ஒழுங்காக நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதாந்தக் கூட்டத்திலும் கணக்கறிக்கை பொருளாளரால் சமர்ப்பிக்கப்படுகிறது. வலயக்கல்வித்திணைக்களமும் பழைய மாணவர் சங்கக்கணக்கு விபரங்களை மேற்பார்வை செய்கிறது. சட்ட தீர்மானம் இன்றி எந்தச் செயற்பாடுக்கும் தனிமனித தீர்மானங்களின் அடிப்படையில் பணம் செலவழிக்கப்படுவதில்லை.
எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (பெற்றோர் ஆசிரியர் சங்கம்) வலுவிழந்து கிடக்கவில்லை. ஒவ்வொருவருடமும் பொதுக்கூட்டமும் நடைபெற்று புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்படுகிறது. பா.அ.சங்கம் பல்வேறு செயற்பாடுகளில்த் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

1. மில்லியன் பெறுமதியான றான் நிதி தொடர்பான ஒப்பந்த வேலையை பொறுப்பேற்று பிரதான மண்டப வேலைகளை பூர்த்தி செய்துள்ளது.
2. 600000 செலவில் ஜி.ரி.சற் உதவித்திட்டத்தின் கீழ் புதிய இரண்டு மலசலகூடத் தொகுதியை அமைத்துள்ளது.
3. 90000 பெறுமதியான ஓடியோ-வீடியோ அலகு ஒன்று உலக வங்கி உதவியுடன் ஒப்பந்த வேலையை செய்துமுடித்து அதற்குரிய கருவிகளும் பெறப்பட்டு அது மாணவர் பயன்பாட்டுக்கு விடப்பட்டுள்ளது.


5. எமது கல்லூரியில் 15 வருடங்களுக்கு மேல் பாவனையில் இருந்த றோணியோ இயந்திரம் பயன்படுத்த முடியாத அளவுக்கு பழுதடைத்து விட்டது. புதிதாக ஒன்றை கொள்வனவு செய்யவேண்டியுள்ளது. அத்துடன் போட்டோப்பிரதிபண்ணும் இயந்திரம் ஒன்று அவசியம் தேவையாக உள்ளது. இவை ஒவ்வொன்றும் சுமார் ரூபா 130000 பெறுமதி வாய்ந்தவை. இவற்றைக் கொள்வனவு செய்வதற்கு தங்கள் சங்கத்தால் ஏதாவது வழிவகைகளைக் காணமுடியுமா என்பதையும் தங்களிடம் கேட்க விரும்புகிறோம்.

தங்கள் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட தொடர்பு ஊழியர் நியமனம் தொடர்பாக பழைய மாணவர் சங்க நிர்வாக சபைக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பாக பழைய மாணவர் சங்க செயலாளர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அத்தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வார். விரைவில் இது நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது. தொடர்பு ஊழியர் நியமனம் தொடர்பாக செயலாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் நியமனத்தைச் செய்வதென நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**பொ. அருணகிரிநாதன்**
**தலைவர்**

**சி. த. மகாலிங்கம்**
**பொருளாளர்**

**க. நவரட்ணம்**
**செயலாளர்**





படிப்பகம்

www.padippakam.com



# வேரை மறந்த விழுதுகள்

இன்றைய அவசர உலகத்தில் அறிவுத்தேடல் என்பது பண்பட்ட பலநூறு வருட வரலாறு கொண்ட தமிழ்ச்சமூகம் போன்ற மக்கள் கூட்டத்திற்கு, அத்தகைய பண்பாடு கலாசார விழுமியங்களையும் முக்கியமாக ஒழுக்க சீலத்தையும் பேணிக்காத்தல் என்ற பெரும் பணியோடு இயற்றுதல் கேள்விக்குறியாக மாறிக் கொண்டிருப்பது கவலை தருகிறது.
இன்று தமிழ்சமூகம் அதன் உதரமாகிய தமிழ் நாட்டிலேயே தன் அடையாளங்களை இழந்து விடுகின்ற அபாயத்தை நோக்கியபடி தனக்கொவ்வாத மேனாட்டுச் சிதறல்களைப் பொறுக்குவதில் பேரார்வம் கொண்டுழலுகிறது. பண்பாடு என்பது நாம் விழித்தெழுந்த வினாடி முதல் படுக்கைக்குப் போகும் வரை பிறிதொருவருக்கு எமது மக்கள் கூட்டத்தின் குண இயல்புகளை பிரத்தியட்சப்படுத்தும் ஒரு கருவியாகும். ஆயினம் படுக்கையின் போது கூட, பண்பாடு காத்து வாழ வேண்டுமென்ற வரையறைகளைக் கொண்டதாக எமது சமூகம் இருந்து வருகிறது.

ஈழத்திருநாட்டின் வாழும் தமிழ்ச் சமூகம் உன்னதமான பண்பாட்டுக் கோலங்களைப் பேணிபாதுகாப்பதுடன் ஓர் அறிவுசால் மக்கள் கூட்டமாக உலகம் மெச்சும் நிலையிருப்பினும், காலச்சகடை கழன்றவிதம் அச் சமூகத்தை அதன் ஆணிவேரை அசைத்து விட்டது. போரோடும் பிணியோடும் திகில் நிறைந்த வாழ்வில் சிக்கித் திணறிய அவர்களில் ஒரு தொகுதியினர், அமெரிக்கா, அவுஸ்திரேலியா,ஐரோப்பிய, நாடுகளிலும் வேறு சிலர் காடுகளிலும்,மற்றோர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்து தற்போது தம் தாய் வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஏதோ ஒரு வகையில் தாய் நிலம் திரும்வோர் தாம் தஞ்சம் புகுந்திருந்த தற்காலிய முகாம்களின் கலாசாரப் படிவுகளைத் தாங்கி இருப்பது ஒன்றும் வியப்பில்லைத்தான்.ஆயினும், அத்தகைய அன்னிய பண்பாடுட்க் கலாசாரச் செல்வாக்கானது எமது தனித்தவமான பண்பாட்டுச் செம்மைகுறைந்த எமது எதிர்கால சந்ததி தம் சுயத்தை இழந்த நாடோடியாக் கலாசாரத்திற்கு மாறும் அபாயத்தை வரிந்திழுத்துக் கொண்டிருப்பது தான் வேதனைக்குரியதாகிறது.

புகலிடங்கள் எம்மவர்க்கும் புகட்டிய பாடங்கள் எமது சுயத்தை விழுங்கி வெளியிட்ட ஏப்பங்களாக மாறும் கொடுமை கண்டு வேதனைப் படத்தான் முடியும். தமிழ் சமூகம் மட்டுமல்ல உலகில் பாரசீகர்கள், வங்காளிகள், சீனர்கள், தாய்லாந்துகாரர், ஆபிரிக்கா, பாலஸ்தீனர், சீக்கியர் போன்றோரும் வேறு நாடுகளில் புகலிடம் தேடி வாழகின்றனர். ஆயினும் எம்மோடு ஒப்பிடுகையில் தமது சொந்தப் பண்பாட்டுச் சுவடுகளை துடைத்துவிட்டுத் திரியும் இனங்கள் மிகக் குறைவெனின் மிகையல்ல.

ஈழத்து தமிழர் கல்வியினைத் தேடும் அதேயளவு பிரயாசத்தோடு செல்வத்தையும் தேடும் சுபாவமுடையவர்கள் 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்னும் வாக்கிற்கிணங்க தம் பிள்ளைகளின் கல்விக்காக அவர் தம் உடமைகளை விற்றுழன்ற பெற்றோர் ஏராளம். அத்தகைய ஓர் சமூகம் இன்று தம் கல்வித் துறையில் காட்டும் நாட்டம் கவலைக்குரியதான போக்கைக் காட்டுகின்றது. பெருபான்மையான குடும்பங்களின் வெளிநாட்டுத் தொடர்பு ஓர் எதிர்காலம் அறியாத மாயையைத் தோற்றுவிக்க கல்வியை இரண்டாம் தரமாக சந்திக்கின்ற அவலநிலை மேலோங்கி நிற்கிறது. இன்று உயர் கல்வியை நாடும் மாணவர் எண்ணிக்கையை விட கல்வியை இடைநிறுத்தி வெளிநாடு செல்லமுயல்வோரே அதிகமாக உள்ளது.
சுமார் 20 வருடங்களின் முன்னர் இலங்கைத் தீவின் அரச நிர்வாகத்தின் அதி உயர் பதவிகளைப் பெரும்பான்மையாக நிரம்பியிருந்த தமிழ்சமூகம் இன்று தடைப்பட்டு கிடப்பதற்கு இன்நாட்டின் இன பேத அரசியல் ஓர் முதற் காரணமெனினும் இன்று வெளிநாட்டு மாயை ஓர் விலக்கப்பட முடியாத துணைக் காரணமாகி விட்டது. முனாமைத்துவம் வங்கி, வைத்தியம், பொறியல் போன்ற துறைகளில் கொடி கட்டிப்பற்றத நாம் இன்று குறுக்கு வழிப்பயணத் தேடலுக்கு முன்னுரிமை கொடுத்து அலைகின்றோம்.

உலகில் யுத்ததால் அழிந்த கொரியா, அணுகுண்டால் அழிந்த யப்பான் முதலிய நாடுகள் எம்மைப்போல் அனுபவத்தைக் கொண்டவை தாம் ஆயினும் உலகின் எந்த மூலையிலும் கொரியன் கொரியானாகவும் யப்பானியன் யப்பானியனாகவும் பண்பாடு காத்து வாழ்வதைக் காணலாம். தங்கள் நாடுகள் சிதைந்து போனாலும் அவற்றின் ஆணிவேர் அறுந்துபோயும் கூடத் தம் விழுதுகளை பத்திரப்படுத்தி வேர்விட்டு விருட்சமாகி நிற்பது கண்டு உலகம் வியக்கிறது. அவற்றின் அதிசயம் தான் என்ன? வேறொன்றுமில்லை அவர் தம்



படிப்பகம்

www.padippakam.com



பண்பாட்டையும் மொழியையும் கண்போல் போற்றினர். தாம் எம்போல் அலைந்து திரிந்த காலங்களில் எல்லாம் பற்றுதியோடு தம் பண்பாட்டை, மொழியை செம்மைப்படுத்திக் காத்தார்கள். ஆன்மீகத்தை ஆழமாக நேசித்தார்கள்.

ஆனால் நாமோ அள்ளித் தெளிந்த அவசரக் கோலமாக எதிலும் பூரணத்துவத்தை இழந்துவிடும் அபாய விளிம்பில் நிற்கிறோம். புலம் பெயர்ந்தவர்கள் தம் பிள்ளைகளுக்கு தமிழைக் கற்பிப்பது ஓர் தகுதியீனம் எனக் கருதுகின்ற மனோபாவத்தைக் கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகளுக்கு பெயர் வைக்கும் பொழுது கூட தமிழர் என்பதை மறந்து விடுகிறார்கள். துரதிஷ்டவசமாக எமது சமூகம் தனது அடுத்த சந்ததியின் ஒரு தொகுதியை வேற்று நாட்டில் தோற்றுவித்தாலும் அதற்குத் தன் சுயத்தை காட்ட வேண்டியது நம் கடமையல்லவா? இன்று ஐரோப்பிய சமூகத்தில் இனத்துவேசம் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் நம்மவர்கள் ஒரு யுத்த கால ஜப்பானியன் போல நமது மொழி, கலாசாரத்தை சுமந்து எமது சந்ததிக்கும் ஊட்டல் வேண்டும். இன்றேல் உலகத்தின் இன்று விலாசமிழந்த நிலையில் அலையும் ஜிப்பிசகள் போல எமது அடுத்த சந்ததி அலையும் நிலை ஏற்படும் என்பதே எனது எச்சரிக்கை.

ஒரு காலத்தில் கிறிஸ்தவர்களால் விரட்டப்பட்ட யூதர்கள் ஜரோப்பிய நாடுகளில் அலையவிடப்பட்டார்கள். ஆயினும் புத்திக் கூர்மையும் பொறுமையும் மிக்க அந்த இனம் தாம் இழந்த பூமியை மீண்டும் விலை கொடுத்து வாங்கும் அளவிற்கு வளர்ந்தார்கள். செல்வம், கல்வி இவற்றுடன் சாதுரியம் சாதிக்கும் ஓர்மம் முதலியவற்றையும் தம் இரத்தத்தில் கொண்டே உலகில் மீண்டும் ஓர் சிறந்த வல்லவராக மாறுமளவிற்கு உயர்ந்தார்கள்.
இன்று அமெரிக்கா நாசா நிறுவனத்தில் யூதர்களின் பங்கும் உலக தொழிநுட்பத்தில் வல்லரசின் செல்லப்பிள்ளையாக அதன் அந்தஸ்தும் உலகமறிந்த ரகசியமே!

தமிழ்ச் சமூகம் உலகிற்கு அறிமுகமாகிறது அவர் தம் செம்மை மொழியும் பண்பாடும் தீரமும் மூலமாகவே, எனினும் இந்த நிலை இன்று தலை கீழா மாறி இருப்பது வருத்தத்தக்கது . இந்த அறிவுத் தேடலுக்கு கொடுத்த இடத்தைப் பெற்றோர் ஆக்கத்தைத் தேடுதற்கே முதன்மைபடுத்துகின்றார்கள். விடையறிய முடியாத பகட்டுக்கும் பதவிக்கும் ஆட்பட்டு தம்பிள்ளைகளுக்கு புகலிட கலாச்சாரத்தை புகட்டுவதிலேயே ஆர்வம் காட்டுகின்றார். கூட்டு குடும்ப வாழ்க்கைமுறை, முதியோரை கனம் பண்ணுதல் அயலவரை நேசித்தல், இறைதேடல் இவை யாவுமே மெல்ல மெல்ல கருகிப் போதல் வேதனைக்குரியதாகும். மிக வேகமாக முன்னேறிய நாடுகள் என்ற மகுடத்துடன் வெறும் பொருளாதார வளர்ச்சியை காட்டிக் கொண்டு தம் கலாசாரங்களையே தொலைத்து வாழும் ஐரோப்பிய சமூகத்திடம் நாம் கற்க என்னதான் இருக்கிறதோ எனக்கு தெரியவில்லை. தனி மனித உரிமை என்ற போர்வையில் இயற்கைக்கு ஒவ்வாத எமது செம்மை கலாச்சாரத்திற்கு புறம்பான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்டிருக்கும் அவர்களின் பின்னால் சென்ற எம் சுமயத்தை இழப்பதை விட அவரோடு நூற்றாண்டுகள் வாழுந்து தம்மை இழக்காமல் தலைநிமிர்ந்து யூதர்களாக நாமும் திகழ வேண்டும்.

மனித உரிமை என்பது ஓர் மகத்தான எவராலும் எதிர்பாக்கும் ஓர் தேவைப்பாடாகும். ஆயினும் தனி மனித உரிமை என்பது வேறொரு மனிதனின் நியாயமான வாழ்விற்கு குந்தகமானதாக அமையாதிருத்தல் வேண்டும். இந்த கோட்பாடுகளுக்க உட்பட்டு இவற்றை அழத்திக் கூறகின்ற தமிழ் நூல்களும் இலக்கியங்களும் இன்றைய சந்ததியால் அறியப்படாமல் கிடக்கிறது. உலகம் போற்றும் திருக்குறள் முதலிய அறிவு நூல்கள் எமது வாழ்வில் கோலங்களில் எழுதப்படாத சட்டங்கள். இவற்றின் அறிமுகமும் ஆழ்ந்த ஈடுபாடும் எமது வாழ்வில் ஓர் மறைமூக உந்துகையை உள்ளுணர்வில் செலுத்தியதன் விளைவாகத்தான் நாம் பண்பாடு பற்றி கவலைப்பட்டுகொண்டிருக்கிறோம். இவை பற்றிய அறிவின்மையால் எமது இளம் சமூகம் வெளிநாடுகளில் பண்பாடு பிறழ்ந்த நிலையில் ஓர் செயற்கையான உறவில் வாழும் துர்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

இன்றைய புகலிடம் பெற்றோர் தம் வழிதவறும் பிள்ளைகளுக்கு வழிகாட்ட முடியாத பரிதாபம் அவர்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி நிற்கிறது. பொருள் தேடலிலேயே காலம் கரைந்து கொண்டிருப்பதால் இறை தேடலை மறந்து மன அமைதி குன்றி மதுவிலும் மற்றைய சமூகத்ததுக்கு ஒவ்வாத நடவடிக்கைகளிலும் ஈடுபடும் துர்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. மேலும் சிலநாடுகிளல் இத்தகைய பலவீனத்தை பயன்படுத்துவோர் கோவில்கள் அமைத்து அவற்றை வியாபாரத்தலம் போல மாற்றி அதனையும் குறுகிய பொருள் தேடலுக்கு பயன்படுத்தும் நிலமையும் காணக்கூடியதாகவுள்ளது.

இத்தகைய நிலமையானது எமது இளம் சமூதாயத்தின் மத்தியில் ஆன்மீகத்தின் பால் வெறுப்பைத் தூண்டுவது



படிப்பகம்

www.padippakam.com



வியப்பில்லை. ஆன்மீகம் சார்ந்த நூல்கள் எதனையும் கல்லாது மதத்தின் உட்பொருளையோ தெய்வீகம் பற்றிய உண்மைகளையோ உணராது வெறுமனே கோவில் உண்டியல்களை நிரப்புவதால் பயன் ஏதுவுமில்லை. எனவே 'இரை தேடும் வேளையில் இறையையும் தேடு' வதற்குமுனைய வேண்டும். எமது மதம் பற்றிய உட்கருத்தை தேடல் வேண்டும். அப்போது தான் உண்மைகளை உணர முடியும். எல்வாவற்றுக்கும் மேலாக மனித நேயம் பிறக்கும் அந்தப் பூசை அம்மனுக்கு உகந்தது. இந்த படையல் ஈசனுக்கு உகந்தது என்று காரண காரியத்தை அறியமால் எமது பணத்தினதும் பகட்டினதும் அழிவினைக் காட்டும் கருவியாகச் சமயச் சடங்குகளை மாற்றுவதை விடுத்து மந்திரங்கள் கிரிகைகளுக்கப்பால் எமது சொல்லால் செயலால் இறைவனைத் தேடுதல் வேண்டும். இதனையே விபுலானந்த அடிகளாரும் 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்று பகர்ந்தார். எனவே துாய இதயமும் நேயமான பார்வையும் கனிவான வார்த்தையும் நேர்மையான செயலையும் இறைவனுக்குச் சமர்ப்பித்த அறிவுத் தேடலை வளர்க்கத் திடசங்கற்பம் பூணல் வேண்டும் ஒரு சாரார் புகலிடங்களில் எமது கலாசார விழுமியங்களை காத்து வருவதாகக் கூறிக் கொண்டாலும் அவர்களின் உண்மையான உளமார்ந்த போக்ககுகள் கலாசாரக் காப்பு என்பதன் பின்கலத்தில் பணம் தேடும் சேர்க்கும் நோக்கே வெளித் தெரிகிறது இருப்பினும் தமிழ் பண்பாட்டு விழுமியங்கள் மேல் பற்று உறுதி கொண்டு செய்யும் பிரயத்தனங்கள் பாராட்டுக்குரியனவே.

தமிழ் மொழியில் இல்லாத தொன்றில்லை என்ற வெறும் புகழுரை சொல்வதை விடுத்து தமிழில் இருப்பவற்றைக் கற்றல் வேண்டும். காத்தல் வேண்டும். .இல்லாதவற்றை கொணரல் வேண்டும். தமிழ் இதமான ஆழமான மொழி காலத்துக்கு காலம் எமது இன்றைய சமூகம் போல் இடையிடையே முன்னரும் இருந்திருப்பர் போலும். அதனாற்தான் அரிய தமிழ் பொக்கிஷங்கள் பல அழிந்து போயின.

தமிழ் மொழியில் விஞ்ஞான உண்மைகள் தொடக்கம் மெஞ்ஞான எடுத்துக் காட்டுக்களைக் காணலாம். 'அண்டத்துகளில் உண்டைப் பிறக்கம்..' என வரும் வரியானது அணுக்களின் அண்டத்துச் சேர்ககையே உருண்டையான இவ்வுலகப் பிறப்பு என்பதை கூறி நிற்கிறது. இத்தனை நூற்றாண்டுகளுக்கு முன் இத்தனை தெளிவாக இந்த உண்மையை தமிழிலன்றி வெறெங்கும் காண்பதரிது இத்தகைய எம்மொழி உலகச் செம்மொழிகளில் ஒன்று இதை அழியாது காத்தல் கடன்.

இன்று ஆங்கிலம் முதலிய பிறமொழிகள் இன்றியமையாதது என்பது காலத்தின் தேவையாகி விட்டது. இக்கூற்று தன் தாய் மொழியை புறந்தள்ளிவிட்டு தான் பயில வேண்டுமென்று அர்த்தமாகாது. ஒருவர் தன் சுயமொழியல் கற்கின்ற போது கிடைக்கும் கிரகிப்புத் தன்மையும் ஆய்ந்தறியும் ஆற்றலும் பிறமொழி வாயிலாக பயீல்வதைவிட பன்மடங்கு அதிகமென்பது ஆய்வாளர் முடிவு இவற்றுக்கு வெளிப்படை உதாரணங்களாக யப்பான் கொரியா அரேபிய நாடுகளைக் குறிப்பிடலாம். அந்நாடுகளில் சுயமொழிக் கல்வி முறை மட்டுமன்றி நவீன கணணிக்கல்வி கூட ஆங்கிலத்தில் இல்லை. இது அவர்தம் விஞ்ஞான தொழிநுட்ப முன்னேற்றத்திற்கு அடிப்படையெனில் மிகையல்ல.
சிலர் இதனை 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்..' என்ற வாத்தால் மறுத்தல் கூடும் ஆயினும் உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பது உலகம் ஏற்கும் வண்ணம் உன்னதமாக வாழ்தல் என்பதேயன்றி உலகத்தார் செல்லும் அவ்வழியில் எல்லாம் தொடர்தல் எனப் பொருளாகாது என்பதில் தெளிவுறல் வேண்டும்.
எனவே எமது இளம் சமுதாயம் மிகக் குறிப்பாக புலம் பெயர்ந்து வாழுகின்ற ஈழத்தமிழ் சமூகம் எமது இனத்தினதும் சமூக பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாகாப்புதுடன் அதன்பால் பற்றுதி கொண்டு உலகெலாம் தமிழினம் ஓர் உன்னத இனம் என்ற கருத்து மேலோங்க தம் வாழ்வின் ஒவ்வோர் படியிலும் தனித்துவம் பேணுதல் வேண்டும்.

ஒரு சீக்கியர், சீனர், யூதர் போல உலகில் எங்குசென்றாலும் எமது நற்பண்புகளை வளர்த்து வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு உதாரணமாக திகழவேண்டும். தாய் நிலத்து தமிழ் சமூகம் வெறும் பொன்னையும் பொருளையும் மட்டுமல்ல உன்னதமான ஒரு தமிழ் சந்ததியையுமே புகலிடத் தமிழரிடம் பெரிதும் எதிர்பாக்கின்றது.

பழைய மாணவன் A. **சிவபாலசுந்தரன்** B.A.(Hons)
இலங்கை தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
நிதியமைச்சு.
சுருவில், ஊர்காவற்றுறை.



படிப்பகம்

www.padippakam.com



# பெரியோரை மதிப்போம்

நாம் தமிழர்கள் நமக்கென்று ஒரு பண்பாடு இருக்கிறது அதில் பெரியோரை மதித்தலும் ஒன்றாகும். நாம் எமது பெற்றோர் ஆசிரியர்கள் முதியோர் ஆகியோருக்கு மதிப்பு கொடுத்தல் வேண்டும். எம்மிலும் வயது முதிந்தவர்கள் அறிவிற் குறைந்தவர்கள் ஆயினும் அவர்களை மதித்தல் வேண்டும்.

பெரியோர் என்ற நிலையில் முதலிடம் வகிப்பவர் எம் பெற்றோர்களே அவர்கள் எங்கள் நலனுக்காக பாடுபடுபவர்கள் தம் நலன் கருதாது எமக்காகவே வாழ்பவர்கள் எங்கள் வளர்ச்சியையே பெரிதும் விரும்புவாகள் எங்களிடம் அளவு கடந்த அன்பு கொண்டவர்கள் எமக்கு வரும் துன்பம் கண்டு கலங்குபவர்கள். நாம் அவர்கள் மீது அன்பு கொள்வது மட்டுமல்லாமல் அவர்கள் விருப்பப்படி வாழ்வில் முன்னேற வேண்டும். கலை பல கற்றுத் தேற வேண்டும். அவர்களுக்கு விருப்பமில்லாத செயல்களில் நாம் ஈடுபடக்கூடாது. அவாக்ள சொற்கேட்டு நாம் நடத்தல் வேண்டும். அவர்கள் மனம் வருந்தும் செயல்களில் நாம் ஈடுபடக்கூடாது. அவர்கள் சிலவேளை தவறான கருத்தை சொன்னால் கூட அதை நாம் அன்போடு அவர்களுக்கு எடுத்துச் சொன்னால் அவர்கள் எம்வழி வருவார்கள். இத்தகைய உன்னத சிறப்புகளுக்குரியவர்களை நாம் மதித்தல் வேண்டும்.

அடுத்து முதியவர்களை பார்கின்ற போது முதியவர்களோடு நாம் கதைக்கும் போது மனது புண்படும்படி கதைப்பதையும் கை நீட்டிக்கதைப்பதையும் தவிர்க்க வேண்டும். நாம் பிரயாணம் செய்கையில் முதியவர் வந்தால் நம் இருக்கையை விட்டு எழுந்து அவர்களுக்கு இடம் கொடுப்பதும் எமது பண்பாடாகும் அவர்களிடம் நாம் அன்பாக பழகும் போது அவர்களிடம் இருந்து நாம் நிறைய கற்றுக் கொள்ளலாம் என்பதை நாம் உணர வேண்டும்.

அடுத்து ஆசிரியரை நோக்குவோமாயின் எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பார்கள். அந்த வகையில் நாம் பெற்றொர்களுக்கு அடுத்தபடியாக மதிக்க வேண்டியவர்கள் ஆசிரியர்களே அவர்களுக்கு மதிப்பு கொடுத்து நடத்தல் வேண்டும். அப்போது தான் அவர்களிடம் இருந்து கல்வியை பெறுவதும் இலவாகும். அவர்களும் எம் நிலை அறிந்து அன்போடு கல்வி ஊட்டுவார்கள். ஆசிரியர்களும் எமக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருப்பார்கள். அவர்களுக்கு கீழ்ப் பணிந்து எம் வாழ்வை நல்வழிப்படுத்துவோம். எம் புதிய சிந்தனையோடு உயர்வோம்.

நன்றி.

ஆக்கம்

கஸ்துாரி கந்தசாமி (பாரீஸ்)

# வாழ்த்துகிறோம்



## தமிழ்மணி செ. தேவன்

எமது கல்லூரியின் பழைய மாணவனும் ப.மா.சங்க பிரெஞ்சுக்கிளை நிர்வாக உறுப்பினரும் கவிஞருமான செ.தேவன் மூன்று வருடங்களாக தமிழியல் கற்று உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கமும் மலேசிய தமிழ் இலக்கிய கழகமும் இணைந்து நடாத்திய இறுதித் தமிழ்புலவர் பட்டயத்தேர்வில் தேர்ச்சிபெற்று 'தமிழ்மணி' பட்டம் பெறுவதையிட்டு பெருமகிழ்வடைகிறோம்.

இவர் மாணவப்பருவத்திலிருந்தே கவிதையில் மிகுந்த ஈடுபாடுடையவர் ஐரோப்பிய வானொலி தொலைக்காட்சிகளில் கவியரங்கங்கள் பட்டிமன்றங்களுடாக பல நேயர்களின் பாராட்டுகளை பெற்ற நல்ல நாவன்மையாளர்.

மேலும் தமிழிலக்கியத்தின் செழுமையும் ஆளுமையும் மேலோங்கி இலக்கியத்தினுாடான சமூகப்பணி பரவவும். மக்களுக்கான பயன்படு பணிசெய் நாட்கள் இனியும் தொடர வேண்டுமென பேரவாவுடன் வாழ்த்தி நிற்கிறோம்.

**நிர்வாகத்தினர்**
**ப.மா.சங்கம் பிரான்ஸ்**



படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை

# தகுதி



பாலமுருகன் அரசின் தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டினால்தான் பொறியியல் கல்லூரியில் கட்டிடப் பொறியியல் துறையில் (Civil Enginering) இடம் பெற்றவன் ஆனாலும் அவனுக்குள் தான் கீழ் ஜாதியில் பிறந்து விட்டோமே என்ற தாழ்வு மனப்பான்மை காலம் காலமாக இருந்துவரும் குடல்புழு. அவனை அது அறிவு தெரிந்த நாளிலிருந்து அரித்து கொண்டுதானிருக்கின்றது.

அதிபர் அன்று கல்லூரி அலுவலகத்திலிருந்து கையில் ஒரு சுற்றறிக்கை கோப்புடன் வகுப்பறைக்கு வந்தவர், அதனை உராய்வு பற்றி விபரித்துக் கொண்டிருந்த விரிவுரையாளரிடம் ஒப்படைத்தார். அது தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான (scheduled caste) உதவிப்பணம் பெறும் மாணவர் பட்டியல். அதனை அவர் வாங்கிப் படிப்பதற்குள், காற்றில் கருகுகள் ஏற்படுத்தும் சலசலப்பு போன்ற சத்தம் மாணவர் மத்தியில் எழ, அது (please listen this ) என்ற விரிவுரையாளரின் வார்த்தையுடன் அடங்கியது. "please stand up the following S.C. students for scholar ship." " D.ரவிக்குமார், R.ராஜ்மோகன், M. மதிவதனன், S.சுபகணேஷன், B. பாலமுருகன்...This students are insteriscted to get their scholar ship from the college office."'

பத்தோடு பதினொன்றாக எழுந்து நின்ற பாலமுருகனுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது. மற்ற மாணவர்களுக்கு எதுபற்றி தெரியக்கூடாது என்று நினைத்தானோ அதுவே அனைவர் மத்தியிலும் பகிரங்கமானது குறித்து அவனது முகம் கறுத்து நிலம் தாழ்ந்தது. இதெல்லாத்துக்கும் மேலாக கடந்த ஆறுமாத காலமாக பார்வைகளால் பேசி வந்த திவ்யாவின் முகச்சுழிவு இவனுள் பேரிடியாக விழுந்தது. "சீசீ கேவலம் இந்த மூவாயிரத்துக்காக இவ்வளவு கேவலமாக அசிங்கப்பபடடிட்டமே! அரசாங்கத்தை இததெல்லாம் தரச் சொல்லி யாரு அழுதாங்களாம்! நான் கீழ் ஜாதியில் பிறந்தது என் தப்பா? நான் இல்ல, என் பெற்றோர் தப்பா? இல்ல, கடவுள் தப்பா? இந்தக் கடவுள் ஏன் என்னைக் கீழ் ஜாதியில் பிறக்க வைத்தான். மனிதப் பிறப்புகளில் கீழ், மேல் வேறுபாடுகளை ஏற்படுத்தி மனவேதனைப் படுத்துவதில் அவனுக்கு அப்படி என்ன சந்தோசம்? ஆண்டவனின் பாதத்தில் அனைவரும் சமமல்லவா?
அப்படியிருக்ககையில் ஒரு தலைப்படசமாக நடந்து கொள்வதுதான் தெய்வ சித்தாந்தமா? " அவனுக்கு ஆண்டவன் மேல் கோபம் கோபமாக வந்தது.

மன உளைவில் கடவுளைக் கரித்தாலும் பின்பு ஞானம் தெளிந்தவனாய் "கடவுளைக் குறை சொல்லி என்ன பிரியோசனம்? கடவுளா ஜாதி என்ற பெயராலும், மதம் என்ற பெயராலும், இனம் என்ற பெயராலும் பிரிவினையை ஏற்படுத்தினான். எல்லாவற்றையும் மனிதனே ஏற்படுத்தியவன். இனம், மதம், ஜாதி என்று பிரிவினையை ஏற்றபடுத்தியவன், இன்று பிரதேசம்வரை தன் பிரிவினை வாதத்தை முன் வைத்துள்ளான். ஆறறிவு படைத்த மனிதனைத் தவிர மற்ற உயிரினங்கள் எவ்வளவு ஒற்றுமையாக எவ்வித பிரிவினைகளுக்கும் இடமளிக்காமல் வாழ்கின்றன." அவனது கோபம் மனித சமூகத்திடம் திரும்பியது. இருப்பினும் அவனது இன்னொரு அறிவு கடவுளையே சாடியது. "என்னதான் பிரிவினையை மனிதன் ஏற்படுத்தினாலும் ,எல்லாம் தெரிந்த நீ என்னை உயர் ஜாதியில் பிறக்க வைத்திருக்கலாம் தானே? என்று கூற " கூன் குருடு



படிப்பகம்

www.padippakam.com



இல்லாத மனிதப் பிறப்பை உனக்கு அளித்தது கடவுளின் செயல். நீ பிறந்த குலத்தை நீ உயர்ந்தது என நினைத்தால் அது உயர்ந்ததே! தாழ்ந்தது என நினைத்தால் அது தாழ்ந்ததே"
என உண்மை அறிவு தன் தரப்பு வாதங்களை அடுக்கியது. அப்படியானால் கூன் குருடாய் மனிதனைப் பிறக்க வைத்தது அத்தகைய மனிதரை இழிவுபடுத்துதல் கடவுளின் சமதர்மக் கொள்கையா? பிரிவினையைத் தான் மனிதன் ஏற்படுத்தினான், பிறவியிலேயே ஊனமாகப் பிறந்த குழந்தை என்ன தவறு செய்தது? அவனது மற்றொரு அறிவு கடவுளை விடுவதாக இல்லை. இவ்வாறு அவன் ஒரு நடமாடும் ஏகவாதி நீதி மன்றமாகச் செயல்பட்டான். இறுதியாக கல்லூரி முடியும் வேளையில் சகமாணவன் ஒருவன்"பாலா நீ என்னன (S.C)யா?
என்று கேட்டது, எரியும் வீட்டில் எண்ணெய் ஊற்றுவதாய் அமைந்தது அவனுக்கு.
காலப் போக்கில் ஒரு சில வக்கிர குல மேல் ஜாதி விஷயத்தில் பெரிதும் அலட்டிக் கொள்ளாததினால், இவனும் அவர்களுடன் சகஜமாகப் பழகினான். இந்த விஷயத்தில் மற்ற சமுதாயத்தை விட மாணவர் சமுதாயத்தின் மீது அவனுக்கு மிகுந்த மரியாதை ஏற்பட்டது. அதனால் சிறிது காலம் தன் தாழ்வு மனப்பான்மையிலிருந்து விலகி கல்லூரிப் படிப்பை வெற்றிக்கரமாக முடித்தவனுக்கு, தனியார் கன்ஸ்ரக்‌ஷனில் ஆரம்ப கால வேலை கிடைத்தது. அதில் தனது திறமைகளை மேன்மேலும் வளர்த்து சிறந்த கட்டிடக்கலை நிபுணரானான்.

அரசின் தொழில் வாய்ப்பில் தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டினால் பாலமுருகன் அரசாங்கப் பொதுப்பணித் துறையின் நிறைவேற்றுப் பொறியியலாளராக நியமிக்கப்பட்டான். பாலமுருகனுக்கு தன் வாழ்நாள் சாதனையை அடைந்துவிட்டதாக சந்தோசம் மிகுந்திருந்தது. "ச்சீ நான் எந்த ஜாதியில் பிறந்தேன் என்று வெறுத்தனோ அந்த ஜாதியால்தான் இத்தனை பெரிய பதவியை என்னால் அடைய முடிந்திருக்கு. நான் வேறு உயர் ஜாதியில் பிறந்திருந்தால் பொறியாளராகக் கூட ஆகியிருக்க முடியுமா? நம்ம ஜாதி சனத்தில் இவ்வளவு பெரிய பதவியோடு மரியாதையும்தான் கிடைத்திருக்குமா?" அவன் ஆண்டவனை நினைத்து கண்களை மூடினான்.

அரசாங்கத்தினால் அவனுக்கு வீடு, கார் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் புதிய வீடு அழகிய கட்டமைப்புகளுடன் விலாசமாகவே இருந்தது. புது வீட்டிற்கு குடிவந்த பின்பு பாலமுருகனின் மனைவிக்குத்தான் பொழுது போவது சிரமாக இருந்தது. இரண்டு நாட்கள் ஓடிய நிலையில் எதிர் வீட்டு வாயிலில் நின்ற பெண் லேசாகப் புன்னகைத்தாள். அதனைத் தொடர்ந்து அப்பெண்மணி, இவர்கள் வீடுவரைக்கும் வர அப்புன்னகை வித்திட்டது. பொது விவகாரங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்த தன் மனைவியிடம் பாலமுருகன் அந்தம்மையாருக்கு கோப்பி கொடுக்கச் சொன்னான். உடனே அந்தம்மையார் " தப்பா நினைச்சுக்கப்படாது எங்காத்து மனுஷா அடுத்தாத்தில் தண்ணி வெண்ணி எடுக்க மாட்டா நான் கேக்கிறேன்னு கோவிச்சுக்காதிங்கோ நீங்க என்ன ஜாதி?"

பாலமுருகனின் மனைவி தர்மசங்கடத்தில் தன் கணவனின் முகத்தைப் பார்க்க அவனோ மீண்டும் அதே அவமானத்தால் கூனிக்குறுகினான். வார்த்தைகள் தடுமாறின. தலையைக் குனிந்தவாறே அது...வந்து என இழுக்க " அப்பா நம்ம ஜாதிக்காரர் நாட்டுத் தலைவராயிட்டார்ப்பா" என்று கூறிக் கொண்டே கையில் தேர்தல் முடிவுகள் வெளிவந்த அன்றைய தினசரியோடு பாலமுருகனின் பத்துவயது மகன் ஓடி வந்தான். அத்தோடு நில்லாமல் "அப்பா நம்ம ஜாதிக்காரரை நாடே தலைவரா ஏத்திருச்சப்பா, இனிமே நீங்க தாராளமா நம்ம ஜாதியை சொல்லிக்கலாம் அப்பா" என்றான். வாஞ்சையோடு தன் மகனின் பெருமிதத்தைக் கண்ட பாலமுருகன் தன் வாழ் நாளில் முதன் முதலாக நெஞ்சை நிமிர்த்தி பெருமை பொங்கத் தன் ஜாதியைச் சொன்னான். அப்போது அவனுள் எவ்வித தாழ்வுமனப்பான்மையும் எட்டிப்பார்ப்பவில்லை.

**பா. உதயபாலன்**
தமிழக பல்கலைக்கழகமொன்றில் கற்றுக்கொண்டிருக்கும்
எமது கல்லூரியின் பழையமாணவன் ஒருவரின் முதற்சிறுகதை



படிப்பகம்

www.padippakam.com



# குழந்தைகளின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் பெற்றோர்களின் பங்கு குறித்து...

அண்மையில் பாரிஸில் நடைபெற்ற பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையிலான உறவாக்கம் குறித்து நடைபெற்ற விவாதமொன்றில் பல்வேறுபட்ட கருத்துகள் பகிரப்பட்டன. குறிப்பாக புலம் பெயர்ந்த நாட்டின் நிலை தொடர்பாக கவனத்தில் எடுத்த போதும், இது பரந்த சமூக தளத்தில் பொதுவான அடிப்படையை கொண்டே எதார்த்தில் விவாதிக்கத் தூண்டியது. புலம்பெயர் சூழல் என்பது எமது பெற்றோருக்கு முற்றிலும் புதியது. மொழி மற்றும் பண்பாட்டு கலாச்சாரக் கூறுகள் என அனைத்தும் முற்றிலும் எமக்கு எதிர்மறையாக காணப்படுகின்றது. அதாவது எமது கூட்டுச் சமுதாய வாழ்வு முறைக்கும், தனிமனித வாழ்வு முறைக்கும் இடையிலான ஒரு அகன்ற பள்ளமாக இது காணப்படுகின்றது. இதை தெளிவாக கூறின் நிலப்பிரபுத்துவ சமுதாய பண்பாடுகளைக் கொண்ட ஒரு சமுதாயத்துக்கும், ஏகாதிபத்திய உலகமயமாதல் பண்பாட்டைக் கொண்ட சமுதாயத்துக்கும் இடைலான முரண்பாடாக உள்ளது. பெற்றொர் குழந்தை வளாப்பில் பாரிய நெருக்கடியை இது உருவாக்கின்றது.

இங்கு எமது குழந்தைகள் எகாதிபத்திய சமூக அமைப்பில் பிறந்தும் அல்லது சிறு வயது முதலே தனிமனித வாதத்துடன் வாழத் தொடங்குகின்றது. குழந்தை மீதான பெரும் செல்வாக்கை வகிக்கும் சமூகத் தாக்கம், அடிப்படையில் மேற்கத்திய பண்பாட்டு கலாச்சார சூழலுக்கு உட்பட்டு குழந்தை சிந்திக்க தொடங்குகின்றது. ஆனால் குழந்தை எதிர்மறையான நிலப்பிரத்துவ பண்பாட்டை பெற்றொரிடம் இருந்து எதிர் கொள்கின்றது. இது இயல்பான எதார்த்தமான முரண்பாடான எதிர்மறையான மோதலாக வெடிக்கின்றது. மேற்கத்தைய பண்பாட்டில் பொதுவாக கையாளப்படும் ஜனநாயக விழும்மியங்கள், எமது சமுதாயத்தில் இயல்பாகவே அங்கிகரிக்கப் படுவதில்லை. இங்கு பெற்றொருக்கும் குழந்தைக்குமான உறவில் உறவாக்கம் என்பது, அதிகார வடிவங்கள் சார்ந்த பண்பியலுடன் தான் கையாளப்படுகின்றது. அதாவது பெற்றோர் குழந்தைகளை அடக்கியாளும் உரிமையை, ஏன் ஏதற்கு என்ற கேள்வி இன்றி அங்கிகரிக்கின்றது. இது ஜனநாயக விழுமியத்தை நேசிக்கு குழந்தைகளின் மனதை நேரடியாகவே பாதிக்கின்றது. இந்த இடைவெளி குழந்தையின் எதார்த்த அறிவு சார்ந்து, பெற்றோருக்கு எதிரானப் மனப்பாங்கை உருவாக்கிவிடுகின்றது. இதில் இருந்து புலம் பெயர்ந்த பெற்றோர் குழந்தை உறவில் எற்படும் நெருக்கடிகள் பலவாகிவிடுகின்றன.. வயதுக்கு வயது இதுவே ஒரு புதிய பிரச்சனையாகிவிடுகின்றது. குழந்தை இரட்டை காலச்சார பண்பாட்டு மற்றும் பொருளாதார சமூக கண்ணேட்டத்துக்கு இடையில் சிக்கி அங்குமிங்கும் பந்தாடப்படுகின்றது. குழந்தை இரண்டு சமூக அமைப்புடனும் நெருங்க முடியாத இடைவெளியால், சமூகத்தின் மீதான வெறுப்புக்கு குழந்தை பலியாகின்றது. இது பொதுவாக நிலைத்து வாழும் சமூகத்தை விட, வன்முறை கொண்ட குழந்தைகளை உருவாக்கின்றது. சமூக மீதான வெறுப்பும், சமூக மதிப்பற்ற அராஜகத்தை கையாள்வதை குழந்தையின் அடிப்படை உளவியலாகின்றது.

இந்த அபாயத்தை நாம் புரிந்து கொள்ளாமலே, வன்முறை குழுக்களைப் பற்றி வெறுப்பாக பேசிக் கொள்கின்றோம். இதைச் சற்று விரிவாக பார்ப்போம். மேற்கில் நிகழும் இளைஞர் குழுக்களின் வன்முறைகள், பாடசாலை வன்முறைகள் கணிசமான அளவு வெளிநாட்டு குழந்தைகள் ஈடுபடுவது அவதானிக்கப்படுகின்றது. இதற்கு முக்கியமாக இரட்டைக் கலாச்சாரம் அடிப்படையாக உள்ளது. இங்கு ஜனநாயகத்தையும், அறிவு பூர்வமாக விடயங்களை கையாளும் அணுகுமுறையற்ற குடும்பச் சூழல், இதற்கு அடிப்படையாக உள்ளது. இதை விட விவாகரத்துகள், குடும்பத்தில் காணப்படும் வன்முறைச் சூழல், நுகர்வு வெறியை எற்படுத்தும் உலகமயமாதல் சந்தைக் கண்ணோட்டம் என்று நீண்ட சமூகக் காரணங்கள் முண்டுகொடுக்கின்றது. தமிழர்கள் மத்தியில் காணப்படும் இளைஞர் குழுக்களின் வன்முறையை எடுத்துக் கொண்டால், இதிலும் எமது சமூக இயக்கத்தில் காணப்படும் ஜனநாயகமற்ற போக்கு அடிப்படையாக பிரதிபலிக்கின்றது. இது ஆயுதக் கலாச்சாரமாகியுள்ளதால், ஆயுத வன்முறை வரை விரிந்துவிட்டது. அத்துடன் பெருமளவில் வன்முறையில் ஈடுபடுபவர்கள் 13 வயதுக்கு பிற்பாடு மேற்கு நோக்கி புலம் பெயர்ந்தவர்களை அடிப்படையாக கொண்ட குழுக்களாக உள்ளது. இவர்களை தமிழ் படசாலைகள் ஒன்று இணைத்து, வன்முறைக்குரிய குழுகளையும் உருவாக்கி கொடுக்கின்றது. வக்கிரமான பிஞ்சுக் காதலை உற்பத்தி செய்கின்றது. இப் பாடசாலைகளால் தமிழை அல்லது மற்றைய கல்வி சார்ந்த



படிப்பகம்

www.padippakam.com



எதையும் வெற்றிகரமாக சாதிப்பதில்லை. பெற்றோரின் கற்பிக்கும் ஆர்வத்தை பணமாக்கும் கல்வி நிறுவனங்கள், வெற்றிகரமாக சாதிப்பது வன்முறை கொண்ட குழுக்களை ஒன்று திரட்டவும், வக்கிரமான பாலியல் நுகர்வை தமிழருக்கு இடையில் காதலாக்குவதுமே. இடைப்பட்ட இரட்டைக் காலச்சாரத்தில் சிக்கி, எதிலும் சமூக அடிப்படையை எற்படுத்த முடியாதவர்களின் வெடிப்புத்தான் இந்த குழுக்களாகின்றது. இதன் பின்னணியில் இளம் பெண்களும் இணைந்து இருப்பது தற்செயலானவை அல்ல. குழுக்கள் பொறுக்கி வாழவும், துன்புறத்தி ரசித்து வாழவும் எல்லாப் பண்பாட்டு கலாச்சரத்தையும் அழிக்கும் உலகமயமாக்கல் பண்பாடே, இவர்களின் கதாநாயக தனத்தைப் பீற்றும் ஆதாரமாக உள்ளது.

ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது பெற்றோரின் பணி இங்கு மிக முக்கியமானதாக உள்ளது. குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையிலான உறவில் மிகவும் நேர்த்தியான இயல்பான பரஸ்பரம் கதைத்துக் கொள்ளும் உறவை உருவாக்க வேண்டும். எதையும் ஜனநாயக விழுமியங்களுக்குள், அறிவார்ந்த வகையில் பேசித் (கதைத்து) தீர்க்கும் அறிவும், சமூகப் பண்பும் மிக முக்கியமானதாக உள்ளது. காரணமற்ற எதையும், அதேபோல் விளக்கமற்ற எதையும், திணிப்பதையும் கோருவதையும் பரஸ்பரம் கோராத உறவு அடிப்படையானதாகும். பகுத்தாராய்வுக்கு உட்பட்ட வகையில் விடயங்களை கையாள்வது அவசியம். இவை அனைத்தையும் குழந்தையிடம் எற்படுத்த வேண்டியது பெற்றோரின் கடமை. இதை தாம் கடைப்பிடிப்பது பெற்றோரின் முதன்மைப் பண்பாக இருக்க வேண்டும். அதாவது பெற்றோர் முன் கையெடுத்து அணுகுவது அடிப்படையானது. அனைத்து பெற்றோரினதும் விருப்பங்கள் பூர்த்தியாவது என்பது, குறிப்பாக பெற்றோரின் பொறுப்பு வாய்ந்த அணுகுமுறையில் தங்கியுள்ளது. இந்த விடயத்தைக் கையாள்வது இலகுவானதும், நனவுபூர்வமானதும் கூட.

பெற்றோர் தம் குழந்தைக்கு சொல்லும் ஒவ்வொரு விடயத்தையும், மறுக்கும் ஒவ்வொரு விடயத்தையும் ஏன் சொல்லுகின்றோம் என்பதை, தமக்கு தாமே கேட்டுப் பார்க்க வேண்டும். இவற்றை பொதுவாக குழந்தையின் நன்மைக்காக என்ற, ஒற்றைப் பதிலில் இருந்து அல்ல. மாறாக இந்த மறுப்பும், உத்தரவுகளும் சமூக பண்பாட்டு உறவாக்கத்துடன் தொடர்புடையவை. ஏன் இவற்றைக் குழந்தை கேட்கின்றது மறுக்கின்றது என்பதை, அந்தக் குழந்தையின் நிலையில் இருந்து சிந்தித்துப் பார்க்க வேண்டியது பெற்றோரின் கடமையாகின்றது. இதை முதலில் பெற்றோர் செய்யத் தொடங்க வேண்டும். அதே நேரத்தில் குழந்தையிடம் இதே கேள்வியை, அதாவது ஏன் கேட்கின்றாய், ஏன் மறுக்கின்றாய் என்று தனக்கு தானே கேட்க வைப்பது அவசியமானது. இதன் மூலம் ஒரு தர்க்க ரீதியான முடிவை, பெற்றோர் மற்றும் குழந்தைக்கு இடையில் ஒரு சரியான முடிவை வந்தடைவதை தூண்ட முடியும். இங்கு இந்த விடயத்தில் குழந்தை பெற்றோர் தமக்கு இடையில் ஜனநாயக பூர்வமான உறவாக்கத்தை உருவாக்குவது அவசியமானது. மறுப்பு மற்றும் கேட்டலில் உள்ள விடயத்தை ஜனநாயக பூர்வமாக அணுகி, அடிப்படை தேவையின் நிமர்த்தம் என்ற எல்லைக்குள் அனுசரித்துப் போவதைப் பண்பாடாக்க வேண்டும். அறிவுபூர்வமாக அல்லாது அடாத்தாக மறுப்பதும், அடாத்தாக கேட்பதும் பரஸ்பரம் உறவை பிளந்து விடுகின்றது.

குழந்தை மற்றும் பெற்றோர் சிந்திக்க ஆற்றல் உள்ள உயிரியல் தொகுதியே. இவர்கள் வெறும் உணர்ச்சி அற்ற பொருட்கள் அல்ல. சிந்திக்கும் ஆற்றலை வளர்ப்பதன் மூலம் தான், ஒரு இயந்திர வாழ்விற்கு பதில் இசைந்து இணங்கி போக முடியும். இது மனித பண்பாட்டை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் பொருட்களின் உறவில் இருந்து உருவாகும், இயந்திரத்தனமாக சடங்கு ரீதியான அனுகுமுறையை மாற்றி அமைப்பது அவசியமானது. இன்றைய மனித உறவுகளை பொருட்களே தீர்மானிக்கின்றது. மனிதன் உற்பத்தி செய்த பொருட்கள், மனிதனை அடக்கியாளும் சமூக உறவாக்கத்தை கட்டுப்படுத்துகின்றது.

பொருட்கள் வெறும் இயந்திரகதியில் மனித உறவுகளின் எல்லையை தீர்மானிக்கின்றது. உறவுகள் அனைத்துக்கும் லஞ்சம் ஒரு உற்சாகமான உறவாக புனையப்படுகின்றது. குழந்தை மீதான அன்பைக் கூட, பொருட்களை லஞ்சம் கொடுப்பதன் மூலம் பெற்றோர் வெளிப்படுத்த முனைகின்றனர். குழந்தையின் சாதனையை பொருட்கள் மூலம் கோரப்படுகின்றது. அதாவது பரீட்சையில் பாஸ் செய்தால், இதை வாங்கித் தருவேன், அதைச் செய்தால் இந்தக்கடையில் அந்த உணவை வாங்கித் தருவேன் என்று விரிந்த தளத்தில் இந்த லஞ்ச உறவாக்கம் கட்டமைக்கப்படுகின்றது. மனிதனுக்கு இடையில் சமூக உறவாக்கம் என்பது விலை பேசப்படுகின்றது. குழந்தையின் அறிவின் மீதான ஆர்வம், லஞ்சம் என்ற பொருட்களின் உறவில் விலை பேசப்படுகின்றது. இந்த உறவுகள் இயல்பில் பெற்றோரையும் குழந்தையும் ஒரு வர்த்தக உறவுக்குள் உற்பத்தி செய்கின்றது. இது பெற்றோரிடம் இருந்து குழந்தையிடம் கைமாறும் போது, குழந்தையும் அதையே கோருகின்றது. உதாரணமாக குழந்தை பெற்றொரிடம் எனது பிறந்த தினத்துக்கு இன்ன பொருளை வாங்கித் தரவேண்டும் எனக் கோருகின்றது. நான் இதைச் செய்வது என்றால் அல்லது இதைச்



படிப்பகம்

www.padippakam.com



சாதிப்பது என்றால், இன்ன பொருளை வாங்கித் தா என்கின்றது. எங்கும் பொருட்கள் சார்ந்த உறவாக மனித உறவு உள்ளது. மனித உறவை பொருட்கள் நிர்ணயம் செய்கின்றது. இதுவே பெற்றோர் குழந்தை உறவில் எற்படும் முரண்பாட்டின் அடிப்படையாக உள்ளது. மனித உறவு என்பது இதற்கு வெளியிலானது. மனித உறவில் மிக முக்கியமானது சக மனிதனை ஒரு மனிதாக மதித்தலாகும். இதை பொருட்கள் நிர்ணயம் செய்ய முடியாது. தனிமனித நலன்களை விட சமூகத்தின் நலனை சிந்திக்க வைத்தல், சிந்திக்க தொடங்குதல் முதன்மையானது. இதற்குள் விரிவாக தற்போதைக்கு ஆராய்வதைப் தவிர்ப்போம். பொருட்கள் சார்ந்த உறவு லஞ்ச வகைப்பட்டது. இது பாசம் வகைப்பட்டது அல்ல. மனிதப் பாசம் வேறானது. பொருட்கள் மூலம் காரியம் சாதிப்பது முற்றிலும் இயந்திரவகைப்பட்ட உறவாகும்.

நல்ல குழந்தை என்பதன் வரைவு இலக்கணம் என்ன? பெற்றொரின் சொல்லைக் கேட்கும் குழந்தைகள் நல்ல குழந்தைகளா? வகுப்பில் சிறந்த புள்ளிகளைக் எடுக்கும் குழந்தை நல்ல குழந்தையா? குழப்படி செய்யாத குழந்தை நல்ல குழந்தையா? பெற்றோர் சொல்லும் ஆணை அல்லது பெண்ணை திருமணம் செய்யும் குழந்தை நல்ல குழந்தையா? பணத்தை பெருக்கி சம்பாதிப்பவன் நல்ல குழந்தையா? இப்படி வெவ்வேறு அளவில் நல்ல குழந்தை பற்றிய ஒரு சமூக அடிப்படை காணப்படுகின்றது. இங்கு அனைத்திலும் பெற்றொரின் சுயநலமும், குழந்தை மீதான ஒரு அதிகாரத்துவமும் தொங்கி நிற்கின்றது. இவை அனைத்தும் பொருட்கள் சார்ந்த உறவில் இருந்தே வரையறுக்கப் படுகின்றது. ஆனால் நல்ல குழந்தை என்பது, சமூகத்தின் பொது நலனில் இருந்து சிந்திக்க கற்றுக் கொள்வதில் முற்றாக சார்ந்து உள்ளது. அதாவது யாருக்கும் பாதகமில்லாத, மற்றவர்களுக்கு உதவும் உயர்ந்த சமூக பண்பாட்டில் மற்றவர்களுடன் தன்னை இணைத்துக் கொள்ளும் குழந்தை நாம் உருவாக்க வேண்டும். அதாவது சுயநலமற்ற மனித உறவுகள், பரஸ்பரம் தமக்கு இடையில் மனித இனத்தின் நலனை முதன்மைப்படுத்தும் உறவே, மிக நல்ல குழந்தைகளை உருவாக்கின்றது. இந்தக் குழந்தைகளை இட்டு எந்தப் பெற்றோரும், எதற்கும் கவலைப்பட வேண்டி அவசியம் இருக்காது. சுய ஆற்றல் உள்ள, சுய நம்பிக்கை உள்ள சமூகத்தில் தன்னை ஒரு அங்கமாக இணைத்துக் கொள்ளும் குழந்தை யாருக்கும் சுமையாக உருவாவதில்லை. யாருக்கும் மனக் கஸ்ட்டத்தை கொடுப்பதில்லை. மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் ஒரு குழந்தைகள் உருவாகுவார்கள். இவை அனைத்துக்கும், உண்மையில் குடும்பச் சூழலில் ஜனநாயக மனப்பாங்கு உருவாக்குவது அவசியமானது. எதையும் சேர்ந்து ஆராயவும், விமர்சிக்கவும், சுயவிமர்சனம் செய்யும் சூழல் குடும்பத்தில் அவசியமான நிபந்தனையாகும்.

சில பெற்றோர்கள் குழந்தை கோருவதை அப்படியே நிறைவு செய்யும் எதிர்மறை போக்கும் அல்லது ஏனோ தானே என்று நிறைவு செய்வதும் நிகழ்கின்றது. இன்றைய எதார்த்தில் குழந்தை கோரும் அனைத்தையும் பெற்றோர் நிறைவு செய்ய முடியாது. அதேபோல் பெற்றொர் செய்வது அனைத்தும் சரியானவையும் அல்ல. இதற்கு பதிலாக பெற்றொர் குழந்தைகளின் தேவை என்ன என்ற கேள்வியில் இருந்து, அதன் அடிப்படைத் தேவையை மட்டும் பூர்த்தி செய்வதில் இணங்கிப் போகும் முறையைக் கையாள்வது அவசியமாகும். இங்கு ஏற்றத் தாழ்வான சமூக அமைப்பில், இதை நாம் புரிந்து அதன் எல்லைக்குள் எதார்த்தம் மீது தீர்வு காணவேண்டும். இதை பரஸ்பரம் குழந்தையுடன் விரிவாக கதைத்து நடைமுறைப்படுத்துவது அவசியமானது.

ஆனால் நாம் இந்த அடிப்படை சமூகத் தேவையை கடந்தே பொதுவாகச் சிந்திக்கின்றோம். சமூகத் தேவை என்பதும் தனிப்பட்ட தேவை என்பதைக் கடந்து நாம் அணுகும்போது, தவறானவற்றை பெரும்பாலும் கையாளத் தொடங்குகின்றோம். இது பெற்றோர் தமது சொந்த நடைமுறை வாழ்விலும், குழந்தை தனது வாழ்விலும் இதை கையாளுகின்றது. அதாவது பொருட்களே பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கு இடையில் அடிப்படையான உணர்வை தீர்மானிப்பதாக மாறிவிடுகின்றது. அநேகமாக குழந்தையின் தவறான கோரிக்கையை அங்கீகரித்தும், அல்லது மறுத்து பின் இணங்கிச் செல்வதும் அதை நியாயப்படுத்துவதும் பொதுவாக நிகழ்கின்றது. இது படிப்படியாக பல தவறான காரணமற்ற நடத்தைகளுக்கு, படிப்படியாக இணங்கிப் போவதை நிர்பந்திக்கின்றது. பெற்றோர் தாம் செய்பவற்றின் மேலான ஆதாரவளராக மாறி நியாயப்படுத்தி விடுகின்றனர். குறிப்பாக இதை ஆராய்வது விடயத்தை துல்லியமாகப் புலப்படுத்தும்.

### 'மார்க்' பொருட்கள் மீதான குழந்தையின் கோரிக்கைகள்

புலம்பெயர் நாட்டில் மார்க் சார்ந்த பொருட்களை பயன்படுத்துவதையே குழந்தைகள் பொதுவாக கோருகின்றனர். இது இன்று இலங்கையில் (மூன்றாம் உலக நாடுகளில் கூட) கூட குழந்தைகளால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. பொதுவாக இந்த விடயத்தில் விலை சார்ந்து பெற்றோர் இதை எதிர்த்த போதும், குழந்தைகளின் விடாப்பிடியான கோரிக்கைக்கு பெற்றோர் அடிபணிந்து இணங்கிப் போவது அல்லது



படிப்பகம்

www.padippakam.com



ஒரு மோதலாகவும் மாறுகின்றது. சில பெற்றோர் அதை நியாயப்படுத்தவும், அதற்கு காரணங்களை கண்டுபிடித்து வாதிடவும் செய்கின்றனர்.

மார்க் பொருட்கள் மீதான குழந்தையின் மோகம் எப்படி உருவாகின்றது? சந்தை பொருளாதாரத்தில் சூறையாடும் வக்கிரத்தில் இருந்து, அதை அறிவியலுக்கு புறம்பாக குழந்தை மண்டைக்குள் இறுக்கப்படுகின்றது. தொலைக்காட்சி முதல் கண்ணால் பாக்கும் அனைத்து காட்சியிலும், காதால் கேட்கும் விடயங்கள் முதல் அனைத்து மனித உணர்வு வழிகளில் மார்க் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு, சிறந்தது அழகானது, கவர்ச்சிகரமானது என்று குழந்தையில் மூளையில் திணிக்கப்படுகின்றது. இதை கௌரவத்தின் சின்னமாக, புகழின் உச்சமாக, நவீனத்தின் இலட்சியமாக மாற்றி, கதாநாயக காதநாயகிகளின் உன்னத நிலைக்கு இதுவே அடிப்படை காரணம் என்று எம்மைச் சுற்றி உள்ள அமைப்பு எமக்கு இடித்துரைக்கின்றது. குழந்தைகள் தாம், தம்மை மற்றவர்கள் முன் கதநாயகன் கதநாயகியாக காட்ட இந்த விடத்தை இறுக பிடித்துக் கொள்கின்றன. குறிப்பாக இதை இலகுவாக புரிந்து கொள்ள, தமிழ் சினிமா நடிகைகள் மூலம் அறிமுகமாகும் சாறி வகைகள், எப்படி எமது பெண்களை அதன் பின் அலையவிட்டு மக்களின் உழைப்பை உறுஞ்சுவது சந்தை விதி. புதிய சாறிகளை நோக்கி சந்தை எப்படி மாறுகின்றதோ, அதுவே மார்க் பொருட்கள் மீதான குழந்தையின் மோகமும்.

இந்த மோகம் என்பது உலகமயமாதல் பண்பாட்டால் கட்டி அமைக்கப்படுகின்றது. அமெரிக்கா ஐரோப்பிய உயர் வர்க்கப் பண்பாடுகளை, உலகமயமாக்கின்ற இன்றைய உலக நிலைக்கு இசைவாகவே, இந்தச் சந்தை கட்டியமைக்கப் படுகின்றது. அந்த எல்லைக்குள் குழந்தையின் சிந்தனை, செயல்கள் அனைத்தும் மாற்றி அமைக்கப்படுகின்றது. இது குழந்தை மட்டத்தில் செல்லுகின்ற போது, பொதுவான இயல்பான சமூகக் கலச்சாரமாக மாறுகின்றது. எல்லாவற்றையும் இதற்குள் இருந்து சிந்திக்கின்றவனாக மாற்றுகின்றது. உலகமயமாதலுக்கு உட்படாத, உலகில் உள்ள பன்மைக் கலாச்சாரத்தை விரோதமாக பார்க்கின்றது. இது கூட எமது பெற்றோருக்கு எதிரான ஒரு பண்பாக, ஒரு கலாச்சாரமாக மாறுகின்றது.

இப்படிப் பொதுவாக உலகமயமாகும் சந்தை பண்பாட்டைக் கலச்சாரமாக உள்வாங்கும் குழந்தை, தமக்குள் அது சமூக அங்கீகாரம் கொண்ட செக்கு மாட்டுத் தனத்தை பொதுவான பண்பாடாக கொள்கின்றது. இங்கு இந்த உலகமயமாதல் பண்பாட்டை கலச்சாரத்தை கைகொள்ள முடியாத குழந்தையை, இந்த பண்பாடும் கலாச்சாரமும் இழிவுபடுத்துகின்றது, அவமானப்படுத்துகின்றது. சராசரிக் குழந்தைகள் இதை எதிர்த்து எதிர் நீச்சல் போடவும், எதிர்த்து நிற்க முடியாத நிலையில் இணங்கிப் போதல் என்ற நிலைக்குள் தள்ளப்படுகின்றனர். கள்ளச் சந்தை மூலம் மார்க் பதித்த பொருட்கள் மூலம், இதை சிலர் பூர்த்தி செய்து விடுகின்றனர். இதை பெற்றோரும், குழந்தைகளும் தப்பித்துச் செல்லும் சமூக நெருக்கடியில் இருந்து, இந்தத் தீர்வை கையாளுகின்றனர். ஆனால் மாணவர் சமுதாயமே சந்தை என்னும் கட்டமைக்குள் சிந்தனையை உருவாக்குவதால், இந்த இரட்டைப் பொருட்கள் மேலான இடை வெளியை இனம் கண்டு அதை நோக்கியும் ஒரு தாக்குதலுக்கு உள்ளாகின்றது. குழந்தை பொருட்களின் உயர்ந்த விலையை நோக்கி நகர்வதையும், அதைக் கோருவது படிப்படியாக மாறி வருகின்றது. சில பெற்றோர்கள் விமர்சனமற்ற நிர்பந்தமான எல்லைக்குள், கள்ளச் சந்தையில் உருவாகும் மார்க் பதிக்கப்பட்ட பொருட்களை மலிவாக வாங்கி கொடுக்க தொடங்கும் போது, அது முடிவல்ல ஆரம்பம் என்பதை புரிந்து கொள்வதில்லை. சந்தையில் உயர் விலை உள்ள மார்க்கை பொருளை நோக்கி குழந்தை நகாத்தப்படுகின்றது என்பதை பெற்றோர் தெரிந்து கொள்ள முடியாது நிற்கின்றனர். குழந்தை அடிப்படை அறிவியல் சிந்தனையே, உயர் விலை சார்ந்த சமூக கண்ணோட்டத்தில் பலியிடப்பட்டதை பெற்றோர்கள் புரிந்து கொள்வதில்லை. மிக நுட்பமான சூட்சுமமான சந்தை குழந்தையை சந்தைப் பொருளாதாரத்துக்குள் பலியிடுகின்றது. சமூக அறிவீனத்தை மூலதனமாகக் கொண்டு, குழந்தையை சந்தை பலியீடுகின்றது. சமூகம் தனது சொந்த உழைப்பை ஆடம்பரமற்ற இயல்பான வாழ்வை அழித்து, ஆடம்பர வாழ்வுக்குள் பலாத்காரமாக சந்தை, இழுத்துச் சூறையாடுகின்றது. மொத்த குடும்பத்தின் சூழலே படிப்படியாக, முற்றிலும் மாறான பண்பாட்டு கலாச்சார எல்லைக்குள் மாறிச் செல்ல துாண்டுகின்றது.

குழந்தை உளவியல் சக நண்பர்கள் நண்பிகள் முன்பு, இந்த மாாக் போட்ட தரத்தில் இருந்தே சொந்தப் பெருமை பீற்றிக் கொள்கின்றது. இதை அடைவதையும், அடைந்ததையும் இலட்சியமாக பீற்றிக் கொள்கின்றது. மாணவர் சமுதாயத்தில் திறமை, அதி உயர்வெற்றி மார்க்கை நுகர்வதில் இருந்து கிடைப்பதாக பீற்றிக் கொள்வது, சர்வசாதாரணமான சமூக உறவாகிவிடுகின்றது. இதுவே கல்வியின் அடிப்படை உளவியலாகிவிடுகின்றது. கல்வி என்பது முதலாமிடத்தில் இருந்து அகன்று அந்த இடத்தை மார்க் ஆக்கிரமித்துக் கொள்கின்றது. இது ஒன்றும் கற்பனை அல்ல. இது மாணவர்களின் அடிப்படையான உளவியலாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



குழந்தை கல்வி மீதான ஆர்வம், அதில் திறமை, சாதனைகள் அனைத்தையும் பெறுவதை இட்டு அக்கறைப்படுவதில்லை. மார்க் பொருட்களை நுகர்வதில் சாதனை சார்ந்துள்ளது என்ற உணர்வு, உளப்பூர்வமானதாக உள்ள நிலையில் கல்வியின் தரம் வீழ்ச்சி காண்கின்றது. குழந்தை பாடசாலை செல்லும் போது, இந்த எல்லையைத் தாண்டி செல்வதில்லை, சிந்திப்பதில்லை. இதற்கு அப்பால் தான் கல்வி பற்றிய உணர்வு. இதுவே சமூக எதார்த்தமாக உள்ளது. சக மாணவனிடம் தனது தகுதிக்கான அங்கீகாரமாக, மார்க் பொருட்களின் நுகர்வே மாணவ உளவியலை சிந்திக்கின்றது. இதை உலகமயமாதல் சந்தை சார்ந்து, அது உருவாக்கம் பண்பாட்டையே கலாச்சாரமாக உருவாக்கின்றது. இதை நோக்கிச் செல்லும் மாணவர் சமுதாயம், பெற்றோரை அதை நோக்கி தள்ளிச் செல்ல முனைகின்றது. குழந்தைகள் பெற்றோரை தவாறன வழிக்கு வழிகாட்டிச் செல்லுகின்றனர். உலகமயமாதல் சந்தை குழந்தைகளை ஊடுருவி, பெற்றோரை அதை நோக்கி இழுத்து எடுக்கின்றது.

இதற்கு சிந்திக்க முடியாத இயந்திரமயமாக இயங்கும் பெற்றோர்கள் பலியாகின்றனர். சிலர் காரணம் சொல்ல முடியாத எதிர்ப்பு அல்லது நிதி இல்லாதால் எற்படும் உணர்வுகளும் விளைவுகளும் என பல விதத்தில் ஒரு போராட்டத்தை நடத்துகின்றனர். சிலர் இதை அடைய மாடாய் உழைக்கின்றனர். இந்த உலகமயமாதல் பண்பாடு கலாச்சாரம், பெற்றொருரிடமும் குறிப்பாக ஏழைகளிடம் இருக்கும் உயர்ந்த மனிதப் பண்பு கொண்ட சமூக பண்பாடுகளையும் கலாச்சாரங்களையும் கூட படிப்படியாக அழிக்கின்றது. உலகமயமாதல் என்பது அமெரிக்கா ஐரோப்பிய மேட்டுக் குடிகளின் பண்பாட்டை கலாச்சாரத்தை, உலக மக்கள் மேல் திணிக்கின்றது. இதை எதிர்த்து நிற்க முடியாத பெற்றோர்கள், குழந்தைகளின் கால்களின் தொப்பென விழ்கின்றனர். குழந்தைகளுக்கு வழிகாட்ட முடியாத திணறுகின்றனர். படித்தால் சரி, சொல்லைக் கேட்டால் சரி என்ற உணர்வைப் பெறுகின்றனர். குழந்தைக்கு லஞ்சம் கொடுக்கின்றனர். இதில் விசித்திரம் என்ன என்றால் லஞ்சப் பொருளாக எதைத் தர வேண்டும் என்பதை, குழந்தையே தெரிவு செய்கின்றது. அது மார்க்காக இருப்பதை குழந்தை உறுதி செய்கின்றது. எந்த நிலையில் குழந்தை கோரும் லஞ்சம் படிப்பு சார்ந்ததாக அறிவு சார்ந்ததாக பெரும்பாலும் இருப்பதில்லை. ஆடம்பர வாழ்வுக்குள்ளும், மார்க் நுகர்வுக்குள்ளும் லஞ்சம் மற்றும் குழந்தையின் கோரிக்கை சுருங்கிவிடுகின்றது. இப்படி இந்த பண்பாட்டுக் கலாச்சாரத்துக்குள் பெற்றோர்கள் எதோ ஒரு விதத்தில் இணங்கி, செம்மறி ஆடுகளாக மாறிவிடுகின்றனர். குழந்தை அனைத்து சமூக உறவையும் பொருட்கள் ஊடாக காண்பது எதார்த்தமாகின்றது. மனிதப் பண்புகள், சமூக உணர்வுகள் சிதைக்கப்பட்ட அமைப்பில், இயந்திரமாக சிந்திக்க செயலாற்றத் தொடங்குகின்றது.

குழந்தையின் கோரிக்கைகள், செயல்கள், நடவடிக்கைகள் சுற்றி உள்ள சமூகத்தில் இருந்தே உருவாகின்றது. விரிந்த சமூகப் பகுதியில் இருந்து உள்வாங்கிக் கொள்ளும் அளவுக்கு எற்பவே, குழந்தையின் மீதான தாக்கம் மற்றும் கோரிக்கைகள் வேறுபடுகின்றன. குழந்தை உள்வாங்கிக் கொள்ளும் உலகம், உலகமயமாதலானது. இது மேற்கில் இருந்து இலங்கை வரை ஒரே மாதிரியாக உள்ளது. கொலிவுட் படத்துக்கும், தமிழ் சினிமாவுக்கும் அதிக வேறுபாடு இருப்பதில்லை. இவர்கள் ஒரு பொருளை காட்சிப்படுத்தவும், ஒரே சந்தையை விளம்பரங்களாக காட்சியாகின்றனர். சமுதாய உருவாக்கம் இப்படித் தான் உருவாக்கப்படுகின்றது.

இங்கு தான் பெற்றோரின் கடமை கூர்மையாகின்றது. முதலில் குழந்தையின் கோரிக்கை எதனால் எப்படி எற்படுகின்றது என்பதை, குழந்தையைக் கொண்டே அறிய வேண்டும். உதாரணத்துக்கு மார்க் பொருட்களை நுகரக் கோரும் போது, ஏன் அதை கோருகின்றது என்பதைக் கேட்க வேண்டும். குழந்தைகளிடம் எப்போதும் பதில் இருப்பதில்லை. இது வெளியில் இருந்து அதாவது குழந்தை சிந்தனைக்கு அப்பால் இருந்து வரும் ஒரு நிர்ப்பந்தம் என்பதால் தான், எப்போதும் பதில் இருப்பதில்லை. மற்றவர்கள் போடுவதால் தான், நான் போட விரும்புவதாக சிலவேளை சப்பைக் கட்டக் கூடும். குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு, இது முற்றிலும் மாறான மலட்டுக் குணத்தை குறிப்தாகும். மிகவும் உணர்வு பூர்வமாக ஏன் எதற்கு என்று பல ஆயிரம் கேள்விகளுடன் அறிவைத் தேடி வளரும் குழந்தை தீடிரென இப்படி கேட்க மறுத்து, செம்மறி ஆட்டு நிலைக்கு செல்வதை குழந்தை மீது அக்கறையுள்ள எந்தப் பெற்றோரும் அனுமதிக்கவும் இணங்கிப் போகவும் முடியாது. காரணம் தெரியாத ஆடம்பர நுகர்வை நோக்கி ஏன் ஏதற்கு என்ற பதில்கள் அற்ற நிலைக்கு குழந்தை மாறிவிட்ட நிலைமை, ஏன் எற்பட்டது என்பதை முதலில் பெற்றோர்கள் நிச்சயமாக அடையாளம் காணவேண்டும். அறிவின் வளர்ச்சி தேங்கி மலடடைவதையும், சமூகத்துடன் தொடர்பற்ற துறையில் கவனம் மாறிவிட்டது என்பதை உடனடியாக பெற்றோர்கள் அடையாளம் காணவேண்மும். சிறு குழந்தைகள் தொடக்கம் என் எதற்கு என்று கேட்டு வளர்ந்த குழந்தை, ஏன்? நான் மார்க் உடுப்பை போடக்



படிப்பகம்

www.padippakam.com



கோருகின்றேன் என்பதை தெரியாமல் போன நிகழ்வை இட்டு பெற்றொர்கள் அக்கறைப்பட வேண்டும். குழந்தையின் அறிவில் எற்பட்ட மலட்டுத் தனத்தை திருத்துவதே, அனைத்திலும் முக்கியமான பணி. இதைச் சிறு குழந்தையில் இருந்து செய்ய வேண்டும். ஆனால் இதை கடந்த நிலையிலும் கூட சாத்தியமானதே. மேட்டுக் குடியின் ஆடம்பர வாழ்க்கையில் இருந்து அடிமட்டத்தில் கையேந்தி நிற்கும் உலகத்தின் வெட்டு முகத்தின் தோற்றத்தையும், இதற்கான அடிப்படைக் காரணங்கள் மேல் குழந்தைக்கு எதார்த்தமாக காட்ட வேண்டும். உழைப்புத்தான் அனைத்தும் என்பதையும், உனது வாழ்கையை நீ உழைத்து உனது உழைப்பில் இருந்து தான் தீர்மானிக்க வேண்டும் என்பதை புகட்ட வேண்டும். உனது தெரிவையும், நுகர்வையும் நீ உழைத்து வாழும் ஒரு வாழ்வில் அனுபவித்து பெறவேண்டும் என்பதை, ஆரம்பம் முதலே குழந்தைக்கு பெற்றோர்கள் புகட்ட வேண்டும்.

### மார்க்கும் அதன் தரமும்

கொஞ்சம் வளர்ந்த குழந்தை தனது ஆடம்பர நுகர்வை நியாயப்படுத்த சில வேளைகளில் தரம் பற்றி பேசுவது உண்டு. மார்க் பொருட்களின் தரம் என்பது பொய்யானது. தரத்தை பற்றி எப்படி நிர்ணயம் செய்கின்றனர். இங்கு மற்றொரு பொருளுடன் பயன்படுத்திய ஒப்பிட்டு ரீதியாக பரிசோதனை இன்றி, இந்த தரம் பற்றிய விளக்கத்தை இயந்திர கதியில் முன்வைக்கப்படுகின்றது. தரம் என்பது அறிவுக்கு உட்பட்டது. தரம் என்பது பொருளின் விலை, குடும்பத்தின் வருமானம், பாவிக்கும் காலம், உடலுக்கு எற்படும் பக்க விளைவுகள், சுற்றுச் சூழலுக்கு உள்ள பக்க விளைவுகள், பொருளை உற்பத்தி செய்பவனின் சமூக நிலை, எந்த நாட்டில் எந்த நிலையில் உற்பத்தி செய்யப்படுகின்றது, எப்படி சந்தைக்கு வருகின்றது, இதில் யார் அதிகம் லாபம் அடைகின்றனர், அவர்கள் மக்களை பற்றி என்ன நினைக்கின்றனர், அவர்கள் எப்படியான மனித சமுதாயத்தை உருவாக்கியுள்ளனர் என்ற நீண்ட பல விடயம் மீதான அறிவே தரத்தை நிர்ணயம் செய்யும். ஆனால் இவற்றை புரிந்து கொண்டு தரத்தைப் பற்றி பேசுவதில்லை. பெண்ணை நிர்வாணமாக்கி அல்லது எதோ ஒரு விதத்தில் கவர்ச்சி காட்டிய பாலியல் விளம்பரமே, தரத்தைப் பற்றி போதிக்கின்றது. சந்தை விளம்பரம், தரத்தை பற்றி பேசுவனின் மூட்டாள் தனத்தை சார்ந்து செயலாற்றுகின்றது. பெருமை பேசுபவன் தாழ்வு மனப்பான்மை சார்ந்து, தரம் நிர்ணயமாகின்றது. அதி கூடிய பணத்தைக் கொடுத்த நுகரும் ஆற்றல் உள்ளதாக காட்டும் போலித்தனத்தை சார்ந்து, தரம் பற்றி பிரமைகள் கட்டமைக்கப்படுகின்றன. விளம்பரம் என்பதே, இயல்பான தேவை என்னும் பயன்பாட்டில் சந்தைப் படுத்த முடியாத நிலையில் உருவான பொருட்கள் மீது கட்டமைப்பதே. அது பின்னால் உயர்ந்ததாகக் காட்ட விடாப்பிடியாக மூளைச் சலவை செய்யப்பட்டு, சந்தைப் படுத்தப்படுகின்றது. விளம்பரம் கற்பனையான வகையில் அறிவுக்கு ஒவ்வொத வகையில் கட்டமைப்பதன் மூலம், மனப் பிரமையைக் கொண்டு சந்தை வக்கரிக்கின்றது. தரம் பற்றிய போலி உணர்வு ஊட்டப்பட்டு, சந்தையில் மக்களின் உழைப்பு கொள்ளை அடிக்கப்படுகின்றது. தரம் பற்றிய பிரமைகள் பின்னால், போலியான சமூக நடைமுறைக்கு அன்னியமான பல கூறுகளே, இந்த தரத்தைப் பற்றி பீற்ற வைக்கின்றது.

இதை புரிந்து கொள்வது இலகுவானது. ஒரு குழந்தையை ஒரு கடைக்கு கூட்டிச் செல்லும் போது, கவர்ச்சி மற்றும் மிக அண்மையில் பாதித்த ஒரு காட்சி மீதே பொருட்களை தெரிவு செய்வதையும் அதை வாங்கித் தரக் கோருவதையும் நாம் அவதானிக்க முடியும். இயல்புக்கு மாறான ஒரு சின்ன வித்தியாசமே, வாங்கித் தரக் கோருவதில் இருந்து அவதானிக்க முடியும். சப்பாத்து, புத்தகம் கொண்டு செல்லும் பையில் காணப்படும் குறித்த படம் கூட தெரிவை உருவாக்கின்றது. இது விளம்பரச் சந்தை விதிக்கு உட்பட்டதே. சந்தை முட்டாள்களின் அறியாமையில் கட்டப்படுதை இலகுவாக அவதானிக்க முடியும். முட்டாள் தனமான அறியாமை சார்ந்து, அந்தப் படம் பொறித்த பொருட்கள் சந்தையில் குவிக்கப் படுகின்றது. இதுவே கொஞ்சம் கொஞ்சமாக மார்க் மீதான மோகமாகவும் கட்டமைக்கப்படுகின்றது. கீரோசியம் என்பது இன்றைய எதார்த்த உலகமயமாக்கலில், மார்க் மயமான பொருளாகின்றது. மார்க்கை நுகர்ந்தால் விரும்பிய பெண் அல்லது ஆணை பாலியல் ரீதியாக நுகர முடியும் என்ற உணர்வை உருவாக்கின்றது. அது கவர்ச்சியால் வக்கரிக்கும் போது, பாலியல் கண்ணோட்டமும் சார்ந்த உணர்வும் கூட வக்கரித்து சிதைகின்றது. தன்னை எலலோரும் பார்ப்பார்கள் என்ற விளம்பர உணர்வைப் பெறுகின்றனர். தன்னைத் சாதனையாளனாக காட்ட, இந்த மார்க் உயர்ந்த விலை சார்ந்த கௌரவம் அதன் பெருமை என கட்டமைக்கப்படும் போலித்தனங்கள் இதன் அடிப்படையாக உள்ளது. தன்னைத் தான் வேறுபடுத்தும் வகையில், தன்னை கவரும் வகையில், தன்னைப் பார்க்கும் வகையில் என பலவிதமாக தன்னை வேறுபடுத்த தலைக்கு டை அடித்தல், உடுப்பை வெட்டுதல், தலையை மொட்டை அடித்தல், தொப்பியை எதோ ஒரு விதத்தில் போடுதல், தன்னை மூடி உடுப்பு போடுதல் என பற்பல கோமாளிக் கூத்துக்களை இளைய தலைமுறை செய்வதன் மூலம்,



படிப்பகம்

www.padippakam.com



தன்னைத் தான் உயர்ந்தவனாக காட்ட முனைகின்றது. சமுதாயத்தில் தனது தனித்துவமான அங்கிகாரம் என்ற உணர்வு சார்ந்து, தன்னை மிதப்பாக காட்ட வேண்டும் என்ற தாழ்வு மனப்பான்மையே இதன் அடிப்படையாகும். உண்மையில் இவை அனைத்துக்கு உளவியல் ரீதியாக உள்ள அடிப்படையான காரணம், தாழ்வு மனப்பான்மை என்ற உளவியல் சிக்கலே. இந்த உலகமயமாதலில் எனது நிலை என்ன, என்ற அடிப்படை கேள்வியில் இருந்தே இது ஒரு சமூக நோயாக மாறுகின்றது. உளவியல் நோய்க்கு தானாகக் கூறக் கூடிய காரணம் இருப்பதில்லை. ஏன் அது ஒரு நோய் என்பதைக் கூட தெரிந்து கொள்வதில்லை. ஆனால் கோருதல் முதன்மை பெறும் போது, நிர்ப்பந்தமான கோரிக்கையையே தரம் பற்றிய உள்ளடகத்தின் மூலம் நியாயப்படுத்துவதன் மூலம் தமது அறிவை பீற்றிக் கொள்ள முனைகின்றனர்.

மார்க் பொருட்கள் உற்பத்தியை ஆராய்ந்தாலேயே, இதன் தரம் பற்றி உண்மை அறியமுடியும். மார்க் பொருட்கள் மேலான பகிஸ்காரம் என்று இணையதளத்தில் தேடினால், ஆயிரக்கணக்கான கட்டுரைகளைப் பெறமுடியும். பக்கங்கள் இந்த மார்க் உற்பத்திகளின் வண்டவாளத்தை அவை சந்திக்கு கொண்டு வருகின்றது. மாாக் உடுப்புகள், சப்பாத்துகள், தொப்பிகள் என பெரும்பாலனவை மூன்றாம் உலக அடிமைகள் மற்றும் வறிய எழைக் குழந்தைகளின் உழைப்பில் உருவாகுவதை ஆதாரத்துடன் அம்பலமாகின்றது. இதை யாரும் மறுக்க முடியாது. நீ நுகர்வதற்கான பொருளை உன்னை ஒத்த குழந்தைகளின் உழைப்பும், அவர்கள் கையேந்தி பிச்சையாக கிடைக்கும் அற்ப கூலிக்காக உற்பத்தி செய்கின்றனர்?. இதற்கு வெளியில் அற்ப கூலியில் பெண்கள் முதல் மிக குறைந்த கூலியைக் கொடுத்து உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்கான அடிப்படையான மூலப் பொருட்கள், மூன்றாம் உலக சேரிகளில் இருந்து மிக அற்ப தொகைக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. அவற்றையே பின்னால் கவர்ச்சியாக்கி மார்க் பொருட்கள் என முத்திரை குத்தி காசாக்கின்றனர். அத்துடன் உற்பத்திகான இடத்தை மோசடி செய்ய உற்பத்தியான பாகங்களை, மேற்கு நோக்கி நகர்த்தி பின் அதை இணைத்து சந்தையை போலியாக எமாற்றுகின்றனர். இங்கு தரம் என்பது போலியானது. ஒரே இடத்தில் ஒரே கைகள் தயாரிக்கும் ஒரே விதமான பொருளுக்கு, மார்க் முத்திரை குத்தியவுடன் தரமாக காட்டுவது என்பது, சந்தையை கைப்பற்றி வைத்துள்ள கொள்ளையர்களின் கைவந்த கலை. தரம் பற்றி விளம்பரங்கள், மூளையை மூளைச் சலவை செய்த பின்பே இது சாத்தியமாகின்றது. இந்த மூட்டாள் தனத்தை சமூகம் தனது உணர்வாக கொள்ளும் போது, மந்தைக்குணம் இயக்கமற்ற சமூகக் குணமாகின்றது.

குழந்தையின் சமூக அங்கிகாரம் என்ற விடயத்தில், மார்க் பொருட்களை நுகர்தல் என்ற கோரிக்கையை பெற்றோர்கள் அனுமதிக்க முடியாது. ஒரு நெருக்கடியில் அனுமதிக்கும் பட்டசத்தில், எதிர்ப்புடன் கூடிய தொடர்ச்சியான அபிராயத்துடன் தான் குழந்தையை அணுகவேண்டும். சமூக அங்கிகாரத்தை மார்க் பொருட்களால் குழந்தை நிர்ணயம் செய்கின்றது என்றால், பெற்றோரின் எதிர்பார்ப்புகள் சமூக சிந்தனை நோக்கில் இருந்து சரிந்து செல்வதை தவிர வேறு வழியில் குழந்தை உருவாகுவதில்லை. இதை மார்க் என்ற லஞ்சம் மூலம் நிறைவு செய்யும் பட்சத்தில், அன்பையும் சரி குழந்தையின் போக்கையையும் சரி இயந்திர வகையான சமூகக் குழந்தையே பெற்றோர் உருவாக்குவர். அடிப்படையில் குழந்தையின் சுயநலப் போக்கே சமூக கண்ணோட்டமாகும். இது பெற்றோரிடமும் கூட சுயநல நோக்கில் அணுகி, நுகர்வதில் முதிர்ச்சி அடைகின்றது. தனிமனித வாதம் முதன்மை பெற்று, பெற்றோரைக் கூட தனிமனித கண்ணோட்டம் சார்ந்து தனக்கு எதிரான ஒரு சமூக உறுப்பாக்கி தனது சிந்தனைத் தளத்தை மாற்றி அமைக்கின்றது.

## குழந்தைகளின் தமிழ்க் கல்வி தொடர்பாக

குழந்தையின் தமிழ் கல்வி தொடர்பாக ஒரு விளக்கமற்ற சாச்சையை, பொதுவாக தமிழ் சமூகம் எதிர் கொள்கின்றது. பெற்றொரிடையே கற்றல், கற்கக் கூடாது என்ற இரு எதிர் நிலைப் போக்குகள் காணப்படுகின்றது. மறுதளத்தில் கற்றுக் கொடுக்கும் பெற்றோரிடம், குழந்தை நான் ஏன் தமிழைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற கேள்வியை எழுப்புகின்றது. இது பெற்றோருக்கு பதிலளிக்க முடியாத அல்லது தெளிவான விளக்கமற்ற விடயமாக மாறுகின்றது. ஏன் குழந்தைக்கு தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கேள்வியை, எதிர் மறையில் சில பெற்றோரும் எழுப்புகின்றனர்? குழந்தை தமிழை கற்க வேண்டும் என்ற இந்தக் கேள்வியை ஏன் எழுப்புகின்றது? தமிழ் படிக்க சில குழந்தைகள் மறுப்பது ஏன்? பெற்றோர் ஏன் தமிழ் கற்றக் கொடுக்க வேண்டும் என்றும், ஏன் கற்றுக் கொடுக்க கூடாது என்றும் கூறுகின்றனர்?

இவை அனைத்திலும் லாப நட்டக் கணக்கை பொருளாதார எல்லைக்குள் நின்று சிந்திப்பதால் தான், பெருமளவிலான கருத்துகள் கட்டமைக்கப்படுகின்றது. அதாவது இங்கு தமிழ் கற்றல், கற்றுக் கொடுத்தல் என்பதை, பொருளாதார நலன் என்ற எல்லைக்குள்,



படிப்பகம்

www.padippakam.com



லாப நட்ட கணக்குக்குள் உள்ளடங்கிய சிந்தனை முறைதான், தமிழ் கற்றலின் அடிப்படையான தோல்வியாகும். இன்று இது புலம் பெயர்ந்த நாட்டில் மட்டுமல்ல, தமிழை தாய் மொழியாக கொண்ட இலங்கை இந்தியப் பிரதேசங்களில் கூட இதுவே அடிப்படையான பிரச்சனையாகியுள்ளது. அடுத்த 100 ஆண்டில் தமிழ் மொழி அழிந்து விடும் என்ற யூனேஸ்கோவின் அறிக்கை தற்செயலானவை அல்ல. உண்மையில் மொழி பற்றிய கொள்கை, பொருளாதார நோக்கு நிலை சார்ந்து கற்றலினால் என்ன லாபம்? என்ற லாப நட்ட கணக்கு இதற்கு அடிப்படையாகும்.

தமிழைக் கற்றால் என்ன லாபம்? என்ற கண்ணோட்டம், பொதுவாகவே சமுதாயத்தின் அடிப்படையான சிந்தனையாக உள்ளது. இன்றைய உலகில் பொருளைத் தேடும் போட்டியில், தமிழ் மொழி தெரிவதால் எதையும் குறிப்பாக நிர்ணயம் செய்வதில்லை என்ற உண்மை சார்ந்தே தமிழ் அழிகின்றது. தமிழ் திட்டமிட்டே புறக்கணிக்கப்படுகின்றது. தமிழ் வழிக் கல்வி மறுக்கப்படுகின்றது. பெற்றோர் குழந்தை உறவில் சமுதாயத்தின் மேல் மட்டத்தில் இருந்து கீழாக தமிழ் அருகிச் செல்லுகின்றது. பெற்றோர் தமிழ் கற்றுக் கொடுப்பதை அவசியமற்ற ஒன்றாக கருதுகின்றனர். இதையே கற்றுக் கொடுக்கும் மற்றோரு தளத்தில், குழந்தை பெற்றோரை நோக்கி கேட்கின்றது. இந்த பொருளாதார அமைப்பின் உள்ளடகத்தை விமர்சிக்காது உருவாக்கப்படும் தமிழ்க் கல்வி, பிறக்கும் போது கழுத்தை நெரித்து பலாக்காரமாக கொன்றுவிடுவது அதன் இயல்பாகின்றது. குழந்தை பொருளாதார நலன் நோக்கில் நின்று, கற்பதை மறுக்கின்றது. சமுதாயத்தில் கட்டமைக்கும் உறவுகள், நடத்தைகள், செயல்கள் அனைத்தும் இந்த பொருளாதார அமைப்பில் பணத்தை சம்பாதிப்பதற்கு இசைவாக இருக்கும் ஒரே ஒரு காரணம், தமிழ் கல்விக்கு தூக்குப் போட போதுமானது. தமிழ் இந்த சமூக அமைப்பில் பொருளாதாரத்தை திரட்டுவதில், குறிப்பான சமூகப் பங்கை வகிப்பதில்லை. தமிழ் கற்றலில் பொருளாதார நலன்கள் குறிப்பாக இல்லாத எல்லா நிலையிலும், தமிழ் அழிவதை இந்த சமூக சித்தாந்த கண்ணோட்ட எல்லைக்குள் யாரும் தடுக்க முடியாது.

சில குழந்தைகள் இந்த புரிதலுக்கு வெளியில் தமிழ் கற்க மறுக்கின்றனர். இதற்கு அடிப்படையான காரணம் கற்பித்து கொடுக்கும் முறையினால் எற்படுகின்றது. கற்றுக் கொடுத்தல் என்பது, அதன் அடிப்படை நோக்கம் தெளிவுறாத வரை கற்றல் என்பது கடினமாகி விடுகின்றது. கற்பித்தல் என்பது, எதைக் கற்பித்தல் என்பதுடன் தொடர்புடைய பிரதான விடயமாக இருப்பதால், இதை புறக்ணிக்கின்ற இன்றைய கற்பிக்கும் முறை கற்றலுக்கு எதிரானதாக இருக்கின்றது. கற்றுக் கொடுக்க வேண்டும் என்று விரும்பும் பெற்றோர் பொதுவாக, சமூக செயல் தளம் இதை ஒரு மரபாகவும், கலாச்சாரத்தை ஊட்டும் ஊடகமாகவும் இதைக் காண்கின்றனர். தமிழ் என்ற பெயரில் குழந்தையின் தேவைக்குப் புறம்பான திணிப்பாக மாறும் போது, தமிழ் கற்றலில் குழந்தையின் ஆர்வம் தகர்ந்து போகின்றது. குழந்தை இதை ஒரு சுமையாக தேவை இல்லாத ஒன்றாக கருதத் தொடங்குகின்றது.

தமிழ் மொழிக் கல்வியின் அவசியத்தை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் ஒரு மொழியாக, சில ஆயிரம் வருடங்கள் பல மொழி வளங்கள் உடன் நிலைத்து நின்றது எப்படி சாத்தியமானது? இன்று ஏன் அழிகின்றது என்பதை புரியாத சமூக அறிவீனம் தகர்க்கப்பட வேண்டும் இதைப் புரிந்து கொள்வதன் மூலம் தான், கற்றுக் கொடுப்பதில் முழுமையை இனம் காணமுடியும். மறு தளத்தில் தமிழை குழந்தைக்கு கற்றுக் கொடுத்தல் என்பதற்கான, அடிப்படையான அவசியமான காரணத்தை தெளிவாக இனம் காணவேண்டும். அந்த வகையில் தமிழ் கற்றலின் அவசியம் என்ன?

1. பெற்றோருக்கும் குழந்தைக்குமான ஒரே தொடர்பு மொழி தமிழ் மட்டும் தான். அது தான் தாய் மொழியாக இருக்கின்றது. பெற்றொரும் குழந்தைகளும் பேசிக் கொள்ளும் மொழியை குழந்தை நிச்சயமாக தெரிந்த கொள்வது அவசியமான அடிப்படையானது என்ற அடிப்படையில், தமிழ் கற்றல் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இல்லாத எந்த மொழியிலும் குழந்தையை பெற்றோர் முழுமையாக புரிந்து கொள்ள முடியாது. மொழியியல் ரீதியாக தாய்மொழி அல்லாத தொடர்பு வழி, சமூகச் சிதறலை இயல்பாக்கின்றது.

2.இரண்டாவதாக தாய் தந்தைக்குரிய அடியை (பரம்பரை வழியை) குழந்தை தனது நோக்கில் சுயமாக அறிந்து கொள்ள தமிழை கற்றுக் கொடுத்தல் பெற்றொரின் அடிப்படையான கடமையாகும். இதை புறக்கணிப்பது என்பது, குழந்தை எதிர் காலத்தில் பெற்றோரைக் குற்றச் சாட்டும் அளவுக்கு இது அமையும். செய்ய வேண்டிய அடிப்படையான பணி தாய் மொழியை ஊட்டுவதாகும்.

3.தமிழ் ஒரு மொழி என்ற வகையில், அதை கற்றுக் கொள்வதை எதுவும் கட்டுப்படுத்தாது. எனெனின் மொழியின் அறிவு குழந்தையின் பரந்த அறிவை விசாலப்படுத்தும். குழந்தையின் பன் மொழித் திறமை பொதுவாகவே அவசியமானவை மட்டுமின்றி



படிப்பகம்

www.padippakam.com



அங்கிகாரிக்கப்பட்டவையும் கூட. இதில் மற்றொரு உண்மையை நாம் காண மறந்துவிடக் கூடாது. கற்கும் நாட்டு மொழிக்கு வெளியில், வேறு மொழிகளை குழந்தை கற்கும் போது, தமிழை நிராகரிப்பது எந்த வித்திலும் யாரும் நிராகரிக்க முடியாது.

4.அடுத்த பல மொழிகளை கற்றக் கொள்ளும் ஆற்றல், திறன் குழந்தைக்கு இருப்பதால், அதில் தமிழும் ஒன்றாக இருப்பதை தமிழ் பெற்றோர்கள் உறுதி செய்ய வேண்டும்

5. தமிழைக் கற்றுக் கொடுத்தலில் பொருளாதார நலனுக்கு வெளியில் கற்றுக் கொடுதலை உணர்வுபூர்வமானதாக்க வேண்டும். அதைப் பற்றிய அறிவியல் பூர்வமான சிந்தனை வளர்த்து எடுக்கப்பட வேண்டும். இன்னமும் பல காரணங்கள் இருந்த போதும் இவை அடிப்படையானவை, முக்கியமானவை.

பெற்றோர்கள், கற்பிப்பவர்கள், கற்றலை திட்டமிடுபவர்கள் இவற்றை புரிந்து கொள்ளாத வரை தமிழ் கற்றுக் கொடுப்பதில் தவறு இழைப்போம். பொரளாதார நலனுக்கு வெளியில் சிந்தனைத் தளத்தை விரிவுபடுத்தி கற்றலை, கற்பித்தலை ஊக்குவிக்க வேண்டும். இதை செய்யாத நிலையில், கற்கும் குழந்தைக்கு ஏன் கற்கின்றோம் என தெரியாத நிலையில், அதுவே கற்றலுக்கு எதிரான பாரிய எதிர்ப்பாக மாறுகின்றது. சொந்த பெற்றோருடன் உரையாட தமிழ் தேவை என்பதை குழந்தை உணர்வுபூர்வமாக உணரும் வகையில் ஊட்டாப்படாத குழந்தை, தமிழை ஒரு நாளும் கற்காது. புலம் பெயர்ந்த சமூகங்களில் மொழியின் தொடர்ச்சி அதிசயத்தக்க வகையில் பல மொழிக்கு (யூத, அரபு, சீனா மொழி,.... மொழி) உண்டு. அங்கு தாய் தந்தை சொந்தத் தாய் மொழியில் குழந்தையுடன் அனைத்த தொடர்பையும் பேணுவது முரணின்றி நிகழ்கின்றது.


புலம்பெயர் நாட்டில் தமிழ் கற்றுக் கொடுத்தல் என்பது நடைமுறையுடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். முதலில் நிச்சயமாக குழந்தை அன்றாடம் பெற்றோரிடம் தொடர்பு கொள்ளும், அடிப்படையான நடைமுறை தேவையை ஒட்டிய சாதாரண மொழியை கற்றுக் கொடுக்க வேண்டும் சர்வசாதாரணமாக பெற்றோருடனும், சகோதர சகோதரிகளுடன் தமிழில் உரையாடக் கூடிய வகையில், தமிழைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இரண்டு தமிழ் குழந்தைகள் தமக்கு இடையில் பரிமாறும் விடயங்கள் எதுவாகினும், அதை தமிழில் கதைக்கும் வகையில் குழந்தைக்கு சொற்களையும், வசனங்களையும் கற்றுக் கொடுக்க வேண்டும். பெற்றோர் மற்றும் தமிழ் குழந்தைகள் தமக்கு இடையில், தமிழ் உரையாடலை இலகுவாக பேசிக் கொள்ளும் வகையில் கற்றுக் கொடுத்தல் வேண்டும். இந்த முறை தமிழ் மொழியில் மீதான ஆர்வத்தையும், ஒரு பாய்ச்சலையும் குழந்தைக்கு ஏற்படுத்தும். இதை வளம்படுத்த இலகுவான வாழும் சூழலுடன் தொடர்புடைய சிறிய பாடல்களை குழந்தை பாடும் வண்ணம் உருவாக்க வேண்டும். இவை வெற்றி பெறும் போதே, மொழியை சரளமாக குழந்தை கையாளும் நோக்கில் இருந்தே, எழுத்தை எழுதுவதும், இலக்கணங்களை கையாளும் நடைமுறை மெதுவாக குழந்தைக்கு உருவாக வேண்டும்.

தேவாரம், திருக்குறள் என்று பெரியவர்களே புரிந்துகொள்ள முடியாத, பல ஆயிரம் வருடத்துக்கு முந்திய தமிழை பாடமாக்க வைப்பதும், நிற்பந்தமாக ஒப்புவிக்கும் கல்வி படுதோல்வி அடைவது தவிர்க்க முடியாது. பெரியவர்களே அவற்றை கற்க ஆர்வமற்று புறக்கணிப்பதுடன், கற்றுக் கொள்ள மறுக்கின்ற ஒரு விடையமாக உள்ள நிலையில், பண்டிதர்களும் அறிவாளிகளும் கற்கின்ற விடையமாக உள்ள நிலையில், அதை குழந்தைக்கு திணிப்பதால் எந்தக் குழந்தை தான் தமிழைக் கற்றுக் கொள்ள ஆர்வமாக முன்வரும்.

**- பி. இரயாகரன்**

மேலும் இது போன்ற பல சமூக விடயங்களை உள்ளடக்கிய, அதாவது வர்க்கம், சாதியம், பெண்ணியம், தேசியம், நிறம், மதம், பண்பாடு, கலாச்சாரம், இசை, சுற்றுச்சூழல் .... என பல நூறு தமிழ்க் கட்டுரைகளை கீழ் உள்ள இணையத்தில் பார்க்கமுடியும்.

**இணையம் : WWW.TAMILCIRCLE.NET**





படிப்பகம்

www.padippakam.com



## வேலணை மத்திய மகா வித்தியாலயம் பிரான்சுக் கிளையின் 2003/2004 ம் ஆண்டுக்கான வரவு செலவு விபரம் (01.07.2003 - 30.06.2004)

| நன்கொடை / சந்தா | |
|---|---|
| திரு. வேலும்மயிலும் | 1000,00€ |
| திரு. நா.மகேந்திரன் | 700,00€ |
| திரு. விமலேந்திரன் | 50,00€ |
| திரு. சு.பாஸ்க்கரன் (EXACT EXCHANGE) | 200,00€ |
| திரு. கு. ஸ்ரீஸ்கந்தராஜா (EXACT EXC.) | 200,00€ |
| திரு. ஞானகலாதரன் (CEY FRANCE) | 100,00€ |
| திரு. செ.சிறிதரன் (SRI MAHAL) | 200,00€ |
| திரு. கு.விக்னராஜா (SRI MAHAL) | 100,00€ |
| நகைமாளிகை KMS (BIJOUTERIE) | 10,00€ |
| திரு. யா.பாலகிருஷ்ணன் | 500,00€ |
| திரு. க.சாந்தலிங்கம் | 200,00€ |
| திரு. சி.பாலச்சந்திரன் | 150,00€ |
| திரு. மு.சிவதாஸ் | 50,00€ |
| திருமதி. பா.சகுந்தலாதேவி | 150,00€ |
| திரு. அ.ஜெயகுகன் | 250,00€ |
| திரு. க.வாசுதேவன் | 50,00€ |
| திரு. இ.சதானந்தன் | 50,00€ |
| திரு. கே.விசாகன் | 250,00€ |
| திரு. ப.கந்தப்பிள்ளை | 50,00€ |
| திரு. தவச்செல்வம் | 50,00€ |
| திரு. அ.ஜெயகுகன் | 50,00€ |
| திரு. யா.பாலகிருஷ்னண் | 50,00€ |
| திரு. செ.தேவன் | 100,00€ |
| திரு. ப.கந்தப்பிள்ளை | 100,00€ |
| திரு. சு.கருணாநிதி | 50,00€ |
| திரு. தி.சிவநாதன் | 100,00€ |
| திரு. மா.வசந்தன் | 100,00€ |
| திரு. மு.கேதீஸ்வரன் | 250,00€ |
| திரு. த.சந்திரகுமார் (KUMAR'S SHOP) | 300,00€ |
| திரு. கோ.கனகராஜா (AKIL) | 100,00€ |
| திரு. சு. விமலேந்திரன் | 150,00€ |
| திரு. சோ. கந்தசாமி | 50,00€ |
| மொத்தம் | 5710,00€ |

| வரவு | |
|---|---|
| நன்கொடை / சந்தா | 5710,00€ |
| மொத்த வரவு | 5710,00€ |
| 30.06.2003 இல் கை இருப்பு | 4298,61€ |
| மொத்தம் | 10008,61€ |

| செலவு | |
|---|---|
| பொதுச்சபை கூட்ட மண்டபவாடகை | 620,00€ |
| விழா பரிசில்கள் | 110,00€ |
| Copie la Chapelle போட்டோ கொப்பி | 308,61€ |
| பாடசாலை நூல் நிலையம் | 4870,00€ |
| இந்தியாவில் இருந்து புத்தகங்கள் | 619,00€ |
| வங்கி கொமிசன் (La Poste) | 4,10€ |
| **மொத்த செலவு** | 6531,71€ |
| 30.06.2004 இல் கையிருப்பு | 3476,90€ |
| **மொத்தம்** | 10008,61€ |



படிப்பகம்

www.padippakam.com



# முடிவெடுத்தலுக்கான சுய புரிதலை வளர்த்துக்கொள்ள வேண்டும்

மனிதனின் வளர்ச்சிக்கு அடிப்படை திறன் முடிவு காணும் திறன், முடிவு எடுக்கும் திறன் ஒரு கலை, சித்திரமும் கைப்பழக்கமும் என்பது போல. பிரச்சினைகள் எப்போதும் மனிதனுடன் கூட பிறந்ததல்ல அதைச் சரியான முடிவெடுப்பதன் மூலமே நம் எதிர்காலம் அமைந்துள்ளது. ஒரு சிற்பி சிலை செய்வது போலவே நம் வாழ்க்கையை உருவாக்கி கொள்ள வேண்டும். வாழ்வில் சரியான முடிவெடுப்பது என்பது மனிதனுடன் கூடப் பிறந்தது அல்ல. அவரவர் தமது சிந்தனை ஆற்றலை வளர்த்துக் கொள்வதிலும் புரிந்து கொள்ளலுமே தங்கியுள்ளது.

முடிவு எடுப்பது தான் வாழ்க்கையின் திருப்புமுனை, வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் என்னென்ன முடிவெடுத்தோம் என்பதைப் பொறுத்துத் தான் நம் வாழ்க்கை அமைகின்றது. நமக்கு வாழ்க்கையில் கிடைக்கின்ற சில வெற்றிகளையும் ரசித்தது மகிழப் பழக வேண்டும்.உதாரணமாக உயர்ந்த சாதிக்காரப் பையன் ஒரு தாழ்ந்த சாதிப் பெண்ணெ காதலித்தான் பையன் வீட்டில் காதலை ஏற்கவில்லை. முடிவு இருவரும் தற்கொலை செய்து கொண்டார்கள். இவர்கள் சரியான முடிவுக்கு போயிருக்க மாட்டார்கள். போராடி காதலில் ஜெயித்திருப்பார்கள். முடிவெடுக்கும் வாய்ப்பு நம்மிடமே இருக்கின்றது. அதை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். சிந்தனை செய்து முடிவு எடுக்க வேண்டும். கல்வியாக இருக்கட்டும், தொழிலாக இருக்கட்டும் எல்லாம் நாம் கையிலே உள்ளது.

சில முடிவுகள் தான் நம் கையில் இருக்கின்றன. சில முடிவுகள் நம் கட்டுப்பாட்டுக்கு அப்பால் இருக்கின்றன. நாம் யாரைத் திருமணம் செய்து கொள்வது, நமக்கு விரும்பின கல்லூரியில் இடம் கிடைப்பது எல்லாம் நமது கையில் இல்லை. அதெல்லாம் நம் அளவைக்கு அப்பாற்பட்டது.
கோபமாக இருக்கும் போது அவசரமாக முடிவு எடுக்ககூடாது சில மணி நேரம் கழித்தே முடிவு எடுக்க வேண்டும். பிரச்சினைகளை கொஞ்ச நேரத்துக்கு ஆறப்போட்டு விட்டு அதைப் பற்றி எல்லாக் கோணங்களிலும் அலசி ஆராய வேண்டும். நமக்கு நம் கொள்கைகளில் தெளிவு இருக்க வேண்டும். சில சமயம் நமக்கு போதுமான தகவல்கள் இல்லாமல் முடிவு எடுக்க கூடாது. அது ஆபத்தில் முடிந்துவிடும். முடிவு தவறாகப் போனாலும் அதை உடனடியாக மாற்றிக் கொள்ள வேண்டும். மேல் நாடுகளில் நிர்வாக அறிவின் முக்கிய பகுதியாக முடிவை கருதி பணம் கொடுத்து நிபுணர்களை பயன்படுத்துகின்றனர். எல்லாவற்றையும் தாங்கலேளமுடிவு எடுக்க வேண்டுமென்று எண்ணுபவர்கள் சந்தேகம் பிராணிகள், பிறர் செய்தால் தவறு வந்துவிடுமோ தம்மைக் காட்டிக் கொடுத்து விடுவார்களோ என நினைப்பவர்கள் குடும்ப நிர்வாகமாக இருக்கட்டும், அரசு நிர்வாகமாக இருக்கட்டும் கம்பனி நிர்வாகமாக இருக்கட்டும் பரந்த நோக்கில் முடிவு எடுக்க வேண்டும் அதை அதை அந்தந்த இடத்தில் வைத்துப் பார்த்து முடிவு எடுக்க வேண்டும்.

முடிவெடுக்கும் வழிமுறைகளை பெரும்போக்காக 5 பிரிவாக சில அறிஞர்கள் பிரித்துள்ளனர்.

01 சூழ்நிலை
02 நமது லட்சியம்
03 மாற்று வழிகள்
04 மாற்றுவழிகளால் விளையும் பலனும் கஷ்டங்களும்
05 செயல்

சூழ்நிலை என்பது என்ன? ஏன் இந்தப் பிரச்சினை உருவானது? இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு மாற்றுவழிகள் இருக்கின்றனவா என்று ஆராய வேண்டும். மாறி வரும் சூழ்நிலை முடிவை பாதிக்குமா? சூழ்நிலை பிற மனிதர்களை பாதிக்குமா என ஆராய்தல்.



படிப்பகம்

www.padippakam.com



இலட்சியம் என்பது குறுங்கால, நிண்டகால இலட்சியம் என இரண்டு வகைப்படும். எனது திறமைகள், பலவீனங்கள் என்ன என ஆராய வேண்டும். இலட்சியத்துக்கு தடையாக இருக்கின்றவற்றை ஆராய வேண்டும்.
வேறேந்த நமது பிரச்சினையை சமாளித்துக் கொள்ள வேண்டுமென ஆராய வேண்டும்.

பலன்கள்
மாற்றுவழிகளை கடைப்பிடித்ததால் என்ன விளைவுகள் நேரும்? சாத்தியமானதா? இவை நாம் விரும்பும் பலனைக் கொடுக்குமா? நஷ்டம் ஏற்படுமா? என பல வழிகளில் ஆராய்தல்.

செயல்
நமது செயல்களில் தான் முடிவு தங்கியுள்ளது. நம் வாழக்கை நம்மிடம் தான் தொடங்குகிறது. நமது உணர்வுகள், நமது கொள்கைகள், நமது அனுபவம், நமது மனோபாவம் அவற்றின் விளைவில்தான் முடிவு பிறக்கிறது. முடிவெடுப்பது நமது பொறுப்பு அதை நாம் தான் எடுக்க வேண்டும். அடுத்தவர்களை எதிர்பார்க்ககூடாது. ஏன்னென்றால் நம்வாழ்கை முழுவதுமாக அடுத்தவரை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் இதனால் எமது வளர்ச்சி தடுக்கப்படுகிறது. ஒரு முறை தவறாக முடிவெடுத்தாலும் அடுத்த முறை சரியாக முடிவெடுக்க கற்றுக் கொள்கிறோம். முடிவெடுக்கும்போது உணர்ச்சிக்கும், அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதிகம் உணர்ச்சிக்கு முக்கியம் கொடக்ககூடாது. சிலப்பதிகாரத்தில் பாண்டிய மன்னன் கோவலன் கையில் சிலம்பைக் கண்டதும் தன் மனைவியின் சிலம்பு என உணர்ச்சி வசப்பட்டு எடுத்த முடிவு கண்ணகி சீறியெழுந்து என் சிலம்பு மாணிக்க கற்களால் ஆனாது என உடைக்கின்றாள் அரசியின் சிலம்பு முத்துக்களால் ஆனாது என்று கூறி சிலம்பை உடைக்கிறாள். அரசனுக்கு தவறை எடுத்துக் கூறுகின்றாள். நீதிக்காக அறிவுடனும், உணர்ச்சியுடனும் அவள் போராடுகிறாள். முடிவு காண்பதற்கு பல்வேறு வழிகள் உள்ளது என்பதை முதலில் புரிய வேண்டும்.

ஒரு பிரச்சினைக்கு வழி தேடும் போது நாம் இது முடியாது என்று எந்த வழியையும் விடக்கூடாது மேலோட்டாமாகப் பார்க்கும்போது சில வழிகள் இயலாததாகவும் விசித்திரமாகவும் இருக்கும். ஆழ்மனத்துடன் எல்லா வழிகளையும் அனுக வெண்டும். இலட்சியத்தை மாற்றியமைக்க கூடாது. ஒரு இலட்சியத்தை அடைய வேண்டும் என்று முடிவு எடுத்தோம் என்றால் அந்த முடிவில் நிற்க வேண்டும். இலட்சியத்துக்காக போராட வேண்டும். பயமும், சந்தேகமும் ஒருவரிடமும் இருக்ககூடாது. பயத்தாலும், சந்தேகத்தாலும் யாரும் எதையும் சாதித்ததில்லை

நம்மை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அதிஷ்டத்ததை நம்புகிறார்கள். இதனால் பலர் ஏமாறுகின்றனர். அதிஷ்டத்துக்காக காத்திராமல் செயல்பட்டு கொண்டிருக்க வேண்டும். மாறுதல்கள் பொதுவாக வளர்ச்சியின் முன்னோடிகள் நாம் மாறுதலுக்கு அஞ்சக் கூடாது மாறி வரும் சூழ்நிலைகளை ஏதிர்பார்க்கவும் அதற்கேற்ப இயங்கவும் கற்றுக் கொள்ள வேண்டும்.இந்த உலகத்தில் நாம் விரும்பியதெல்லாம் கிடைக்கப் போவதில்லை. இ வற்றில் சில விடயம் நமது சக்திக்கு உட்பட்டது. சில விஷயம் சக்திக்கு அப்பாற்படடட்டது. நம்மால் முடிந்ததை செய்து விட்டு முடிவில் ஆண்டவன் விட்ட வழி என ஏற்றுச் செயல்பட வேண்டும். வாழ்க்கையில் நம்மை இடறி விழச் செய்யும் கற்கள் நிறையவுண்டு அதை நம் படிக்கட்டுக்களாக மாற்றி நிர்பந்தங்கள், நெருக்கடிகள் தவிர்த்து ஒரு வரையறைக்குள் நிற்க்காமல் மீற அதாவது மனத்தால் மீறி, பின் தடைகளை மீறி உழைப்பதற்கான திட்டமிடலையும், துணிச்சலையும் வளர்த்து எமது இலட்சியத்தை அடைய வேண்டும்.

நாம் எடுத்த முடிவுகளுக்கு நாம் எழுந்து நிற்க வேண்டும். வாதாட வேண்டும். எமது சொந்த வாழ்க்கைக்கு நாம் தான் தலைவன் மற்றை யாரையும் தலைவனாக அனுமதிக்க கூடாது. பெற்றோர் உறவினர்கள் சொல்கிறார்கள் என்று அவர்களது ஆலோசனையை முடிவாக எடுக்க கூடாது. அதை கேட்டு விட்டு நாமே முடிவு எடுக்க வேண்டும். அத்துடன் நாமே பொறுப்பையும் ஏற்க வேண்டும்.


**சொர்ணலிங்கம் சுதர்சனா**
பழைய மாணவி
வே.ம.ம. வித்தியாலயம்



படிப்பகம்

www.padippakam.com





# தேடல் வலி

— ஒரு பார்வை

ஐரோப்பிய தமிழ் இலக்கிய பரப்பினுள் மிக அண்மித்த வரவாக கவிஞை ஜெயந்திசாம்சனின் தேடல்வலி கவிதைத்தொகுப்பு பிரான்சிலிருந்து வெளிவந்திருக்கிறது. பெண்களின் கூட்டான கவிதை, சிறுகதைத் தொகுப்புகள் ஏற்கனவே வெளிவந்திருப்பினும் ஒரு கவிஞையின் தனித் தொகுப்பு இதுதான் முதலாவதெனச் சொல்லலாம்.

பெண்களின் ஆளுமைத் திறமைகளை வெளிப்படுத்த மிகச் சாத்தியமான ஐரோப்பியச் சூழ்நிலையில் நம் பெண்களின் வெளிப்பாடுகள் போதாமையாகவுள்ள இன்றைகளில் தேடல்வலியின் வரவு மிக முக்கியமானதாகப் படுகிறது.

தேடலில் இருக்கின்ற வலி தேடுபவர்களால் மட்டுமே தெரிந்துகொள்ள முடியும். மனிதனின் தொடரான தேடுதலே வாழ்வெனக் கொள்ளப்படுகிறது. சாதாரண பெண் ஒருவரின் தேடல்வலியும் வேதனையும் சொல்லப்பட்டிருக்கிறது. எளிமையான சொற்றொடர்களும் நேரிடையாக கருத்தைச் சொல்லும் பாங்கும் எல்லோரையும் வாசிக்கத்தூண்டுகிறது. எல்லாக் கவிதைகளும் ஒரு பிரதேசத்திற்குரிய அல்ல ஒரு இனத்திற்குரிய தார்மீக மரபுப்பண்புகளை பின்னணியாகக் கொண்டவையல்ல, முழுவுலகு தழுவிய சராசரிப் பெண்களின் அகவேதனைகள் அழுகுரல்கள், கோபங்கள் ஆணாதிக்கத்திற்கு எதிரான சண்டித்தன தன்மையில் அமைந்திருப்பது தனிச்சிறப்பு.

நூலாசிரியை பிரான்சில் தொலைக்காட்சி, வானொலி ஊடகங்களில் பணியாற்றிக்கொண்டிருப்பதால் பல்வேறு அனுபவங்களையும் பன்முகச் சிந்தனைகளையும் குவித்து பெண் நிலைவாதம் பற்றிய தெளிவான கருத்துக்களைக் கவிதையாக்க முடிந்திருக்கிறது. சில பெண்நிலைவாத முன்னெடுப்பாளர்கள் பிரச்சாரர்களின் பேச்சுக்களில், எழுத்துக்களில், பிள்ளை பெறுதல், ஆண்களால் சுமத்தப்படும் சுமை என்றும் இதுவும் பெண் ஒடுக்கு முறையின் அங்கமெனவும் எழுந்தமானமாக விதைந்துரைக்கப்படுகிறது. இப்படி ஆழமான, பரந்த பார்வையற்ற கருத்துக்கள் இத்தொகுப்பினுள் இல்லாதது கவிஞையின் பார்வையை புலப்படுத்துக்கிறது.

பிள்ளை பெறுதல் அதாவது உற்பத்தி உறுப்பு இருப்பவருக்குப் பெயர்தான் பெண். பிள்ளை பெறுதல் என்பது வெளியொருவரால் சுமத்தப்படும் சுமையல்ல. இது ஒவ்வொரு பெண்ணினதும் கடமையாக இருக்கிறது. இந்தக் கடமையை சுமையாக உருவகித்து சுமையோ சுமை எனக் கண்மூடித் தனதாக குத்திமுறியவில்லை இத்தொகுப்பினுள்.

ஒரு பெண் தாய் ஸ்தானத்தில் நின்று தாய்க்குணவியல் புகழுக்குள்ளிருந்து நோக்குகையில்தான் ஆணாதிக்கத்தின் பகுத்தாய்வையும், ஒடுக்குமுறையின் வேறுபாடுகளையும் தெளிந்துணர்ந்து எடுத்துச் சொல்ல முடியும். ஒரு தாயின் வாழ்பனுபங்களூடாக பெண்ணின் தேடலின் தார்ப்பரியங்களை தார்மீகங்களை அழகாக இத்தொகுப்பினுள் கோவைப்படுத்தப்பட்டிருக்கிறது.

'நாங்கள்' என்ற கவிதையின் இறுதியில் தன் எடுத்தலை அறுதியிட்டு அடித்துச் சொல்லும் கருத்து இப்படி அமைகிறது.

நாங்கள் நாளைய விடியலில்
உதிர்ந்துபோகும் நட்சத்திரங்களல்ல நாளைய விடியலில்
எழுந்து நிற்கும் சூரியன்கள்



படிப்பகம்

www.padippakam.com



*'அம்மாவிற்கு ஒரு கடிதம்'*
*'மகளுக்கு பதில் கடிதம்'*

*இந்த இரண்டு கவிதைகளிலும் அம்மாவிடத்திலிருந்து மகளும் மகளிடத்திலிருந்து அம்மாவும் பல விடயங்கைளக் கற்றுக்கொள்ளுகின்றனர். சுதந்திர அடிமைகள் கவிதையைப் படித்து முடிக்கும்போது களமாடும் ஒரு கவிதையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. பெண்பிள்ளையைப் பெற்றால் பூப்புனித நீராட்டு விழா, பரதநாட்டிய அரங்கேற்றம் இரண்டு விழாக்களையும் செய்து பெற்றோர்கள் சான்றிதழ் எடுக்கவேண்டுமென்ற கட்டாயம் எந்த அரசியல் சட்டத்தில், சமூகச்சட்டத்தில் இருக்கிறதோ தெரியாது. இந்த இரண்டையும் செய்த சில பெற்றோர்கள் முகவரி இல்லாமல்கூட போயிருக்கிறார்கள். இதற்கு எதிர்த்தாக்குதல் செய்து கல்லில் தானியத்தை விதைக்காமல் தானே தண்டனையைத் தீர்ப்பாக்கியிருக்கிறார் பின்வருமாறு*

*அல்லென்றும் பாராது பகலென்றும் பாராது*
*அந்நியன் அடிமையாய் அடிபட்டு உழைத்து*
*அம்பதினாயிரம் அரங்கேற்றத்திற்கு*
*அறுபதினாயிரம் பூப்புனித நீராட்டிற்கு*
*வயதின் வளர்ச்சிக்கு வாரி இறைக்கின்றோம்*
*குழந்தையாகவே பெண் இருந்து விட்டால்*
*குழப்பங்கள் ஏதுமில்லை. . .*

*இத்தொகுப்பினுள் பெண்களின் வேண்டுதலின் உண்மைகள் உயிர்த்து நிற்கின்றன. அவா விளைந்து கிடக்கின்றது. கோபங்கள் எரிந்து கொண்டிருக்கன்றன. இது மாதிரியானவை இன்னும் வருமென எதிர்பார்க்கன்றோம்.*

**- வேலணையூரான்**

## புதிய ஆத்திசூடி

நான் ஒரு புது ஔவை
அடங்கிட நடந்து ஆக்கிப்போட்டு
இச்சை கொண்டோர்க்கு ஈன்றுகொடுத்து
உரத்துப் பேசாது ஊமையாயிருந்து
எப்பொழுதும் எந்தப்பொழுதும்
ஏறிமிதிக்கும் ஏதிலியாக்கி
ஐந்து போல் வளைந்து கொடுத்து
ஒவ்வாது பேசும் கருத்துக்கெல்லாம்
ஓம்...ஓம் என்று தலையசைத்து
ஔவியம் பேசாது ∴ போல் என்றும் நீ
அடுப்புக்கல்லே

இப்படியே நீ இருந்தால்
உனக்கும் எனக்கும் எவர்க்கும்
சந்தோசம் சமாதானம் சமத்துவம்
இதை நீ மீறிவிட்டால்
ஐயகோ..என்னென்ன வசைமொழிகள்

அடங்காப்பிடாரி ஆணவக்காரி
இல்லத்துப்பேய் ஈணத்தெரியாத மலடி
உதவாக்கரை ஊதாரி
ஒன்றும் ஏணிப்படிகள், ஏனிப்படி
ஐந்து போல் வளைய வேண்டாம்
ஒன்று போல் நிமிர்ந்து நில்
ஓயாது நிந்தி நிந்திப்பவர்களை

ஔவியம் பேசு, தேவைப்படும்போது
∴ போல அடுப்புக்கல்லாய் நீயிருந்தாலும்
அதற்குள் இருக்கும் அக்கினிக் குஞ்சிலிருந்து
ஜனிக்கும் ஒரு பொறி போதும் பெண்ணே?

**- ஜெயந்தி சாம்சன்**

## தூ ர த் தி ல்

(பிரெஞ்சில் படித்த தியெத்தியக்கவிதை)

தமிழில் க. வாரணி
CE2


துாரத்தில் பார்த்தேன்
ஏதோவொன்று அசைந்து கொண்டிருந்தது
நான் கிட்ட நெருங்கினேன்
அது ஒரு மிருகம் போல்த் தெரிந்தது
நான் மேலும்
கிட்ட நெருங்கினேன்
ஒரு மனிதனைப் போல்த் தெரிந்தது
மேலும் கிட்ட நெருங்கினேன்
அவன் என் சகோதரனாயிருந்தான்.



படிப்பகம்

www.padippakam.com






# மாயைச் சுவரின் தகர்ப்பு

- விக்னா பாக்கியநாதன் -

மாலை நான்கு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. கதிரவன் தனது வெப்பத்தின் உக்கிரத்தைக் குறைப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தான். கோடைகாலம் என்பதால் பார்வையைச் செலுத்திய இடமெல்லாம் நிர்மலமான வெய்யில் எறித்துக் கொண்டிருந்தது. சிறுவர்களுக்கு ஒரே கும்மாளம். மனம் போனபடி தத்தம் விளையாட்டுகளில் ஈடுபட்டிருந்தனர். எம்மினத்துச் சிறுவரும்,ஜேர்மனி துருக்கி மொறோக்கோ சிறுவர்கள் எல்லோரும் சேர்ந்து எதுவித மனவேறுபாடுமின்றி துவேசம் இன்றி கூக்குரலிட்டு கரகோஷமிட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

தனது வீட்டுவிதானத்தில்(பல்கணி) நின்று சிறுவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் கபிலன். தன்னையொத்த சிறுவர்கள் வெளியில் நின்று விளையாடுகின்றார்கள், அது மட்டுமல்ல

தனது நண்பர்களான சுஜீவன், ஷறிகன், சந்தோஷ், துஷாந், ராகவி, சனுஜா ஆகியோரும் விளையாடுவதைக் கண்டு பெருமூச்சுவிட்டான் கபிலன். இவனுக்கு வயது பன்னிரெண்டு ஆகின்றது. அவனது தமையனுக்கு வயது பத்தொன்பது. முதற் பிள்ளை பிறந்து ஏழு வருடங்களுக்குப் பின்பு, ராதிகா சந்திரமோகன் தம்பதியினருக்கு செல்லப்பிள்ளையாகப் பிறந்தவன் கபிலன். அதனால் கூடிய செல்லமும் கூடிய கட்டுப்பாடும் கபிலனுக்கு இருந்தன. ஆனால் தமையன் சுகிர்தனுக்கோ சுதந்திரமாக எங்கும் போய் வர அனுமதி. அதனால் அவன் நண்பர்கள் சந்திப்பு. வீட்டுவேலை உதவி விளையாட்டு என வெளியே போய்விடுவான்.

கபிலனுக்கோ அதிக செல்லமும், அதிக கட்டுப் பாடும் வெறுப்பாக இருந்தது. வெளியே நிற்கும் சிறுவர் அவனை அழைத்த போது, கபிலன் கவலையுடன் என்னால் வெளியே வரமுடியாது. “அம்மா வெளியே போக வேண்டாம் என்று சொன்னவா. அவ அல்லது அப்பா வந்தவுடன் வருகிறேன்“ என ஒரு நப்பாசையில் கூறினான். ஆனால் நேரம் போய்க் கொண்டிருந்தது. தாயின் வரவை எதிர்பார்த்து எதிர்பார்த்துச சோர்ந்து சோபாவில் உறங்கிவிட்டான். கபிலன் இப்படி ஒரு தடவை அல்ல. பல தடவைகள் ஏமாந்திருக்கிறான். பிஞ்சுமனம் தானே. தாமதித்து வந்த தாயின் கையிலுள்ள ஏதாவது அன்பளிப்புப பொருளால் நடந்தவற்றை மறந்து விடுவான். ஆனால் இப்படியான உள்மன ஏமாற்றம் விபரீதமாகவும் முடியலாம் என்பதைப் பலபெற்றோர்கள் உணரத் தவறி விடுகின்றனர்.

ராதிகா சத்திர மோகன் தம்பதியினர் ஜேர்மனியிலே வதிவிட உரிமை பெற்றபடியால் உள்ளத்தளவில் ஜேர்மனியராகவே மாறிவிட்டனர். என்று தான் சொல்லமுடியும். மூத்தமகன் சுகிர்தனையும் அவனது விருப்பு வெறுப்புக்களை அவனது முடிவிலேயே விட்டுவிட்ட விசித்திரக்குடும்பமாக வாழ்ந்தனர். ஆனால் கபிலனின் வளர்ப்பு முறையில் கட்டுப்பாடு வைத்தனர். காரணம் அவனது சிநேகிதர்களில் பெரும்பான்மையோர் தமிழ் இனத்தவர்கள் என்பதாலாகும். தமிழ்ச் சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடினால் ஜேர்மன் பாஷையை மறந்து விடுவான் என்றோ, நவநாகரீகமாக வாழமாட்டான் என்றோ ராதிகாவுக்கு போலிமோகப் பிரேமை. கபிலனோ தாயின் மனோபாவத்திற்கு எதிர்மாறாக, வெளியேயும். பாடசாலையிலேயும் தமிழ் நண்பர்களுடனே சேர்ந்து செல்வது, விளையாடுவது எல்லாம் ராதிகாவுக்கு தெரிந்திருக்க நியாயம் இல்லை. தமிழிலே கபிலனுக்கு ஆர்வம் ஏற்பட தமிழ் நண்பர்களை கேட்டு அறிந்து வளர்த்துக் கொண்டான் தமிழை.

ஒரு நாள் தாயிடம் தனது தமிழ் படிக்கும் விருப்பத்தைத் தெரிவித்த போது “உனக்கு ஏன் தமிழ்? நீ இங்கு பிறந்தனீ! இங்குதான் வாழப்போகிறாய்! ஜேர்மன் பிள்ளைகள் போல எல்லா உரிமைகளும் உனக்கு இருக்கு“ பேசாமல் ஜேர்மன் படிப்பில் கவனம் வை! என அதட்டி வைத்தாள்! இச்சம்பவத்துக்குப் பிறகு தமிழ்ப்படிப்பு பற்றி கபிலன் தாயாருடன் பேச்சு எடுப்பதே இல்லை.

ஆனால்... ராதிகா சந்திமோகன் விழுந்து விழுந்து தீபம் தொலைக்காட்சி யையும், மறுநிமிடம் ரி.ரி.என்



படிப்பகம்

www.padippakam.com



தொலைக்காட்சியையும் மாறி மாறிப் பார்ப்பார்கள். இது இயலாமைதான். பற்று அல்ல பொழுது போக்குக்கு என தமிழ்த் தொலைக்காட்சி பார்ப்பார்கள் ஜேர்மனிமொழி சரிவரத் தெரிந்தாற் தானே ஜேர்மன் படங்கள் பார்ப்பதற்கு? இது கபிலனுக்கு விசித்திரமாக இருந்தது.

தாய்மொழி தமிழ் என்றும், தாயகம் தமிழீழம் என்றும், அங்:குள்ள நிலைமைகள், எல்லாவற்றையும் தன் தமிழ் நண்பர்கள் வாயிலாகக் கேட்டறிவான் கபிலன். அவனது நண்பர்களுள் இருவரான ஷறிகனும், சுஜீவனும் நாங்கள் கட்டுரை எழுதப் போகிறோம். வசனங்கள் எழுதப் போகிறோம் என்று சில வேளைகளில் விளையாட்டை இடையில் நிறுத்திப் போய் விடுவார்கள்.கபிலனுக்கோ இது புரியவில்லை. மற்ற நண்பர்களான துஷாந், ராகவி, சனுஜா ஆகியோரை விசாரித்தபோது...

சனுஜா- உனக்குத் தெரியாதா கபிலன்? ஒரு தமிழ் வானொலி. அதில் "சிறுவர் களஞ்சியம்" என்று சிறுவர் நிகழ்ச்சி. ஒவ்வொரு நாளும் நடக்கும்...அதுக்கு எழுதப் போகினம்.

-என்ன அது? வானொலியா?

-அதுவா? உனக்குப் புரியாதா? அது... வானொலி என்டால் றேடியோ."தமிழ் ஓசை" என்ற றேடியோவில் ஒவ்வொரு நாளும் காலையில் எங்கட நேரம் 8:30க்கு"சிறுவர்களஞ்சியம்" வரும் கேட்கலாம்.

-அப்படி என்றால் நானும் கேட்டுப் பார்க்கிறன்...

-நீர் தானே சொன்னீர்? தமிழ் கதைக்க, படிக்க அம்மா விடமாட்டா என்று அப்ப எப்பிடி றேடியோ கேட்பீர்?

-ஓ...ஓ...உண்மைதான். அம்மா அப்பா... எல்லோரும் எனக்கு காலைச் சாப்பாடு, பால் எல்லாம் மேசையில வைத்து விட்டு... 8:30 மணிக்குப் போய்விடுவார்கள் வேலைக்கு. பிறகு நான் 8:30க்குப் போட்டுக் கேட்டுப் பார்ப்பேன்.

-உனக்குப் புறோக்கிறாம் பிடிக்கத் தெரியுமா?

-எனக்குத் தெரியாது அண்ணாவைக் கொண்டு புறோகிறாம் எடுப்பன். அவன் அம்மாவுக்குச் சொல்லமாட்டான். அவனுக்கு இதைவிட அதிகவேலை வெளியிலை இருக்கு. ஒகே உனக்கு வெற்றி கிடைக்கட்டும்! எங்கள் வாழ்த்துக்கள்!!

மறுநாள் கபிலன் தனது தமையனுடன் சேர்ந்து தமிழலை வானலையை எடுத்து லண்டன்ரைம் நிகழ்ச்சிகளை செவிமடுத்தான். நூறுக்கும் அதிகமான சிறுவர்கள்
பங்குபற்றுவதையும் அவர்களது பெயர்கள் வானலையில் வெளிவருவதையும் அறிவிப்பாளர்கள் குழந்தைகளோடு குழந்தைகளாக நின்று செயற்படுவதையும் பிறந்த நாள் வாழ்த்து தெரிவிப்பதையும் பரிசில்கள் பெறுவதையும் நேயர்கள் பாரட்டுவதையும் கேட்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தான்.

கபிலன் தானும் பங்கு பற்ற வேண்டும் என ஆசைப்பட்டான். பாடசாலை இடைவேளை நேரங்களில் "லண்டன்ரைம்" பற்றிக் கலந்து உரையாடுவான். எமது தாயகம் பொழுது போக்கு பெற்றோர் பிறந்த ஊர்கள் விரும்பும் பண்டிகை பொதுஅறிவு என்பவற்றை ஒவ்வொரு நாளும் "இலண்டன்ரைம்" மில் கேட்டு அறிந்து கொண்டான். தானும் எழுதி அவனது பெயரும் வானலையில் வந்தது. இவ்வாறான இவனது சுய ஆர்வமும் அறிவும் தமிழில் நல்ல வளம் கண்டது. தீபம் தொலைக்காட்சியையும் பார்த்து தனது சொல் வளங்களையும் பெருக்கிக் கொண்டான். இதற்கெல்லாம் ஒரு வாய்ப்பாக பெற்றோர் வேலைக்குச் சென்றமை இருந்தது. இந்த நேரத்தை என்னென்ன வழிகளில் பிள்ளைகள் பயன்படுத்துகிறார்களோ அதைப் பொறுத்து அவர்களது உளவளர்ச்சி இருக்கின்றது என்பதையும் மறுக்க முடியாது.

கபிலன் ஒரு நாள் தமிழீழத் தாயகத்தின் வரைபடத்தைப் பார்த்து வடமேற்கு திசையில் ஏழு தீவுகள் இருக்கின்றன எவ்வளவு அழகான நாடு என்று மகிழ்ச்சி அடைந்தவனாக சனுஜாவையும் ஷறிகனையும் பார்த்து... இங்கே பாருங்கள் இவ்வளவு தீவுகள் இருக்கின்றன... "வடிவாக இருக்கு போய்ப் பார்க்க வேணும் போல இருக்கு".

ஓ... எனக்கும் தான். நான் போன வருசம் போய் வந்தனான். அம்மா அப்பா எல்லோரும் போனனாங்கள். புங்குடுதீவுக்குப் போய் எல்லாம் பார்த்தனாங்கள் என்ன வடிவு?

எனக்கும் ஆசையாக இருக்கு. எப்ப நான் போறது? நீரும் அம்மா அப்பாவோட போகலாம் தானே...



படிப்பகம்

www.padippakam.com



அவை போக மாட்டினம். ஜேர்மனியில் தான் இருப்பினமாம். பார்க்கத் தேவையில்லையாம்.
என்னவோ எனக்குத் தெரியாது. அதுசரி.. இலங்கை ஒரு தீவு தானே.. என்று தான் படித்திருக்கிறோம் வரைபடத்திலும் பார்த்திருக்கிறோம்.
ஓ.. தெரியும் "லண்டன்ரைம்" லும் கேட்டனான் ஆனால் பக்கத்திலேயும் தீவுகள் இருக்கின்றனவே. அது தான் இப்ப ஒரு சந்தேகம்....
என்ன?

இலங்கைத் தீவில் தான் தமிழீழம் இருக்கிறது!. அதை அண்டி வடமேற்கில் மற்ற தீவுகளான தீவகம் அமைந்துள்ளது. இப்படி தீவுக்குள் தீவகம் இருக்க எங்கட ஆட்கள் எங்களைத் தீவுஆக்கள் என்று சொல்கிறார்கள்.. ஏனோ தெரியாது. அது எனக்கு பிடிக்கேல்ல...
அவர்களும் ஒரு தீவில் வாழ்ந்து கொண்டு, தங்களுக்குள் தாங்கள் பெரிது என்று ஏன் இந்த இறக்கம் பார்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது.
-நல்லாத்தான் சொல்கிறாய்! சரி...சரி...வா! வீட்டுக்குப் போவம்...

சில மாதங்களின் பின் கபிலன், படிக்கும் ஏழாம் ஆண்டு மாணவர்கள் ஒரு கண்காட்சி செய்வதற்கு, பாடசாலையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொருவரும் தத்தமக்கு விருப்பமான ஒன்றைச் செய்து, காட்சிக்கு வைக்கும்படி உத்தரவிடப்பட்டிருந்தது, எல்லா மாணவர்களும் தத்தமக்கு விருப்பமான முறையில் ஒவ்வொரு கண்டு பிடிப்புகளையும், புதுமைகளையும், கைவண்ணங்களையும் செய்து காட்சிக்கு வைத்தனர்.

கபிலனோ Plastic Clay (பிளாஸ்ரிக் களி மண்ணால்) இறப்பர்க்களி மண்ணால் பல நிறங்களைக் கொண்ட கலவையால் தமிழீழ வரைபடத்தை உருவகப்படுத்தினான். கடல் கடல்னீரேரி காடு, பயிர்ச் செய்கை செம்பாட்டு மண்பகுதி, சுண்ணகற் பகுதி, என்பவற்றைத் தனித்தனியே வேறுபடுத்தி காட்டி, தமிழீழத்தை மனக்கண்ணுக்கு உருவகப்படுத்தி வைத்தான். . அத்தோடு தீவுப்பகுதியில் சிலசிறுவர்கள், பண்ணைப் பாலத்தில் சில சிறுவர்கள், நின்று ஏதோ வேலைசெய்வது போலவும், கலந்து உரையாடுவதாகவும் காட்சிப்படுத்தியிருந்தான் கபிலன்.

பெற்றோர்கள் மாணவர்கள், ஆசிரியர்கள், பார்வையாளர்கள் எனப்பலர் எல்லாக் கண்காட்சிகளையும் பார்வையிட்டுச் சென்றனர். "இடைவேளைக்குப் பின்னர் கபிலனின் வகுப்பாசிரியர் வந்து" கபிலனின் தமிழீழ உருவப்படத்தைப் பார்வையிட்டார். அவர்கூர்ந்து கவனித்து விட்டு, எல்லாம் அழகாக உள்ளது. தத்துவரூபமான காட்சி ... மிக நல்லது .. என்று கூறிவிட்டு இங்கே சிறுவர்கள் என்ன செய்கிறார்கள் எனக் கேட்டார் படத்தில் சுட்டிக்காட்டி. அதற்குப் பின்... "அதுவா? இது என்ன? அது என்ன?" எல்லாவற்றையும் விளங்கப் படுத்திவிட்டு, ஏழுதீவுகள் தமிழீழத்திலிருந்து, பிரிந்து தனியாக இருக்கின்றன.
இவற்றைச் சிறுவர்களாகிய நாங்களும், அங்கு வாழ்கின்ற சிறுவர்களும் ஒன்று சேர்ந்து கூடி, பாலம் கட்டி... இனி ஒன்றாக இணைக்க வேண்டும், அது பற்றி இந்தப் படத்தில் கூடிக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள்... இது எனது கற்பனையில் தோன்றிய எண்ணம். "தீவகங்களுக்கு பாலம் அமைப் போம்" என்பதைக் காட்டும் காட்சி என்றான்.

ஆசிரியர்... மிக மிக நல்லது நல்ல சிந்தனை, ஆக்க பூர்வமான திட்டம் எனக்கூறி அவனைப் பற்றி மற்றவர்களுக்கும் விடயத்தைக் கூற, எல்லோரும் வந்து பார்வையிட்டனர் இது அந்த நகரபிதா (மேயர்)வுக்கும் அறிவிக்கப்பட்டு அவனது காட்சிப் பொருளான தமிழீழ வரைபடம் முதலாம் பரிசாகவும், விஷேட பரிசாகவும், பல பரிசில்களையும் தட்டிக் கொண்டது. கண்காட்சி முடிவிலே கபிலனுடைய பெற்றோரையும் மேடைக்கு அழைத்து, 2000£ பணமுடிச்சு வழங்கப்பட்டது, பெற்றோர் அதிசயித்தனர் தமது அறியாமை எண்ணித் தலைகுனிந்தனர். கபிலனின் திறமையை எண்ணி தாம் விட்ட தவறை உணர்ந்தனர், மாயைச் சுவரைத் தகர்த்த, தம் மகன் கபிலனை எண்ணிப் பெருமைப் பட்டனர், அவனது நண்பர்களுக்கும் நன்றி கூறினர்.



படிப்பகம்

www.padippakam.com



## நலம் நலமறிய ஆவல்


"அன்பு உடைமை ஆன்ற குடிப் பிறத்தல்
இவ்விரண்டும் பண்பு உடைமை என்னும் வழக்கு"

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம்.
வாய்மை யொடு ஐந்து சால்பு ஊன்றிய தூண்"
போல் வள்ளுவர் வாசகத்திற்கு இணங்க என் கண்முன் தெரியும் கணித ஆசிரியை திருமதி கல்யாணசுந்தரம் அவர்களை இவ்வேளையில் நன்றியுடன் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்

இவர் இலங்கையின் வடபுலம் நாரந்தனை என்னும் ஊரைச்சார்ந்தவர். இவரின் அழகும், அன்புச் சிரிப்பும், அமைதி நடையும், ஆற்றல்மிகு அறிவூட்டும் தன்மையும் என்னைக் கவர்ந்தது. என் வாழ்வில் மறக்கமுடியாத ஆசிரியர் அவர். உயர்ந்த பண்பினால்தானோ என்னவோ மாணவர்கள் தாம் விடும் பிழைகளுக்குத் தண்டனை வாங்கினாலும் இவரில் கோபதாபம் காட்டுவதில்லை. என் மனதில் நிரந்தர இடம்பிடித்து கொலுவிருக்கும் ஆசிரியையின் நலமறிய ஆவல்.

என் ஆசிரியைக்கு உள்ளம் நிறைந்த அன்பைச் சமர்ப்பணமாக்குகிறேன்.

வேலணை விஸ்வலிங்கம் ஸ்ரீபஞ்சலிங்கம்.
Dr. V.Sripanjalingam
Teaching Hospital, Predeniya
Sripanjalingam@yahoo.co.uk



## போய் வருகிறேன்

— பாரிஸ் அகிலன்

பரம்பரைகளின் உயிரியல் ஞாபகங்களைப்
பதிந்து காவிச் செல்லும் 'நான்' எனும் தனிமம்
தன்னைப் புனரமைத்து முன்னனுப்பும்
முனைப்பில்...

மரபணுப் பரம்பலை மட்டுமே இரகசிய
இலக்காய்க் கொண்டலையும் உயிர்களின் இருப்புகளில்
இருப்புகளின் தொடர்ச்சியில் இருப்பதைக்
காணவேண்டியொரு யாகம் மட்டுமாய்...

ஒரு கணமுதிரும் தீவிர விழிப்பில்
ஓடாதிருக்கும் காலத்துள் நித்தியம் காணும்
உள்விழிகள் அகல விரிந்து கண்டதைக் கூற
அலறலை மட்டுமே மொழியாய்த் தேடும் அவலத்தில்...

புயலெழுந்தார்ப்பரித்து ஆசைகளின் வேர்களை
அறுத்தெறிந்து மரத்தைச் சாய்த்து மண்ணில் வீழ்த்த
வேரறுந்து வெந்த நம்பிக்கைகளின்
அடித்தளத்தின் அனைத்தும் மாயையாக...

கரைத்துக் கரைத்து எனை மீண்டும்
அந்த மூல வஸ்துவிடம் கையளிக்க வேண்டும்
எனும் உன் விளையாட்டில் இத்தனை தாமதமேன்
காலமே, காலமே, காலமே!

exilivre.com

புகலிடப் புத்தகம்.
அறிவியல் நோக்கில் ஆய்வுகளையும்
புகலிட வாழ்வின் எதிரொலிகளையும்
சுமந்து வரும்
இணையத்தளம்



படிப்பகம்

www.padippakam.com



ப.வி. ஸ்ரீரங்கன்

# தமிழ் சூழலுக்குள் ஆய்வு முறைமைகளும் கருத்துக்கட்டுமானமும்.

வாழ்வியல் மரபுகள் தகர்க்கப்பட்டுவரும் சூழல் இருபத்தியோராம் நூற்றாண்டாகும்,ஒன்றின் இழப்புக்குப் பின் அந்தவிடத்திற்கு மிகவும் காட்டமான பழைய மரபுசார்ந்தெழுகின்ற ஒரு பிற்போக்கு வடிவத்தை புதியவொழுங்கு போன்று ஒப்புவிக்கிறது இந்த நுற்றாண்டு.இதற்கு புதிதாய் மலிந்துவிட்ட விஞ்ஞானச் சாகசங்கள் நன்றாய்த் துணைபுரிகின்றன,இதன்பொருட்டு இன்றைய செய்மதிச் செய்திப்பரிவர்த்தனை வானளாவிய தொலைத் தொடர்பு மற்றும் தொலைக்காட்சி-வானொலி,இணைய வலைப் பின்னல்களை தனிநபர்-தனிப்பட்ட வலயத்திற்குள் திணித்து விட்டுள்ளது, இது பற்பல சாத்தியங்களை மக்கள் சமூகத்துள் தோற்ற இதன் பயன் பாரிய சமுதாயப் பின்னடைவை-பிளவை வற்புறுத்துகிறது,என்றுமில்லாதவாறு சமூக முரண்கள் மழுங்கடிக்கப்பட்டு சமுதாய மாற்றம் நிகழாத சூழலை ஏகாதிபத்திய நிறுவனங்கள் நிறுவனமயப் படுத்துகின்றன,தற்செயலாகவேனும் உலகமயத்திற் கெதிரான கல்வியியல் சார்ந்த கட்டுமானம் நிகழாதபடி இந்த உலகமய அரசியற்தந்திர வியூகம் இப்போது பலமாகக்கட்டப்படுகிறது.நிகழ்வுசார்ந்தெழுகின்ற அனைத்து நிலமைகளும் நன்றாகத் திட்டமிடப்பட்டுள்ளது,இதன் ஒவ்வொரு அசைவும் நுணுக்கமாக ஆய்வுக்குட்படுத்தி சட்டநிலைமைகளால் தடுக்கப்பட்டு வரும் நிலையில் நமது தமிழ்ச்சூழலை மையப்படுத்தி எதையும் குறித்துரைக்காதிருக்கமுடியாது!

இன்றைய சூழல் நம்மைக் கணிசமான அளவு உதிரிவர்க்கமாகவும், நாடோடிகளாகவும்-ஒட்டுண்ணிகளாகவும் அறிவுத்திறனற்ற அடிமைகளாகவும் மாற்றியுள்ளது,நாம் நமது பாரம்பரியக் கனவுகளில் தஞ்சம் புகுகின்றோம்,தப்பித்தல் எந்த வகைப்பட்டதாயினும் அது நமது பொருள் வயப்பட்ட வாழ்வைப் பாதிக்காதிருக்க கவனமாகப் பழக்கப்பட்டுள்ளோம்.மூன்றாம் உலகத்துக்கேயுரிய அடங்கிப்போகும் மனோபாவம் நம்மை இன்னும் வக்கொழிந்தவர்களாகப் பார்க்கும்படி நாமே தயார்ப்படுத்தி அவற்றை நமது அடுத்த தலைமுறைக்குக் கடத்திக்கொள்ள பற்பல ஊடகங்களுடாய் செயற்படுதலை தற்போது சகஜமாகப்பார்க்க முடியும், எனினும் எமது வாழ்வும் துய்ப்பும் நம்மில் பலரை இதற்கு மாற்றீடாய்ச் சிந்திக்க வைத்தாலும் நமது கருத்தியற் தளம் மிகவும் பலயீனப்பட்ட நிலைகளால் மிகச்சாதரண காரியத்தைக்கூட மக்கள் சமூக வட்டத்துள் சாதிக்க முடியாதபடி ஆக்கப்பட்டுள்ளது.

சிலகால வரலாற்றுண்மைகளை நாம் கேள்விக்குட்படுத்திவிடுதலும் பின் அவற்றை முழு நிலவுகின்ற சூழலுலக்குமான மொத்தக் கண்ணோட்டமாகக் கருதிவிடுதலும் பின்தங்கிய உற்பத்தி நிலவுகின்ற நாடுகளிலுள்ள புத்திஜீவ மட்டத்தின் பகுப்பாய்வாக இதுவரை நிகழ்ந்துவருகிறது,இதன் அப்பட்டமான பரிந்துரைப்புகளை நாம் பல் வகைகளிலான வரலாற்று ஆவணங்களிலும் பார்க்கமுடியும்! இந்தப்பார்வைகள் வைக்கின்ற மெளன மேதாவியக்கோரிக்கைகளை அவற்றை வைத்தவர்களே இன்று மறந்துவிட்டு உலகமய அரசியலில் தமது இருப்பிற்கேற்ற வாறு புதிய மொந்தைக்குள் பழையதை ஊற்றமுடியாது மண்ணுக்கேற்ற மார்க்சியம் பேசும் சூழலில் மறந்துபோயும் வர்க்கம் சார்ந்து பேசாதிருக்கப் பழக்கப்பட்டுவிட்டார்கள்,உலகமயமாதலை ஒருநாட்டினது சுய பொருளாயுத வளர்ச்சியாக வர்ணிக்கும் மேதமையை புலம்பெயர் நாடு களில் புதிதாய் பட்டம்(!?)பெற்ற தமிழ்ச்சிறுவர்கள் செய்துவருகிறார்கள் (உ.ம்:வெக்டோன் தொ(ல்)லைக்காட்சியும் அதன் ஆய்வாளர்களும்).இந்த உலகமயமாதல்*(The Road to Serfdom?)* என்ன என்பதை அறியவைத்தல் தமிழ்ச்சூழலுக்கான(வெகுஜன)ஆய்வு முறையாக இன்னும் வளரவில்லை.தமிழர்களினது வர்க்கச் சிந்தனை மிகவும் கவனமாக வளர்த்தெடுக்கப்பட்டது,இது தன்னையும் தன் குடும்பத்தையுமே மானுடமாகப் பார்க்கப்பழகியது, எனவே அதன் தேவைகள் அண்டிப்பிழைத்தல் அரசியலை மையப்படுத்தி நகரத்தொடங்கி இன்று கிட்டத்தட்ட ஈராயிரமாண்டாகிவிட்டது!

## புலம் பெயர் தமிழ் குழுமம் :

புலம்பெயர்வாழ்வு மிகவும் முரண்படுதன்மைகளை - பொருந்தாத்தன்மைகளை தன்னகத்தே கொண்டுடியங்குகிறது,இணக்கமற்ற இருவேறு அணுகுமுறைகளின் ஒருமாதிரி சேர்க்கையிலேதாம் புலம் பெயர் தமிழ்மக்களினது இருப்பே தங்கியுள்ளது. இங்கெல்லாம் நாம் நமது வாழ்வை சமூகக்கூட்டாக அமைக்க முடியவில்லை. இதனால்



படிப்பகம்

www.padippakam.com



சமுதாயரீதியான அணுகுமுறையற்றுப்போவதால் குழுவாரியான அணுகுமுறையே நிலைவதால் அஃது ஒன்று,மற்றது: தனிநபர்வாத அணுகுமுறை! குழுவாரியான அணுகுமுறைக்குள் சிறு சுய அமைப்பாண்மையும்,ஆற்றலையும் காணும்போது மறுபுறத்திலோ தனிநபர்வாத அணுகுமுறை எல்லாச்சீரழிவுக்கும் பசளையிடும் காரியத்தில் இயங்கிக்கொள்கிறது.இத்தகைய தனிநபர்வாத அணுகுமுறை பழைய குட்டிப்பூர்ச்சுவா குணாம்சம் காரணமாக மிகவும் இறுக்கமான மரபுசார்ந்து செயற்படும் தந்திரத்தில் மையங்கொண்டுள்ளது, இது கண்டதையும் காசாக்கும் நோக்கோடு சகல "மக்கள் தொடர்பாடலையும்" பார்க்கிறது. இந்தப்போக்கின் விருத்தியே தமிழ் வானொலி-தொ(ல்)லைக்காட்சி வியூகமும்,அதுசார்ந்த வர்த்தகமும்.இது சுயநலன் கொண்ட தற்பெருமையும்,இறுமாப்பும் கொண்ட தனி நபர்களை உருவாக்கிவிட்டுள்ளது, இவர்களது சமூகவாரியான புரிதல் மிகவும் தாழ்நிலையில் இருக்கிறது, இவர்களே புதிதாய் கற்றுவிட்ட மேதாவிகளாய் உலகத்தின் எந்த பிரச்சனைக்கும் எழுந்தமானத்திற்குப் பதிலளிக்கிறார்கள் இந்தியா இன்னும் இருபதாண்டுகளில் வல்லரசாகிவிடுமென கருத்திடும் இவர்கள் உலகமயமாக்கலை சுயவளர்ச்சியாகப் பார்க்கும் பிரமையை இறுமாப்பென்பதா அல்ல மூடத்தனமென்பதா?இந்த பட்டதாரி இளைஞர்கள் தமிழ்பேசும் மக்களின் எந்தப்பிரச்சனையையும் புரிய மறுத்து மேற்குலகக் கல்வியின் பிரதி நகலாக-மேற்குலக மானுடர்களாக தொலைக்காட்சிகளில் தோன்றி சாதரணமக்களை அடிமைத்தனத்திற்குப் பழக்கி அதில் தங்கிவாழ வியூகம் அமைத்து யார் யாருக்கோ உதவுகிறார்கள்!

இந்த நிலையே கேள்விகளை-சாரத்தை-இயங்குதளத்தை புரிந்துகொள்வதில் சிக்கலிட்டுள்ளது, முரண்நிலையிலிருந்து கேள்வி கேட்பது சமூக விஞ்ஞானத்தின் ஆரம்பப்படி,இதன்படியே நம்மை-நாம் புரிந்துகொள்வது இன்று மிக மிக அவசியம். புலம்பெயர் தமிழ்பேசும் மக்களினது வாழ்வானது இரண்டும் கெட்டான் சமூகசீவியமாகவிருக்கின்ற இன்றைய சூழலில் இதுகுறித்து பொறுப்புணர்வோடு ஆய்வுகள், கருத்துக்கள் முன்வைப்பது இன்றைய இளைய படிப்பாளிகளின் பொறுப்பாகும்!

ஐரோப்பியக்கூட்டமைப்பு நாடுகளினது உயர்கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களின் சமூக உளவியற்சூழல் மிகவும் தாழ் நிலையிலேயே இருக்கிறது,இஃது ஐ.கூ.அமைப்பின் பொருளியல் நலன்களின்மீதான கருத்தமைவுகளுடன் பிணைவுற்றே தன்னை வெளிப்படுத்துவதால் இதன் வேர்களை நாம் மிக இலகுவாக இந்த ஐ.கூ.அமைப்பின் சமூகக்கட்டுகளுக்குக் கீழ் நிலவும் பாசிசத் தன்மைக்குள் காணமுடியும்.இது ஒரு வகையில் பழைய கொலனித்துவ மற்றும்1938 களில் நிலவிய சமூக உளவியலை மீளக்கட்டுவதற்கும், இளைய தலைமுறையை பூர்ச்சுவா கருத்தமைவுகளுடன் பிணைப்பதற்கும் திட்டமிட்டபடி பெரும் நிறுவனமான பாடசாலை-பல்கலைக்கழகங்களை பயன்படுத்திவருவதை சகல உயர்கல்வி மாணவர்களும் சற்று அவதானமாக நோக்கினால் அறிய முடியும், மேற்குறிபிட்ட படி இதைச் சகல வடிவங்களிலிருந்தும் அந்தக் கல்வி நிறுவனம் சரிவரத் திட்டமிட்டபடி கடைப்பிடிக்கிறது,ஐரோப்பியக் கூட்டமைப்பின் பாடத்திட்டங்களை வகுக்கின்ற கல்வியாளர்களே இந் நாடுகளின் இன்றைய சமூக உளவியலைத் தீர்மானிப்பவர்களாக சமூகப் புறநிலையுள்ளது.ஐ.கூ.வந்துவிட்டது! பல் தேசங்கள் கூடி,தத் தம் தேசிய எல்லைகளைக் கடந்து □கண்ட அரசியலை□ நகர்த்தினாலுங்கூட இவர்களது அரசியல் சந்தைப் பொருளாதாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதும் அந்தப் பாதுகாப்புக்கவசத்திற்கு என்றுமே எதிரிகளற்ற கருத்தியல் மேல்நிலையைக் கட்டிக்கொள்வதுமே. ஐரோப்பியக் கூட்டமைப்பின் அரசியல் தேசங்களின்-மக்களின் கூட்டாகவன்றி வெறுமனவே உடமை வர்க்கத்தினது கூட்டாகக் காணமுடிகிறது!இஃது மிக விரைவாகச் சிதறியே தீரும், யூரோ நாணயம் இன்று பலமுடையதாயினும் நாளை அதன் முடிவு நெருங்கிவிடும்.அப்போது நடைபெறப்போகும் நாடகம் நமது கனவுகளை நொருக்கி நம்மை புகலிடத்திலிருந்தே விரட்டும்,இதை நமது இளைய தலைமுறை புரிந்து விடுமென நம்பமுடியாது.இது இப்படியிருக்க இந்தியாவின் வியூகமோ சொல்லிமாளா!

வாழ்வியல் முரண்கள் புதியவற்றை படைக்கத்தூண்டும் நிலைமைகளில் - நம்மை வற்புறுத்தும் இன்றைய புலம்பெயர் வாழ்வில் நாம் அவற்றைத் தெரிந்து-புரிந்து காரியமாற்றமுடியாதபடி மிகக் கவனமாக தமிழ்பேசும் மக்களின் விரோதிகள் காரியமாற்றுகிறார்கள், இந்த விரோதிகள் தமிழ்பேசும் மக்களை தமது நலனுக்கேற்றவாறு பயன்படுத்தும் நோக்கோடு நமக்குள் ஆய்வுகளை, கருத்துக்களைக் கொட்டுகிறார்கள். இவை புலம்பெயர் வாழ் தமிழ் மக்களை வெறும் கலாச்சார அடிமைகளாக மாற்றிவிடும் வியூகத்தை அடிப்படையாகக்



படிப்பகம்

www.padippakam.com



கொண்டியங்குகிறது. இந்தக் கபடவலைக்குடந்தையாக இன்றைய ஊடக வளர்ச்சி இருக்கிறது

இது தமிழக இறுமாப்பு நிறைந்த வர்த்தகச் சினிமா மனிதர்களைப்போல் நமது மனோபாவத்தை மாற்றிவிட பாடு படுகிறது, இதனுடாக நமது சுயவளர்ச்சி முடக்கப்படுகிறது, எதற்கும் இந்தியப் பார்ப்பன கருத்தியலைச் சார்ந்து இயங்கும் மனிதக்குழுவாக நம்மைத் தயார்ப்படுத்தப் பாடுபடும் இந்திய நலன் நமக்கான சுய விடுதலையை,சுதந்தரத்தை-ஆத்மீகவளர்ச்சியை,தனித்துவத்தை,தேசிய அடையாளத்தை நிர்மூலமாக்குவதில் மெதுவாக வெற்றியடைந்து வருகிறது! இதன் போக்கால் இந்தியச் சந்தை விரிவாக்கப்பட்டுள்ளது,நிரந்திரமான ஒரு நுகர்வுக்கூட்டத்தை ஐரோப்பா மற்றும் அமெரிக்கா,அவுஸ்ரேலியா,ஆபிரிக்காவெங்கணும் கட்டிக்கொள்ள இந்தியத் தரகுமுதலாளிய வர்க்கம் முயற்சித்து வருகிறது.இது இந்தியாவினது ஆசியச் சந்தையைவிட மிக வருமானத்தை அதற்கு அளிக்கக்கூடியது, இந்தச்சந்தையின் நுகர்திறன் வளாச்சியடைந்த சமூகத்தின் திறனோடு ஒப்பிடத்தக்கது.நமது மனோபாவம் வளராவிடினும் நாம் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில்தாம் வாழ்கிறோம்.

புலம்பெயர் தமிழராகிய நாம் உளவியல் இரீதியாகப் பலவீனப்படுத்தப்பட்டுள்ளோம்,தமிழகத் திரை முகங்களிடம் தஞ்சமடையுமளவுக்கு நமது அகவளர்ச்சி தடுக்கப்பட்டுவிட்டது. இதிலிருந்து மீள இங்கிருக்கும் குழுவாரியான சுய அமைப்பாண்மையுடைய தமிழப்புத்திஜீவிகள் தமது ஆற்றலை இவைநோக்கித்திருப்பிவிட அவர்களுக்கிருக்கும் ஒரே தடை கருத்துச்சுதந்திர மறுப்பேயாகும்! இஃது தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் கூடுதலாகப் பார்க்கமுடியும்.மாற்றுக்கருத்துக்கு நாம் இடமளிப்பதே நமது எதிர்காலத்தை விருத்திக்கிட்டுச் செல்லும்,இதை இங்கிருக்கும் எந்த ஊடகமும் மறுக்கமுடியாது.

இலங்கை மற்றும் தமிழகச் சூழல்:

பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பகுதிகள் இப்போது தமிழர்களின் சுதந்திரமான உயிர்வாழும் ஜனநாயக உரிமையை உறிதிப்படுத்துவதாக யாரும் கனவுகூடக் காணமுடியாதவொரு சூழலை அவைகொண்டுள்ளன, ஒரு திமிர்த்தனமான அரசபயங்கரவாத நெருக்குவாரத்தோடுகூடிய தனிநபர்பயங்கரவாதம் தலைவிரித்தாடும் தமிழ்ப் பிரதேசங்களில் ஜனநாயகப் பண்புகள் துளியளவேனும் நிலவுவதாக யாரும் குறித்துரைத்தால் அவர் விசமம் பண்ணுபவராகவே கருத இடமுண்டு,அவ்வளவு மோசமானவொரு சூழலை இவ்விடங்களில் வாழும் மக்கள் அனுபவிக்கின்றனர். அரை இராணுவத்தன்மையுடைய சர்வதிகார காட்டாட்சிக்குள் இலங்கை-தமிழக தமிழ்பேசும் மக்கள் வாழ்கிறார்கள், நேரடியான அரச வன்முறைஜந்திர நெருக்குவாரத்துக்கு தமிழக மக்கள் முகங்கொடுத்தால் இலங்கைத் தமிழ் மக்களோ அரச-தனிநபர் பயங்கரவாதத்திற்கும் பொருளியல் ஒடுக்குறைக்கும் முகங்கொடுப்பது மட்டுமல்ல முகத்துக்கு நேரே குறிவைத்துக்காத்திருக்கும் சுடுகருவிக்கும் தலைசாய்த்தே சீவிக்கவேண்டும்! என்றுமில்லாதவாறு உயிர்வாழும் உரிமை மறுக்கப்படும் சூழலில் ஒரு ஆரோக்கியமான கருத்தியில் கட்டுமானம் நிலவமுடியாது,அங்கே நிலவுகின்ற சமூக உளவியல் அரபுநாடுகளை விட பின்தங்கிய குறைவிருத்தியுடைய ஜனநாயகத்தன்மையைக்கூட விட்டுவைக்கா.இது ஆண்டான் அடிமை அமைப்பை மறைமுகமாகப் பிரதிநித்துவப்படுத்துவதில் ஆளுமைமிக்கவர்களை தள்ளி அவர்களது நலனை முதன்மைப் படுத்தும் அரசியலை மையப்படுத்தியே சட்டவாக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இதையேதாம் அமெரிக்க பொருளியல் நலன் மூன்றாமுலகில் விரும்புகிறது. இவ்விடங்களில் துளியளவேனும் ஜனநாயப்பண்பு நிலவுதை உலக ஆண்டான்கள்விரும்புவதில்லை. தமது அடிவருடியளைக்காக்க இதுவே சரியானதொரு அரசியல் வழியாக அவர்கள் கருதுவதால் இவ் மக்கள் மத்தியில் நிலவும் உணர்வு எப்படியும் உயிர்த்திருத்தலே, இதை விட வேறெதுவம் அவர்தம் சிந்தையில் தோன்றுவதாயின் அதுவே தப்பித்தலாக இருக்கும். இந்தத் தப்பித்தல் காலா காலத்திற்கு மாறு பட்ட வளர்சச்சியையெட்டமுடியுமேயொளிய மாறாக ஆரோக்கியமான வாழ்வியல் பண்புகளை,ஜனநாயகத்தன்மைகளைத் எட்டமுடியாது. ஏனெனில் இங்கு நிலவும் இராணுவப் பொருளாதார உறவுகள் இதற்கு மேலே செல்லும்படியான உற்பத்தியுறுவுகளை ஏற்படுத்த முடியாது
போய்விடுகிறது,சரியான முதலாளிய வளர்ச்சியற்ற தரகு முதலாளியச் சூழல் இதற்குமேல் நகர முடியாது.

சொந்த முரண்பாடுகளால் நமது சமூகவுருவாக்கம் நிகழும் படியாக கொலனித்துவம் விட்டு



படிப்பகம்

www.padippakam.com



வைக்கவில்லை, அது தனது தேவைக்கேற்றபடி தரகு முதலாளிகளை உருவாக்கிவிட்டு அதற்கேற்ற திட்டவாக்கத்தை நமக்கு கற்பித்து வருகிறது, இதிலிருந்து இந்த நூற்றாண்டில் மீளக்கூடிய ஆரோக்கியமான நகர்வு தென்படவில்லை.
பாராளுமன்ற ஓட்டுக் கட்சிகள் யாவும் நம்மையும் நமது நாட்டையும் தமது வருமானத்தின் மூலப்பொருளாக பாவித்தல் அறுபதாண்டுகளாக நடைபெற்றுவரும் சங்கதி.இதனால் நாம் நாடு எனும் அமைப்பை விட்டு,நாடுகள் என்ற அமைப்புகளுக்குள் நிர்பந்திக்கப்பட்ட வாழ்வை மேற்கொள்ளும் அவலமேற்பட்டுள்ளது.நமக்கான திட்டவரைவை உலகவங்கி எழுதுகிறது, அதன்படி காரியமாற்றும் ஓட்டுக்கட்சிகள் இப்போது கல்வியில் கைவைக்கும் உலக வங்கியை எதுவும் கூறமுடியாத வக்கற்வர்களாகி அறிவுசார்ந்த துறைகளை மூடிவிடச் சொல்லும் செயலை செவ்வனவே செய்து வருகிறார்கள், இதன்படி இனிமேல் தொழில் சார்ந்த ,அதுவும் உலகமயத்தின் கொள்ளைக்காரருக்குச் சேவகம் செய்யும் கல்வியே சாத்தியமாகப் போகிறது.

இந்தநிலையில் நமது தேசியக் கனவுகள்,தேசிய அலகுகள்,தேசியத்தன்மைகளெல்லாம் மாற்றம் பெறுகின்றன.
எமக்கான நீதி,நியாயம்,உரிமை யாவுமே ஏகாதிபத்யத்தின் நலனுக்கேற்வாறு மட்டுமே இயங்கும்.அடிப்படை வாழ்வுரிமை புதிய வகைமாதிரியானவொரு மொன்னைப் பேச்சாகவே இப்போது பேசப்படுகிறது,இதன் விருத்தி வேறொரு வகையில் மனிதாயத்தின் பெரும் தோல்வியாக - அதுவே ஒரு பெரும் கதையாடலாக இட்டுக்கட்டி அதன் கழுத்தில் நுகம் வைக்கப்பட்டுள்ளது! இந்த நுகத்தடி பற்பல வர்ணங்கொண்ட கனவுகளை விதைப்பினும்
மானிட நேயம்சார்ந்த சமூக உளவியல் இப்போது காலமாகிவிட்டது.இனி இது குறித்த கதையாடல் பிறிதொரு பாணியிலான மொன்னைப் பேச்சுத்தாம்.இந்தப் பின் தங்கிய கருத்தாடலைத் தாண்டி சுய கௌரவம்,தனிநபர் சுதந்திரம்,தனிநபர் தனித்தன்மை என்பவைகளே உலக மய அரசியலில் ஏகாதிபத்யங்களால் பேசப்படும் உளவியலாக் கருத்துக்கள் கட்டப்படும். இதற்கேற்றவாறு இலங்கை-தமிழக தமிழ் புத்திஜீவகள் ஆய்வுகள் முன்வைத்து அவற்றைத் தலித்துவத்தோடு இணைத்து விடுவதில் பிரயத்தனஞ் செய்கிறார்கள்.இது ஏகாதிபத்யங்களளோடு கூட்டுச் சேர்ந்து நமது விடுதலையைப் பெறுமுடியுமென்று தமிழ் பேசும் உழைக்கும் வார்க்கத்தைக் காட்டிக்கொடுக்கும் மாபெரும் வரலாற்றுத் தவறை நமக்குத் தருமென்பதில் எமக்கு இருவேறு கருத்துக் கிடையாது! மக்கள் புரட்சிகரமாக இருந்து ஒருமண்ணும் நிகழா,மாறாக நமக்கு உலகு தழுவிய புரட்சிகரக் கட்சியின் அவசியம் முன்னெப்போதையும் விட இப்போது தேவையாகவுள்ளது.உலக உழைக்கும் மக்கள் நம்முடன் தோள் சேரவேண்டும், இதுவே காலமாகிவிட்ட மனிதாயத்தை உயிர் பெறவைத்து நமக்காக அனைத்து தளைகளையெல்லாம் அறுத்தெறியும்.

அரச ஆதிக்கமும், அரச ஜந்திரமும் இருவேறு வினைகளின் வடிவங்கள்:

ஒரு நாட்டில் இருவேறு அரச ஜந்திரம் நிலவமுடியுமாவெனுங் கருத்தாடல்கள் இப்போது நமக்குள் நடை பெறும் சூடான விவாதமாகத் தொடர்கிறது,இரு அரச வன்முறை ஜந்திரம் ஒரு நாட்டுக்குள் நிலவுமாயின் அங்கே ஒரு அரச வடிவமில்லையென்பது தெளிவானதுதாம்.ஆனால் உண்மையில் இது சாத்தியமாக சுய பொருளியல் பலம் இருக்கவேண்டும்! எதற்குமே பொருளாதாரமே அடித்தளம்,பொருளாதாரமென்ற அடிமட்டத்தைக் காப்பதற்கான மேல்மட்டக் கவசங்களே அடிமட்டமாகப் பார்க்கப்படுதல் வெறும் சட்ட அறிவின் வெளிப்பாடுதாம், பொருளாதார அடிப்படையற்ற எந்த அமைப்பும் இறுதியில் அன்னியசக்தியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டேயாகவேண்டும்!

இன்றைய தேசிய இனப்பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வுகுறித்துக் கருத்தாடலிடும் சிறார்கள் தமிழ்பேசும் மக்களது பிரச்சனை ஒற்றையாட்சியலோ அன்றி கூட்டாட்சியிலோ தீர்க்கமுடியாதபடி தமிழர் தரப்பில் பலமான(!?) இராணுவக்கட்டமைப்பு உண்டு, அது கலைக்கமுடியாதவரை இவை சாத்தியமில்லை, எனவே சுதந்திரக்கூட்டாட்சியே தீர்வாகும்,இது இருவேறு தனிநாடுகளின் கூட்டரசாகவே அமையமுடியும்,ஆகையினால் இலங்கை அரசியற்சட்டம் மாற்றி அமைக்காதவரை தீர்வுசாத்தியமில்லையென்றும் கருத்தாடுகின்ற திடீர் “அரசியல் ஆய்வாளர்கள்” மத்தியில் சிக்கியுள்ள நாம் இந்த இராணுவக்கட்டமைப்பை இலங்கையரசின் ஆதிக்கத்திலிருந்து நோக்குவோமாயின் அதன் சிதறல் மிகவிரைவாக நிகழாதவரை எந்த உந்து சக்தி தக்கவைக்கின்றதென அறியமுடியும்.



படிப்பகம்

www.padippakam.com



இலங்கையரசின் ஆதிக்கத்திலிருந்து முழுமையாகவோ அன்றி பகுதியாகவோ தமிழ்ப்பிரதேசங்கள் விடுபடவில்லை: மொத்தமாகவே இலங்கையரசினது ஆதிகத்திற்குட்பட்ட பகுதியாகவிருக்கும் தமிழ்ப் பிரதேசங்கள் ஒருபோதும் சுயஅமைப்பாண்மையை பொருளாதாரக் கட்டமைவில் செலுத்தமுடியாதென்தை சாதாரண உயர்கல்வி மாணவரொருவர் புரிந்து கொள்ள முடியும்,இது இப்படியிருக்க இந்த ஆய்வாளர்கள் யாரினது நன்மைக்ககாக இல்லாததை இருப்பதாகக்காட்டி குட்டையைக் குழப்பி தூண்டிலிட முனைகிறார்கள்? இலங்கையரசு முற்றுமுழுதானவொரு பொருளாதாரத் தடையைக் கடைப்பிடித்தால் நிலமையென்னவாகும்? பாரம்பரிய பிரதேசங்களென்பவை முதலில் இலங்கையரசாதிக்கத்திலிருந்து விடுபடாதவரை இரு இராணுவமெனுங் கருத்தாக்கமே சுத்தப் போலியானது! எந்த விடுதலைப் போராயினும் முதலில் நிலவுகின்ற அன்னிய ஆதிக்கத்தை உடைத்தபின்பேதாம் அதன் வன்முறைஜந்திரத்தின் மீது கைவைப்பார்கள்.அந்தக் கைவைப்பு முற்றுமுழுதாய் அதைச் சிதறடிப்பதில் முடிவுறும்,ஆனால் இலங்கையில் தமிழ்பேசும்மக்கள் வாழும் பிரதேசங்களிற் பார்ப்போமானால் நிலமை தலைகீழ்! ஒவ்வொரு பத்துச் சதுர கி.மீ. க்கும் இரண்டு அல்ல மூன்று இராணுவ முகாங்கள் உள்ளன. இவைகள் இலங்கையரினது வன்முறைஜந்திரம்.

இறுதியாகச் சில:

1): தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தவறான ஆய்வுகளைத் திட்டமிட்டு நம்மை ஒடுக்குபவர்கள் விதைக்கிறார்கள்.

2): இதற்கு உடந்தையாக சில தமிழ்ப் புத்திஜீவிகள் தெரிந்தோ தெரியாமலோ ஒத்துழைக்கின்றார்கள்.

3): இந்திய புலனாய்வுத்துறை மீளவும் நமது வாழ்வைச் சிதைக்க களத்தில் இறங்கி புலம் பெயர் மக்களை தமது நலனுக்கேற்றவாறு மூளைச் சலவை செய்கிறது.

4): புலம்பெயர் தமிழர்கள் சுய அமைப்பாண்மையுடன் வளர்வுறுதலை மட்டுப்பட வைக்க இந்தியா தொடர்ந்து கருத்தியில் யுத்தத்தை தமிழ்ச்சினிமாவூடே நடாத்த முனைகிறது.

5): பாரிய வர்த்தக நலனுக்காய் நம்மீது நுகர்வடிமை மனோபாவத்தைத் திட்டமிட்டு வளர்த்தெடுக்க முனைந்து வரும் இந்திய - இலங்கைத் தரகு முதலாளித்துவம் நமது நாட்டின் இயல்பு நிலையை விரும்பாது தொடர்ந்து கொந்தளிப்பான அரசியல் நிலையைத்தோற்றுவிக்கப் படாதபாடுபடுகிறது.

6): உலக ஏகாதிபத்யம் தனது உலகமயப் படுத்தலில் நமது தேசியத் தன்மைகளை மறுத்து வெறும் கொத்தடிமைகளாக்கி நம்மை இந்திய- இலங்கை தரகு வர்த்தகத்தின் நலனுக்கேற்றவாறு பயன்படுத்தி வருகிறது.

7): இதனுடாய் உலக மயத்தை நம் நாடுகளில் சிறப்பாய்ச் செய்து அறுவடையை கையகப்படுத்த அனைத்து வியூகங்களும் வெற்றியாய் நடைமுறைக்கு வருகிறது.

8): இவ்வளவுக்கும் புலம் பெயர் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஊடகங்களும் ஒத்திசைவாகச் செயற்படுகிறது,இதற்குப் பரிசாக எலும்புத்துண்டங்கள் இவர்களுகிடப்பட்டுவருகிறது.

நாம் தொடர்ந்தும் வேலைக்குப்போய் வீடுமீண்டு சோற்றுக்கோப்பைக்குள்
விழுந்தொழும்பி சண், சண்கே. வெக்டோன், ஜெயா மற்றும் அதன் கூட்ட...,
தீபம், ரி.ரி.என். பார்த்துப் பின்னிரவு இரண்டு மணிக்கு கண்மூடி அதிகாலை
ஐந்துக்கு மீளவும் வேலைக்குப் போகவேண்டும்.

பெப்ரவரி 2004,
வூப்பெற்றால்.





படிப்பகம்

www.padippakam.com



# கற்றல் - கற்பித்தலிடையே தொடரும் பிரச்சினைகள்

ஆசிரியர் என்பவர் குற்றமற்றவர், களங்கமற்றவர், நிரம்பிய அறிவு கைவரப்பெற்றவர் எனப் பொருள் கொள்ளப்பட்ட போதிலும் இன்று தமது மாணவரில் பொருத்தமான நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் வழிகாட்டியாகவே ஆசிரியர் கருதப்படுகிறார். இன்றைய காலகட்டத்தில் ஆசிரியரின் செயற்பங்கு பல்வேறு பிரிவுகளைக் கொண்டதாக உள்ளது. இதனால் தொழில் ரீதியாக அவரது செயற்பாடு பலவகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் இத்தகைய செயற்பங்குகளை ஆற்றும்போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பில் இருந்து தனிப்பட்ட ஒரு மாணவன்வரை ஆசிரியரின் கடமை பாடசாலையினுள்ளும், சமூகத்தினுள்ளும் பரந்து விரிந்து செல்கிறது. யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரை சகல வளமும் நிறைந்த பாடசாலைகளாக தேசியப் பாடசாலைகளே விளங்குகின்றன. ஏனைய சில பாடசாலைகளிலும் நன்கு விருத்தி பெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவை பாடசாலையின் வளங்களைப் பெருக்குவதிலும், அதனை வளர்ப்பதிலும் பெரும் பங்கை வகிக்கின்றன. இன்னும் சில பாடசாலைகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. எனினும் இவ்வாறான உதவிகள் போதியளவு கிடைக்கப்பெறாமல் உள்ள பாடசாலைகளும் எம்மத்தியிலுள்ளன. இடம்பெயர்ந்த இடத்திற்கும் செல்ல முடியாமல் குறைந்த மாணவர் தொகையுடன் இயங்கிய பல பாடசாலைகள் மூடப்பட்டு அயற்பாடசாலைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. போதிய பௌதீக வளங்கள் இன்றிப் பெருந்தொகையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளும் எம்மத்தியில் காணப்படுகின்றன. இவ்வாறான பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பதில் ஆசிரியர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். வகுப்பறைகளற்ற திறந்த மண்டபம், போதிய தளபாடமின்மை, அதிக ஒலி, இடப்பற்றாக்குறை ஆகியவை மாணவரது உள, உடல் நலனைப் பாதிப்பதால் அவர்களுக்கான பொருத்தமான கற்றல் சூழல் அமையாமல் கல்வியில் அவர்களின் நாட்டம் குன்றுகிறது. ஆசிரியர்களும் பெருமளவு சக்தியை விரயம் செய்து போதிய விளைவைப் பெற முடியாது மனச் சோர்வுக்குள்ளாகின்றனர்.

பாடசாலைக்கென ஒதுக்கப்பட்ட குணநலன் உள்ளீட்டு நிதியைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி வாய்ந்த உபகரணங்களை உரிய முறையில் பயன்படுத்துவதற்கான வசதியின்மையும் கவலைக்குரிய விடயமாகும். இதேபோன்றுதான் கணனியின் நிலமையும். பாடசாலைகளுக்கெனப் பல்வேறு அமைப்புக்களால் வழங்கப்பட்ட கணனிகள் பயன்படுத்துவதற்கான வள ஆளணியினர் இன்மையால் கணனிக் கற்கைநெறி பாடமாக அமையாத பல பாடசாலைகளில் முடங்கிக் கிடக்கின்றன.

மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களது சமூகச் சூழல் பொருளாதாரநிலை முன் பள்ளிக்கல்விநிலை உடலுளவிருத்திநிலை ஆகியவற்றுடன் இன்று தொடர்பு சாதனங்களும் சகபாடிகளும் அவர்களது ஆளுமை வளர்ச்சியிலும் விருத்தியிலும் அதிகளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அத்துடன் பாடசாலையில் ஆசிரியர் — மாணவர் தொடர்பு
மாணவர் — மாணவர் இடைத்தொடர்பு சுமூகமான மகிழ்ச்சிகரமான கற்றற்சூழல் கற்பித்தில்முறை ஊக்குவிப்பு ஆகியவை கற்கவேண்டும் எனும் ஆர்வத்தை வலுவூட்டுகின்றன. இக்காரணிகள் சரியாக அமையப்பெறாவிடத்து மாணவர் பாடசாலையை விட்டு இடைவிலகிச் செல்லும் நிலை ஏற்படுகிறது. எனவே ஒரு மாணவனின் கல்வி கற்கும் உரிமை தொடரும் வகையில் மாணவ — ஆசிரிய சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளும் எட்டப்பட்டாலே நாளைய சமூகம் நலிவற்ற, வளமான, வலுவான ஒரு சமூகமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**கோவிந்தராணி கருணானந்தன்**
**பழைய மாணவி - ஆசிரியை**



படிப்பகம்

www.padippakam.com



# உண்மைத் தொண்டனை இழந்தோம்



காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லனவர்
மாட்சிமை பொருந்திய மனஆட்சிக்குரியவர்
அண்ணை என்றழைப்போம் அன்புடன்
அனைவற்கும் தோழனாய், நண்பனாய்
எங்கள் சங்கத்தின் தோற்றத்தின் முதல்வனாய்
எங்களுக்கு செய்தன, தந்தன அதிகம்
ரசியாவில் கற்றது தெரியாது
ரயர்த்தொழிற்சாலையில் உற்பத்தி இயக்குனராய்
இருந்ததும் தெரியாது எவர்க்குமிங்கு
இருந்தது தெரியும் முழுமனிதனாக

எங்கள் சங்க இயக்கத்திற்கு
என்றும் மூலவேராயிருந்து
சட்டத்திற் சந்தேகம், நிர்வாக
கூட்டத்திற் குழப்பம், போடும்
திட்டத்தில் நெறியின்றேல்
தெட்டத்தெளிவாய் மதியுரைக்கும்
செந்தமிழும், சிங்களமும், ஆங்கிலமும்
சேர்ந்தவொரு கையேடாய்
நாங்கள் கற்றிடும் நூலகமாய்
நாளுமிருந்தார் எமதருகில்
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும்
மெஞ்ஞானம், அரசியல், சோதிடம்
விஞ்ஞானம் எனப்பலதின் களஞ்சியமாய்
எந்நாளும் இருந்து இயங்கியதை
இந்நாளும் தவிக்கின்றோம் எண்ணி.

நிர்வாகத்தினர்
வேலணை ப.மா.சங்கம்
பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com



# நன்றிகள்

கடந்த வருட பிற்பகுதியில் எமது கிளையின் சங்க அங்கத்தவர்கள் பிரித்தானியக் கிளையுடன் இணைந்து அங்குள்ள பழைய மாணவர்களிடம் நிதிசேகரிப்பில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டது குறிப்பிடத்தக்கது. இச் சந்தர்ப்பத்தின்போது அனேகமான பழைய மாணவ மாணவிகளின் கல்லூரியின் மேலுள்ள ஈடுபாடும், அதற்கு உதவவேண்டுமென்ற உத்வேகமும் எங்களை மிகவும் ஆச்சரியப்பட வைத்தது. இதன் போதே திரு பரராஜசிங்கம் குடும்பத்தினர் பாடசாலையின் பின்பகுதியிலுள்ள காணியை 360.000 ரூபாய் செலுத்தி காணியை வாங்கி பாடசாலைக்கு நன்கொடையாக அளித்தமை மிக முன்மாதிரியான செயல்பாடாக அமைந்தது. இதன் தொடர்ச்சியாக திரு. ஜெயக்குமார் குடும்பத்தினரும் பாடசாலைக்கு வேறு ஏதாவது காணிகள் வாங்க இருந்தால் தாங்கள் அத்தொகையைச் செலுத்துவதாக உறுதி அளித்தமை எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வாகும். பிரித்தானியக் கிளையும் மேலும் புது மெருகுடன் செயற்படும் விதத்தில் திரு.திருமதி. இராஜேஸ்வரன், திரு. சிறிதரன், திரு. யோகன், திரு. ஆதித்தன், திருமதி. ரவீந்திரன், திரு. பாலா மாஸ்ரர், திரு. திருக்குமார் இன்னும் பலரின் ஒன்றிணைந்த சேவையைப் பெற்று இயங்க வேண்டுமென்பது எங்கள் பேரவா. பிரித்தானிய, பாரிஸ் கிளைகள் தங்களுக்கிடையிலான தொடர்புகளை விரிவுபடுத்தும் முகமாக பரஸ்பரம் அவைகளின் ஆண்டு விழாக்களிலாவது கலந்து சிறப்பிக்க வேண்டுமென்பது எனது வேண்டுகோளாகும். மேலும் பாடசாலையைச் சுற்றியுள்ள பல காணிகள் விற்பனைக்குட்படுத்தியுள்ள நிலமை தோன்றியுள்ளதால் அவைகளைப் பாடசாலைக்காக வாங்குவதன் மூலம் வரும் காலத்தில் பாடசாலையின் தேவைக்கு ஏற்ப பயன் படுத்துவதற்கு ஏதுவாயிருக்கும். எங்கள் சங்கம் இம்முறை பாடசாலையின் உயர்தர வகுப்பினருக்கும், ஆசிரியர்களுக்கும் இலவசமாக வழங்க என 100 ஆங்கில அகராதிகளையும், 100 ஆங்கில இலக்கண நூல்களையும் இந்தியாவிலிருந்து நேரடியாகப் பாடசாலைக்கு அனுப்பியதை இங்கு குறிப்பிட்டாமல் இருக்க முடியாது. மேலும் இது போன்ற செயல்களைச் செய்வதற்கு பாடசாலை நிர்வாகத்தின் ஒத்துழைப்பு துரிதகதியில் கிடைக்க ஆவன செய்வதற்கான நடவடிக்கைகளை சங்கம் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறது. இதற்கான முன்னோடியாக, அதிபரின் வேலைப்பழுவைக் குறைக்கும் முகமாக, உதவி அதிபர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் அதிபருக்கு உதவுமாறு சங்கம் வினயமாகக் கேட்டுக் கொள்கிறது. வெளி நாடுகளிலுள்ள கல்லூரியின் பழைய மாணவ மாணவிகளின் சேவையைப் பெற்று பாடசாலையையும், மாணவர்களையும் முன்னேற்றப் பாதையில் முன்னெடுத்துச் செல்லுதல் அதிபர், ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். இதற்காக எங்கள் சங்கம் எல்லோருடனும் கைகோர்த்து இயங்கும் என்பதை எனது சக அங்கத்தவர்கள் சார்பாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொருளாளர்

## பெருந்தகையாளருக்கு எம் நன்றிகள்

இலண்டனைச் சேர்ந்த திரு. ஆ. பொ. பரராஜசிங்கம் குடும்பத்தினர் 360.000 ரூபாய் செலுத்தி காணி ஒன்றை வாங்கி நன்கொடையாக எமது கல்லூரிக்கு வழங்கியதையிட்டு கல்லூரிச் சமூகம் நன்றி கூறுவதோடு அவர்களின் சேவையையும் மெச்சுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



# கருவில் திருவாகும் தாய்மொழி

தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்றான் புரட்சிக்கவி பாரதிதாசன். தமிழுக்குப் பொருள் கொள்ளுகின்றபோது அழகு, இனிமை உயர்ந்த மொழி செம்மையான மொழி என்று பொருள் சொல்வார். தழிழறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள்.

இத்தகைய சிறப்புக்கள் கொண்ட தமிழ் மொழியை நாம் எம் சிறார்களுக்கு ஊட்ட மறப்போமானால் அது மன்னிக்கவே முடியாத மாபெரும் தவறாக ஆகிவிடும்.

ஒரு மொழியினுடைய இரண்டு க்ண்களாகத்திகழ்பவை இலக்கணமும், இலக்கியமும் ஆதலால் நாம் இரண்டையும் சேர்த்துப் போதிக்க வேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கிறது.

ஒரு தாயினுடைய வயிற்றிலே இருக்கின்ற போது குழந்தையானது, தாயினுடைய உணர்வலைகளைப் புரிந்து பொள்கிறது. தாயினுடைய இதமான உணர்வுகள் குழந்தையின் ஆரோக்கியத்தைப் பேணுகிறது. மாறான உணர்வுகள் எதிர்விளைவை தோற்றுவிக்கிறன. அதே போல் தாய் பேசுகின்ற அந்த மொழியும் குழந்தை கருவறையில் இருக்கின்ற பொழுதே குழந்தையோடு ஐக்கியப்பட்டு விடுகிறது. ஓடும் உதிரத்தில் தாய்மொழியும் அதன் உணர்வுகளும் காவிச் செல்லப்படுகின்றன. பின்னிப் பிணைந்ததாகிய இந்த தாய் சேய் உறவில் தாய்மொழியான தமிழ்மொழியும் முதன்மை பெறுகிறது.

இவற்றை நாம் பார்க்கின்றபோது எம்மழலைகள் தாய்மொழியை கற்பதில் சிரமமில்லை என்பது தெளிவாகிறது. குழந்தைப் பருவத்தில் இருந்தே தமிழைக் கற்பிக்கலாம் என்பதும் எம்மால் உணரப்படுகிறது.

ஒரு குழந்தையானது ஏழு மொழியைக் கற்றுக் கொள்ளுகின்ற ஆளுமையையும் ஆற்றலையும் பெற்றிருக்கிறது என்று மொழியில் வல்லுனர்களின் ஆராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன. எனவே நாம் தமிழ் மொழியை ஊட்டுவதில் எந்தவித தவறும் இல்லை என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பிள்ளையினுடைய ஆளுமைக்கு, முக்கியமாக தாய்மொழிக்கல்வி அவசியம் என்பதும் தம்மை தாமே அறிந்து கொள்வதற்கும், அதன்வழி ஒழுகுவதற்கும் தாய்மொழி பெரிதும் உதவுகிறது என்பதும் மொழியில் ஆராய்ச்சியாளர்களின் கருத்தாக இருக்கின்ற பொழுது நாம் அதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1978ம் ஆண்டு ஐரோப்பிய சமூகத்தினால் வெளியிடப்பட் அறிக்கையில் தாய்மொழியையும், கலாச்சாரத்தையும் சிறுபான்மை இன மாணவர்கள் கற்பதற்கு தமது அங்கத்துவ நாடுகள் கட்டாயமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டிருந்தது. அத்தோடு தாய்மொழியை கற்பதால் புகலிட மொழியை கற்பதில் அல்லது வேறுமொழியை கற்பதில் எந்தவொரு பாதிப்பும் இல்லை மாறாக நன்மையே தருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எட்மென்ரன் என்பவரால் 1978ல் நடாத்திய ஆய்வின்போது யுகிறேன் மொழியை வீட்டில் உபயோகித்த மாணவர்கள் ஆங்கிலத்தை வீட்டில் உபயோகித்த மாணவர்களைவிட ஆங்கில வசன அமைப்புக்களில் ஏற்படும் தவறுகளை எளிதில் இனங்கண்டு திருத்துவதற்கான ஆளுமையைப் பெற்றிருக்கிறார் என்று குறிப்பிடுகிறார்.

1980ம் ஆண்டு பக்டனார் என்பவர் இத்தாலி மொழி பேசுகின்ற மாணவரிடையே மொன்றியலில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் முடிவில் தாய்மொழியாகிய இத்தாலி மொழியை உபயோகித்த பிள்ளைகள் புகலிட மொழிகள் முதலான எனைய ஞாபக சக்தி மிக்கவர்களாகவும் இருந்ததாக குறிப்பிட்டதோடு இவர்கள் சமூகத்துடனான தொடர்புகளிலும் மேலோங்கிக் காணப்படுவதாக குறிப்பிடுகின்றனர்.

றொறன்ரோ கல்விச் சபையின் மும்மொழி செயல்ககுழுவின் அறிக்கை 1982ம் ஆண்டு வெளியிட்ட தகவலின் படி தாய்மொழிக்கல்வியானது வாழும் நாட்டு மொழிக் கல்வியைப் பாதிக்கவில்லை என்றும், மாணவரின் முழுச் செயற்பாட்டையும் அது விருத்தி செய்வதாகவும் குறிப்பிடுகின்றது.

இத்தகைய ஆராய்ச்சிகள் யாவும் வீட்டில் தம் பிள்ளைகள் புகலிட மொழியையே பேசவேண்டும் என்று நினைக்கின்ற பெற்றோர்களுக்கு சவுக்கடி கொடுப்பதாக அமைகிறது. எனவே நாம் எங்கள் பிள்ளைகளுக்கு குழந்தை பருவத்திலிருந்தே தாய்மொழிக் கல்வியைப் போதிக்கலாம் என்பது மேன் மெலும் தெளிந்த தெளிவாகின்றத.



படிப்பகம்

www.padippakam.com



பத்து வயதிற்கு மேற்பட்ட நிலையில் தமிழைப் போதிப்பதென்பது மிகவும் கடினமானவொன்று. அந்த வயதுகளில் அவர்களின் தேடல்களும் உணர்வுகளும் மாற்றம் பெறுகின்றன. அப்போது தமிழை போதிக்க நினைப்பது அவர்களை பொறுத்த மட்டில் வேண்டாத ஒன்றை திணிப்பதாகவே அமைந்துவிடுகிறது. இதை பெற்றோர்கள் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.


ஒரு குழந்தை தாய்மொழியைக் கற்றுக் கொள்வதனால் தன்னை இனம் கண்டுகொள்கிறது. தான் சார்ந்த இனத்தின் பண்பாடு விழுமியங்களை அறிந்து அதன்வழி நடக்கக் கற்றுக் கொள்ளுகிறது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு வளர்க்கப்படுகிறது. விலாங்கு மீன் கலாச்சாரம் ஒழிக்கப்பட்டு நமது கலாச்சாரம் பேணப்படும் நிலை உருவாகிறது. முதலில் நம்மை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எமது போலி வேடங்களை களைந்தாக வேண்டும். நாம் செய்யும் தவறுகளுக்கு உகந்த ஆதாரத்தைத் தேடுவதை நிறுத்துவதோடு மற்றவர்களையும் துணைக்கு அழைக்கும் போலி மாயையிலிருந்து முற்றாக விலகவேண்டும். எமது பிள்ளைகளுக்குக் கட்டாயம் தமிழ்மொழியைப் புகட்டியாக வேண்டும்.

புகலிட மொழியை எம் பிள்ளைகள் எவ்வாறு அழகாகப் பேசுகிறார்கள், உச்சரிக்கிறார்கள் அதன் அழகை, சிறப்பைப்பாத்தீர்களா? என்று பெருமை பேசிக்கொள்வதை முதலில் பெற்றோர்கள் நிறுத்தி ஆகவேண்டும். தாய்மொழி அறிவில் முன்னணியில் திகழும் பிள்ளைகளே புகலிட மொழியிலும் முன்னணியில் திகழ்வதை நாம் அறிந்தாக வேண்டும். புகலிட மொழியை கற்றுக்கொள்ள பல பின்புலங்கள் சாதகமாகவும் உறுதுணையாகவும் இருக்கிறது. பாடசாலையில் கற்கிறார்கள், அவர்களுடைய சகாக்களோடு புகலிட மொழியில் உரையாடிக்கொள்கிறார்கள், வெளியிடங்களிலும் புகலிட மொழியையே பேசிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் திரும்பும் பக்கங்ளெல்லாம் அந்தமொழியே ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது எங்கள் மழலைகளின் வாயில் தமிழ் மணம்கமழ ஒரு கல்விக்கூடமாக எமது வீடே அமைகிறது. வீட்டில் தமிழில் உரையாடுங்கள் பிள்ளைகள் தமிழ் கற்க வழிசெய்யுங்கள் அதை விடுத்து பெற்றோர்கள் புகலிட மொழியை கற்கப்பயன்படும் ஆசிரியர்களாக பிள்ளைகளைத் துணைக்கு அழைக்காதீர்கள். வீட்டில் தமிழ் ஆசிரியர்களாக நீங்கள் மாறுங்கள்.எனது பிள்ளைக்குத் தமிழ் வராது என்று சொல்வதில் பெருமை இல்லை. சிறுமை தான் உண்டு. தமிழ் ஒரு சுமையென்று பயங்காட்டாதீர்கள் அவர்கள் தமிழ் கற்க வழிசெய்யுங்கள்.

புலம் பெயர்ந்து வாழும் சிறார்களுக்கு தாய்மொழியே பொது மொழியாக அமைவதையும், பேரன் பேத்திமாரோடு கொஞ்சி விளையாடத் தமிழே முதல் மொழியாக அமைவதையும், பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையேயான தொடர்பை இறுக்கமாகப் பேணுவதற்கும் தாய்மொழியே அடிப்படையாக அமைவதையும், தமிழீழம் சென்று உறவுகளுடன் உரையாடவும் தமிழே அவசியமாக இருப்பதனாலும் அதை உணர்த்தும்வழி கருவிலேலயே பதிவாகின்ற சிறப்புப் பொருந்திய தமிழ்மொழி அறிவினை எம் மழலைகளுக்கு ஊட்டுவோம். எம் தமிழைத் தாயெனப் போற்றுவோம்.

**தமிழ்மணி செல்லையா தேவன்**
பழைய மாணவன்





படிப்பகம்

www.padippakam.com



# இலங்கைத் திருநாட்டுக்கு இன்னல்கள் வர காரணம் ஸ்ரீ லங்கா என்று பெயரை மாற்றியமையே !

இலங்கை என்ற நாமத்துடன் நம் நாடு இருந்தவரை எந்த விதமான இன்னல்களும் எமக்கு நேரவில்லை. என்று இலங்கை ஸ்ரீலங்கா (SRI LANKA) ஆனதோ அன்று பிடித்த சனீஸ்வரர் இன்றும் நம் நாட்டை விட்டுப் போகவில்லை. இது தான் இன்றைய யதார்த்தம்

பொதுவாகவே மனிதர்களுக்கு மட்டும் தான் நாம் பிறப்பு சாதகம் பார்கின்றோம். அவர்களுக்குத் தான் அது சாத்தியமாகும் என்று நாம் நினைப்பது தவறு. நாடுகள், தொழில் ஸ்தாபனங்கள், கலைக்கூடங்கள் ஆலயங்கள் என அனைத்து அம் சங்களுக்கும் பிறப்பு சாதகம் உண்டு.

அது எப்படியெனில் உதாரணமாக ஒரு நாட்டிற்கு அதைச் சார்ந்த மக்கள் ஆட்சிமை பெறுகின்ற காலம் (நாட்டின் சுதந்திரதினம்) அன்றைய கிரஹ நிலைப்படி பிறப்பு சாதகம் அமைத்து பார்த்தால் அந்த நாட்டின் நன்மை, தீமை, பிரச்சினைகள் என்பவைற்றை மிகவும் தெளிவாக அறியமுடியும்.

மனிதவாழ்வில் ஏற்படும் அதிகமாக கஷ்டங்கள் பிரச்சினைகள் போலவே நாடுகளுக்கும் சுதந்திரதின கிரஹ நிலை பற்றி ஆராய்ந்தால்

எமது நாடு பிரிட்டிஷ் ஆட்சியின் பிடியிலிருந்து சுதந்திரம் பெற்றநாள் 1948 ஆம் ஆண்டு மாசி மாதத்தில் 4ஆம் திகதி. எண் ஜோதிடம், நிலையில் என இரண்டு முறை சாதக நிலைகளையும் சற்று ஆராய்ந்து பார்க்கலாம். 04.02.1948 என்கின்ற திகதியின் எண் ஜோதிட நிலையில் விதி எண் 4 ஆகவும் கூட்டு எண் 1ஆகவும் அமைகின்றது. பொதுவாகவே 4ஆம் எண்ணிற்கு வாழ்க்கையில் அடிக்கடி மன சஞ்சலம், பிரச்சினைகள் சூழ்ந்து கொண்டே இருக்கும். ஏற்றம், இறக்கம் அடிக்கடி வாழ்வில் இருக்கும். எதிர்பாராதவகையில் சோகம் சூழ்ந்து கொள்ளும். அந்த நிலை நமது இலங்கை நாட்டிற்கும் உண்டு. அத்தோடு SRI LANKA பெயரைக் கூட்டி வருகின்ற எண் 9ஆம் எண் போராட்டம் நிறைந்த எண்ணாக்க கருதப்படுகின்றது. ஏதோ ஒரு வகையில் தொடர்ந்து போராட்ட சிக்கல் நம் நாட்டிற்கு உண்டு. கிரஹ நிலை அமைப்பும், இலங்கை நாட்டிற்கு அடிக்கடி சிக்கல், பிரச்சினை தருவதாகவே அமைகின்றது.

முக்கியமாக இலங்கை சுதந்திரம் பெற்ற ராசி விருச்சிகம் இந்த விருச்சிகராசியில் ஜென்மகுரு ஜென்மகேது சஞ்சரித்த காலம் 1983ஆம் ஆண்டாகும். மாபெரும் கறைபடிந்த ஆண்டான 83ஆம் ஆண்டு ஆடியில்தான் இனக்கலவரம் இந்நாட்டிற்குள் புகுந்தது. பெரும் இழப்புகளை, கஷ்டங்களை, துன்பங்களை ஏற்படுத்திய தையும் நாம் அறிவோம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற தினத்தின் நட்சத்திரம் கிரக நிலை அமைப்புகளின்படி அடிக்கடி குழப்பநிலைகள் இன்னல்கள் அமைந்து கொண்டே இருக்கின்றன.

இலங்கையில் ஜாதக கிரஹ நிலையில் லக்ன அதிபதியாய் சனிபகவான் அமைகின்றார். அதேபோல் எண் 8இன் அதிபதியும் சனிபகவானே. அந்த வகையில் 8ஆம் எண்ணின் ஆதிக்கம் கொண்டோர்களின் ஆட்சியும் 8ஆம் எண் சம்பந் தமுடையோர் தொடர்பும் இலங்கையில் அதிகம் நடைபெற்றது.

முக்கியமாக மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன, ஸ்ரீமாவோ பண்டார நாயக்க போன்றோர் 8ஆம் எண்ணில் பிறந்தவர்கள். இலங்கையின் நடைபெற்ற அனேகமான முக்கிய ஒப்பந்தங்கள், அனர்த்தங்கள் என்பன 8ஆம் எண் தொடர்பிலேயே நடைபெற்று இருக்கின்றன.

புராண இதிகாசங்களிலே போற்றப்படுகின்ற சூரபத்மன், இராவணன் போன்ற சிவ பக்தர்கள் வாழ்ந்து ஆண்டுவந்த பூமி நம் நாடு. அதுமட்டுமன்றி பஞ்சஸ்வரங்கள் அமையப்பெற்ற அற்புத நாடு. சமாதானத்தின் மறுஉருவம் எனப்படும் புத்தபகவான் அருள்தருகின்ற நாடு.


இன்னல்கள் நீங்கி நம்நாடு சுபீட்சம் பெற வேண்டுமானால் SRI LANKA என்கின்ற பெயரை மாற்றம் செய்யவேண்டும்.

இந்த நாட்டின் பெயர் கூட்டிவருகின்ற எண் 5ஆம் எண்ணில் அமைவதே அதிக சிறப்புகள் தரும். மூடப்பட்டு கிடக் கின்ற முக்கிய ஆலயங்கள் அனைத்தும் திறக்கப்படடு முறை தவறாது பூஜைகாண வேண்டும்.

அனைவரும் இந்த நாட்டின் மக்கள் என் கின்ற சகோதர உணர்வு வர வேண்டும். சுபிட்சம் தானாக நம் நாட்டிற்கு வந்து சேரும் இதை நாட்டை ஆளும் கட்சியும் அனுபூதிமான்களும் சான்றோரும் மக்களும் கவனத்தில் கொண்டு செயற்பட்டால் இன்னல் நீங்கி இன்பங்கள் தரும் நாடாய் இலங்கை மலரும்.

நன்றி

ஆக்கம் :
**காயத்திரி கந்தப்பிள்ளை**





படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்ச்சிறுமி - நியூஸ்லாந்து நாடுகடத்தலும் -பாலியல் வல்லுறவும்

## நொந்துகொள்வதும்புரிந்துகொள்வதும்.

- ப.வி. ஸ்ரீரங்கன் -

Hier
fremd geblieben
dort
fremd geworden

Vielleicht
sollten wir
ein land suchen
einen Staat gruenden
fuer alle
die irgenwo
irgenwie
Fremde sind.
- Hans-Herbert Dreiske, Dueseldorf,im August 1984

(இங்கே அந்நியராய் இருந்தோம்'அங்கே அந்நியராக்கப்பட்டோம்' எனினும்,நாம் ஒரு வனாந்திரத்தைத் தேடி ஒரு நாட்டை உருவாக்குவோம்' எங்கெங்கு' எப்படியெப்படியோ அந்நியர்களாகிய அனைவருக்குமாக.)

உலகமெல்லாம் இடர் படும் மானிடர்களுக்காக -அகதிகளாகி அலையும் எமக்காக ஜேர்மனியக் கவி தன்னால் முடிந்ததைச் சொல்கிறான்.இன்றைய இந்த இருள்சூழ்ந்த நிலையை நாம் உணர்வுபூர்வமாகக் கருதிக்கொள்ள முனையும்போது நமக்கு முன் வாழ்ந்தவர்களை எண்ணிப் பார்க்கும்படி நேர்கிறது, லியோ ரொக்ஸ்சி(Leo Trotzki):» Someone who wishes a quiet life would have done better not to be born in the twentieth Century» என்று கூறியது ஞாபகத்திற்கு வருகிறது.

சரிதாம்! ஆனால் நாம் பிறந்துவிட்டோம். இது எமது தப்பா? இல்லை, இல்லவே இல்லை! கலவியை மறுத்த சமூகம் காதல் வயப்பட்டு ஆவதொன்றுமில்லை,எனவேதாம் ஜேர்மனியக் கவிஞர் புதியவுலகு குறித்துப் பேசுகிறார்.இதை ஒரு கலகக் காரனுக்குரிய ஆத்ம பலத்தோடு பேசுகிறார், எமது வாழ்வு உண்மையானது,எப்படி நாம் உண்மையோ அவ்வண்ணமே. எனவே,
நாம் வாழ்வுதேடி அலைதலும்,உயிர்த்திருத்தலுக்காக ஓயாது விருப்புறுதி கொள்வதும் இயற்கையானது.இந்த இயற்கையுரிமையைப் பறிக்க எந்தக் கொம்பர்களுக்கும் உரிமையில்லை. சுமார் அறுநூறாண்டுகளுக்கு முன் உலகெங்கும் நாடோடிகளாகச் சென்று குடிபெயர்ந்து-கொலை செய்து... குந்த வந்த இடங்களெல்லாமின்று அவர்தம் வரலாற்றுப் பூமியாக, பின்னால் வந்த நாமோ அவர்களால் நாடுகடத்தும் நிலையில் வாழ்விழந்து போதல் நீண்ட வலியுணர்வை நெஞ்சில் விதைக்கின்றது!

வேலைக்குப் போனகணவன் வீடுமீளும் போது மனையாளும் மைந்தர்களும் மாயமாய் மறைந்து போகிறார்கள்,இறுதியில் செய்தி :"நாடு கடத்தப் பட்டுவிட்டார்கள்." எப்படியிருக்கும் இந்தக் கணம்? இது, இங்கே ஜேர்மனியில் சர்வசாதரணமாக நடைபெறும் நாடுகடத்தல் நிலைவரம். என்றபோதும் இந்தப் பதினைந்து வயதுப் பாலகியினது (நாடுகடத்தல் தர வன்புணர்வு மூலம்...) இன்றைய இருள்சூழ் நிலை சற்றுக் கடினமான ஒரு கனத்த உணர்வை நமக்குள் கொட்டுகிறது.நியூஸ்லாந்தரசின்'எமது சமுதாயத்தின் இந்த நீசச் செயலை நாம் விளங்கிக்



படிப்பகம்

www.padippakam.com



கொள்தலும்,அதனூடே உலக அகதிகளுக்கான தார்மீக உரிமைகளை வென்றெடுப்பதும்,எமது விடுதலையின் ஒரு பகுதிதாம்.

அரசியல் தஞ்சமும்,கோரிக்கையும்:
நாம் நாடுவிட்டு நாடுகளுக்கும்,கண்டம்விட்டு கண்டங்களுக்கும் புலம் பெயர்கிறோம். இருபதாம் நுற்றாண்டின் இறுதியிலும் இருபத்தியோராம் நூற்றாண்டின் இன்றைய பகுதியிலும் அதிகம் பேசப்படும் வார்த்தை இந்த "அரசியல் தஞ்சம்"எனும் வார்த்தைதாம்!இன்றைய நிலவரப்படி சொந்தநாட்டிலும்,வெளிநாடுகளிலுமாக மக்கள் அகதியாகி அல்லற்படும் நிலை அதிகரித்தபடியேதாம் இருக்கிறது, இந்த அகதிய வாழ்வை வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட நம் தொகை கிட்டத்தட்ட 300 கோடியாகும். இது உலக சனத்தொகையில் 50 வீதமாகும்,(என்ன முழிக்கிறீர்கள்? தொகை பிழையானதென்றுதானே கூற வருகிறீர்கள்?) எனினும் இஃது உண்மையே! உள்நாட்டில் உதிரிகளாகவும்,வெளிநாடுகளில் அடிமைகளாகவும் நாம் வாழ்கிறோம். இந்தத்தொகை 300 கோடிக்கு மேல் வரும்.இந்தியத்துணைக் கண்டத்திலிருந்து அவுஸ்திரேலியா,பின்பு அமெரிக்காவிலிருந்து ஆபிரிக்கா ஊடாக மத்திய கிழக்கு ,மற்றும் ஐரோப்பாவரையும் நமதுறவுகள் காடுகளில் -வீதிகளில் அலைந்தபடி உயிர் வாழ முனைவது இன்றைய உலக நடப்பில் பெரிதாக ஒன்றுமில்லைத்தாம்.என்றபோதும் இந்த அகதிய வாழ்வின் சூத்திரமென்ன அதன் உற்பத்திக்கு ஏதுவாக எந்த இயக்கு சக்தி உந்துதலளிக்கிறது- அரசியல் தஞ்சம் கோர யார் தகுதி(!?) உடையவர் ? என்பதை நாம் சற்று அவதானிப்போம்.

«pfui,Fremder-! Du bist das elendeste Wesen unter der sonne Europas. Fremder-! Die alten Griechen nannten die Fremden Barbaren-aber sie uebten Gastfreundschft an ihnen. Du aber wirst von ort zu ort gejagt, du Fremder unserer zeit,du bekommst hier keine Einreiseerlaubnis und dort keine Wohnunggenehmigung,und dort darfst du keinen Speck essen , und da von da keinen mitnehmen -Fremder! «-Peter Panter (1920)

"கூய்,அந்நியரே! ஐரோப்பாவினது சூரியனுக்குக் கீழே நீயோ வறுமையான உயிராத்மா. அந்நியன்-!பழைய கிரேக்கமோ நாகரீகமற்ற அந்நியனென அழைத்தது- எனினும் விருந்தாளிபோன்றே உன்னை நடாத்த முயன்றார்களாம்.ஊரூராய் நீயே வேட்டையாடப்பட்டாய், எமது காலத்தினது அந்நியன் நீ, இங்கோ உனக்கு நாடுவிட்டு நாடுகள் பயணிக்க அனுமதியில்லை,அங்கோ வதிவதற்கு அனுமதியில்லை,அத்தோடு நல்ல உணவருந்தவும் முடியாது,கூடவே எதையுமே எடுத்துக்கொள்ளவும் முடியாத -அந்நியன்!"

Tucholsky,Kurt இன் மனித இரங்கலின் அதியுன்னத வெளிப்பாடிது,வெள்ளைத் தேசமெங்கும் நாடோடிகளாக அலைந்து வரும் ஜிப்சிகளின் நிலை கண்ட சொல்ஸ்க்சி கூர்ட் இப்படியிரங்கி நொந்து கொண்டார்.

ஒரு வகையில் இது நம்மெல்லோருக்கும் பொருந்திவிடுகிறது! அன்றைய ஐரோப்பிய மனோபாவத்தை கிழக்கு ஜேர்மனியின் மனிதநேயப் படைப்பாளி சொல்ஸ்க்கி கூர்ட் மிக மிக அழகாகப் படம் பிடித்துள்ளார். இந்த மனோபாவம் 16,17ஆம் நுற்றாண்டுகளின் தொடர்ச்சியாய் விருத்தியாகி 20ஆம் நுற்றாண்டுகளில் இரண்டு உலகயுத்தங்களில் சுமார் 80மில்லியன்கள் அப்பாவிமக்களை வேட்டையாடியது.இந்த ஈனத்தனத்திற்குப் பின் ஐரோப்பிய மனிதவுரிமை ஆணையகம் மற்றும் ஜெனிவா அகதிகள் ஆணையகமும் சில வரைவுகளை -ஒப்பந்தங்களை செய்துள்ளார்கள்,இந்த வரைவுகள் "சட்டத்தின் முன் சகலரும் சமனம்" என்றபடி எதையுரைத்ததோ அஃது இவ்வைரோப்பியரசுகளால் கேலிக்கூத்தாக்கப்பட்டுள்ளது.இதன் தொடர்ச்சிதாம் நியூஸ்லாந்தினது இன்றைய அகதிகள் மீதான சட்ட நடவடிக்கை.

அரசியல் தஞ்ச உரிமை சட்மாக்கப்பட்ட வரலாறானது 1946 இல் ஆரம்பமாகிறது,ஐ.நா.சபையின் பொதுக்கூட்டம் சர்வதேச அகதிகள் கழகத்தை மேற்கூறிய ஆண்டில் ஆரம்பித்தது. இக்கழகமானது முதலில் நான்கு வருடங்களும் அதன்பின் மீள இரண்டாண்டுகளும் தொடர்ந்தியங்கியது,ஆரம்பத்தின் நோக்கம் உலகயுத்தத்திற்குப் பின்பான சமூகப்பிரச்சனையை ஓரளவு தீர்க்கக்கூடியமாதிரி இது இலக்கு வைத்து மீள் குடியேற்றம் மற்றும் புதிய குடியேற்றங்களை யும் அதுசார்ந்த தேவைகளுக்காக இயங்கிக் கொண்டது.எனினும் முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் யுத்தத்தை இரண்டாவது உலக யுத்தத்தோடு நிறுத்தி விடவில்லை,மாறாகத் தனது குருதிதோய்ந்த வலுக்கரத்தை உலகம் பூராகவும் விரிகத் தொடங்கியது.இதன் போக்கால் இந்த அகதிகள் பிரச்சனை ஒரு தொடர் இயக்கமாக இயங்கிக்கொள்ள ஐ.நா.சபை அகதிகளுக்கான உயர் ஸ்தானிக சபையை உருவாக்கிச் சட்ட வரைவைச் செய்தது, பொதுவான மனிதவுரிமை விளக்கப்படி 10.12.1948ஆம் ஆண்டு ஆக்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com



சட்டம்;: Art.14 Abs 1"Jeder Mensch hat das Recht, in anderen Laendern verfolgungen Asyl zu suchen und zu genießen.»(வேறொரு நாட்டுக்குச் சென்று அரசியல் தஞ்சம் கோருவதற்கும்,அதை அனுபவிப்பதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.) இந்த அழகான வார்த்தை ஜாலம் அதை குடிசார் சட்டவாக்கத்திற்குள் அடக்காது நாடுகளினது கடமையாக -அவர்களே அதை நிறைவேற்றும்படி அரசியல் யாப்புச் சட்டத்தில் அடக்கியதன் விளைவு இப்போது ஒவ்வொரு நாடுகளும் தாம் நினைத்தபடி தார்ப்பார் காட்டிக்கொள்கிறது.

இந்தத் தவறைச் சரிக்கட்ட 1951ஆம் ஆண்டு யூலாய் 28 பிரேரிக்கப்பட்டு 22.04.1954 இல் அமுலுக்கு வந்த "அகதிகளுக்கான சட்ட அமுலாக்க ஒப்பந்தம்" ஜெனீவா ஒப்பந்தமாக அறியப்படுகிறது.இதுவே அரசியல் தஞ்சம் கோருபவரின் காரணத்தைக் குறித்து இந்தக்காரணம் மட்டுமே அரசியல் தஞ்சம் கோர உரித்துடையதென வகுத்து வைத்துள்ளது. இதன்பிரகாரம் ஒரு தனிநபர் தனது மத, இன, பிரைஜாவுரிமை இவைகளின் பொருட்டு அல்லது தனது அரசியல்,சமூகக் காரணிகளால் பாதிக்கும்போது வேறு நாட்டிற்குள் சென்று புகலிடம் கோர உரித்துடையவராகிறார்,

## நம் தோல்வி:

"அகதியென்று சொல், அதிலிருந்துதாம் விடுதலை பெறவேண்டும்". இன்றைக்கு நம்மில் பலர் அகதியென்ற சொல்லையே கேட்கப்பொறுக்காதவர்களாய், தாமும் அகதிகளென்பதையே மறந்து வாழும் நிலையில் நாம் இந்தப் பிரச்சனை குறித்து விக்கிரமாதித்தன் பாணியில் எழுதிக்கொள்கிறோம்.இதுவொரு வகையில் எமது சமூகத்திற்கு அவசியமான தேவை! கணக்கு வைத்துச் சொல்லமுடியாதளவுக்கு நமது சனங்கள் நாடுகடத்தப்படுகிறார்கள்,பலர் ஏமாற்றுக்காரரிடம் சிக்குண்டு பணத்தைக்கொட்டியும் அரசியல் தஞ்சக்கோரிக்கையை ஏற்கப்பண்ண முடியாது துரத்தப்பட்ட நிகழ்வு நாளாந்தம் இடம்பெற்றபடியேதாமிருக்கிறது. இவைகள் எதைக்குறித்துரைக்கிறது?

நம்மிடம் போதிய எவு அறியாமை நிலவுவதென்பதைத் தவிர வேறெதையுமில்லை.

நியூஸ்லாந்து அரசால் பாதிக்கப்பட்ட சிறுமியின் நிலையோ மிகவும் பரிதாபகரமானது, அவள் பாலியல் வன்புணர்வுகுட்படுத்தப்பட்ட நிகழ்வுடன் தனது அரசியல் தஞ்ச விண்ணப்பத்தை இணைத்திருக்கிறாள், சிறுமி,இவ்வளவு காரணங்களும் கூட அவளைக்காக்கவில்லை. இங்கு மனிதாபிமான அடிப்படை மட்டுமே தாம் அவளைக்காத்திருக்க முடியும், சட்டமும்,நீதித்துறையும் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டே சிந்திக்கப்பயிற்றப்பட்டது. இவ்விடத்தில் நமது அறிவு வேலை செய்திருந்தால் நிச்சியம் அவளைக்காத்திருக்க முடியும் ,அதை நாம் தவற விட்டுவிட்டோம். பொதுப்படையான காரணங்களைத்தாண்டி தனிப்பட்ட காரணத்தை நமது அகதிய விண்ணப்பம் கோரிநிற்க நாமோ காரணத்தைத் காட்ட முடியாது தவிக்கின்றோம். எமது வாழ்சூழல் பாதிக்கப்பட்ட வாழ்சூழல்,தமிழ் பேசும் ஒரே காரணத்தால் நாம் இன்று நாட்டை,வீட்டை விட்டு வெளியேறியுள்ளோம்.இது" ஓரத்தே நீரின்றித் தவிக்கும் தவளை போல் ஊரின்றித் தவிக்கும் நம்மை யாரறிவார்" என நொந்துகொள்ள வைக்கிறது.மனிதாபிமானமற்ற நீதித்துறைகளும்,ஆட்சியாளர்களும் தத்தமது நாடுகளினது கதவுகளை இறுக மூடிக்கொண்டு எமது நாடுகளினது கதவுகளை நன்றாகத்திறந்து - தமது நாடுகளின் நலத்தின் பொருட்டு- எம் மண்ணில் யுத்தப் பசோதனை செய்யும்போது நாம் இடம்பெயராது சாகவாமுடியும்?

## புலம் பெயரும் சூழலும்அகதிகளாய் நாம் மாறும் பரிதாபமும்:

மனிதர்கள் எதைவேண்டுமானாலும் இழக்கலாம்,சொத்து,சுகம், ஏன் அன்னையைக்கூட இழக்கலாம்,ஆனால் தான் பிறந்து ,தவழ்ந்து,மண்விளையாடி,வளர்ந்த மண்ணை இழக்கவே கூடாது! இந்த இழப்பு இழந்த பின்பேதாம் இதயத்தைத் துளைக்கும்,அதுவரையும் அதன் சிறுமைகள்தாம் புலப்படும்.ஒருவகையில் இந்தச் சிறுமைகளேதாம் எம்மை வளர்த்திருக்கிறது! இந்தச்சிறுமைகள் எம்மை கேவலப்படுத்தலாம்,அவை நம் முன்னோர்களின் தொடர்ச்சி.அவற்றை நாம்தாம் களைந்தெறியவேண்டும், எனினும் தேசம் தொலைத்த இந்த மனோபாவம் படும் வேதனை எத்தனை நம் அரசியல் வாதிகளுக்குத் தெரியும்? அப்படித் தெரிந்திருந்தால் நம்நாடுகள் அமெரிக்க-ஐரோப்பிய ஏகாதிபத்யத்திற்கு கூஜாத்துக்கும் நிலைக்குப்போயிருக்க முடியாது,இதனாற்றான் நாம் மீளவும்,மீளவும் ஓலமிடுகிறோம்,எமது



படிப்பகம்

www.padippakam.com



படைப்புகள் அந்த வலி குறித்தே திரும்பத்திரும்பப் பேசுகின்றன.நாம் எழுதித்தாம் இது தெரிய வேண்டியதில்லை,நம் பாட்டன் பாப்பாக்களுக்குப் பாடி வைத்ததே போதும்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே -அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே ...

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து,அருள்
ஈந்ததும் இந்நாடே -எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந் நாடே-அவர்
கன்னிய ராகி நிலவினிலாடிக்
களித்ததும் இந் நாடே-தங்கள்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி,இல்
போந்ததும் இந் நாடே..." என்று மனதாற
வாழ்த்திப்பாடுகிறானே! இதுதாம் வலி.

இந்த வலியை யார் விதைக்கிறார்கள்?,எம் மண்ணை விட்டு நாம்நெடுந்துரம் போய் அகதியாக எது உந்தித்தள்ளியது?

யுத்தம்,மண்அபகரிப்பு,துரோகியெனும் கழுத்தறுப்பு,பயங்கரவாதியென்று கொல்லும் அரசு-அமைப்புகள், இத்யாதி இத்யாதி.இன்றைய முதலாளிதுவ அரசுகள் யாவும் பெயருக்கு ஜனநாயகம்
பேசியபடி போர்களை நடத்துகிறார்கள், போர்கள் தவிர்க்கமுடியாதவொரு அங்கமாகச் சந்தைப் பொருளாதாரத்துள் நிலவுகிறது.முதலாளியத்தின் கொடுமையான சுரண்டலினாலேற்படும்வறுமை, வேலையில்லாப்பிரச்சனை மற்றும் சமூகச் சமமின்மை ஆளும் அரசிற்கு நெக்கடியை வழங்கும்போது அவற்றைத் தணிப்தற்காக மூன்றாமுலக நாடுகள் போரை ஒரு ஆயுதமாப் பயன் படுத்துகின்றன, அல்லது இன வாத,மதவாத கருத்தியலை அழுத்தமாகப் பரப்புகின்றன.
இதனால் சகோதரங்களாக இருந்த இனங்கள் முட்டி மோதி இரத்த ஆற்றில் மூழ்கி வாழ்வைத் தொலைக்கின்றன.இங்கே சொந்த மண்ணிலேயே வாழ்வு அகதி வாழ்வாய் மாற்றப் படுகிறது!

வளர்ச்சியடைந்த நாடுகள் தமது வருவாய்க்கு தடங்கல் ஏற்படும்போதும் தமது தொழிற்சாலைக்களுக்கு மூலவளம் தொடர்ந்து கிடைப்பதற்காகவும் மற்ற நாடுகள் மீது தொடர்ந்து படையெடுப்பைச் செய்து யுத்தம் நடாத்தி பல இலட்சம் மக்களைக் கொன்று பல கோடி மக்களை அகதி வாழ்வுக்குள் தள்ளுகிறார்கள். சமீபகால அவ்கானிஸ்தான், ஈராக்கு இதற்கு நல்ல உதாரணங்கள்.

இதனால் நாம் வாழ்வைத்
தொலைக்கிறோம்.அகதியாய் நாடுவிட்டு நாடு புகுகிறோம், புகல் நாடுகளோ நம்மை வேண்டா விருந்தாளியாகப் பார்க்கிறது , நாடுகடத்தி தன் கதவை இறுக மூடுகிறது.தமிழ்பேசும் மக்களாகிய நாம் கால் நுற்றாண்டாக அகதிவாழ்வை மேற்குலகில் வாழ நிர்பந்திகப்பட்டுள்ளோம்,இந்த மோசமான -சோகமான சூழலில் உயிர் வாழ்வதற்கே உழைத்து ஓடாய்ப்போகின்ற நிலை வேறு.இந்நிலையில் ஒத்து ஒருமித்த செயற்பாட்டை எதற்குமே நாம் வழங்குவதில்லை,இதனால் சமூகக்கூட்டான வாழ்வு இல்லாது போய்விட்டது,இதன் உள்ளார்ந்த அர்த்தம்யாதெனில் ,சமூகக் கூட்டுணர்வுக்கு சமூக வாழ்வில்லாது போய்விட்டதென்பதாகும்.
இன்றைய எமது வாழ்வானது உதிரிவாழ்சூழலை எமக்குத் தந்துள்ளது.இந்தச்சூழலில் நாம் ஒற்றை மானிடர்களாக ,நாடோடி நிலைக்குத் தள்ளப்பட்டு சமூக சீவியம் உடைந்து சிதறிவிட்டது.
இதன்போக்கால் சமூதாய விருத்திக்கிட்டுச் செல்லும் ஆன்மீகப்பலமின்றி வெறும் கோவில் கட்டிக் கும்பிடும் அகவயத் தன்மைக்குள் நமது படைப்பாற்றல் முடங்கிவிடுகிறது.இதுவே நம்மை அடக்க முனையும் நடவடிக்கைகளைத் தடுக்க முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளது.

பாலியல் வன்புணர்வுகளும் நமது சமூதாயமும்:

«Die Sexualkraft ist die Grundkraft des Leben.Der Sexualtrieb ist der Grundtrieb fuer alle Regungen,Wuensche,Begehrlichkeiten und Gefuehle der Seele.Fast alle nervoesen Stoerungen und seelischen Konflikte haben ihre Ursache im sexuellen Erleben.Selbst die Leistungen schoepferscher Menschen sind der Sexualkraft entsprungen,sind Leistungen sublimierter Sexualitaet dieser Menschen.»-(psychoanalytischen Theorie von Siegmund Freud.)

பாலியற்பலமானது வாழ்க்கையின் அடிப்படைப் பலமாகும்.பாலியல் உந்துதலே அனைத்து அடிப்படையான உந்துதலுக்கும் துண்டுதலுக்கும்,விருப்பிற்கும்,இன்பத்திற்கும்,உள்ளத்தினது உணர்வுக்கும் காரணம்.சகல மனப்பிறழ்வுகளுக்கும்சிதைவுகளுக்கும்உளமுரண்பாடுகளுக்கும் பாலின்ப வாழ்வே அடிப்படையான காரணியாகும்.பாலியல் ரீதியான உந்துதலே



படிப்பகம்

www.padippakam.com



மாபெரும் படைப்பாற்றலுள்ள மனிதர்களை உருவாக்கி அவர்தம் காரியங்களைத் துய்மைப் படுத்தியதும்.

இவ்வளவு முக்கியமான இந்த உணர்வு நமது சமுதாயத்தில் மிக மிக கேவலமான முறைமைகளில் புரிந்துகொள்ளப்படுகிறது!மனிதர்களின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யும் ஆற்றலோ, தகமையோ இன்றைய முதலாளிய சமூகத்திற்குக் கிடையாது, இது பாலியலை பண்டமாக்கி,பெண்ணுடலை பண்ட பரிவர்தனையாகச் செய்து வருகிறது.இது இயற்கையான உணர்வை கேடுகெட்ட ஊடகங்களுடாய் கொதிநிலைக்கு கொண்டுசென்று தனது காரியத்தை நிறைவேற்றுகிறது,இந்த ஈனத்தனமான பாலியற்துப்பிரயோகம் தற்போது கட்டுப்பாடற்ற விளம்பரப்படுத்தல்கள் மூலம் பெண்ணை வெறும் போகப் பொருளாய்ச் சித்தரிக்க அதுவே தற்போதய குறியீடாய் பெண்மீது சுமத்தப்படுகிறது,இந்த வக்கிரமான வியாபாரம் தெருத்தெருவாய் பைத்தியக்காரர்களை உருவாக்கி விடுவதில் பாரிய பங்கு வகிக்கிறது.

இந்தப்பைத்தியங்களின் அகத்தில் வடிவமைக்கப்பட்ட பாலியற் கனவுகள் இன்றைய தமிழ்ச்சினிமா வடிவமைக்கும் பெண்ணாகத் தமிழ்ச்சமூகத்தில் வெளிப்படுகிறது.

இந்த காமப் பரிணாம வளர்ச்சியானது இன்னும் மேலே சென்று பாலியற் சுதந்திரமென்றும் பேசப்படுகிறது, தமிழ்ப் படைப்புச் சூழலில் மஞ்சள் பத்திரிகைகளில் வந்த "கத்தரிக்காய் காயத்திரியை" சாருநிவேதிதா தனதாக்கி படைப்புகள்(!?) தருகிறார்,அதுவும் "உன்த சங்கீதம்"என்ற பிரமணியத்தனமான விழித்தலுடன் சனதரும போதினியில் இடம்பெற நாம் மௌனிக்கிறோம்.

இன்றைக்குப் பாலியலைத் துண்டிப் பணம் பண்ணும் சமூகம் அதற்கேற்றவாறு வடிகால் அமைக்காததால் பாலியலில் இரட்டைத்தன்மை கடப்பிடிக்கப்படுகிறது, இஃது பார்க்கின்ற பெண்களையெல்லாம் அழைக்கின்ற பெண்ணாய்ப் பார்க்கத்துண்டுகிறது.இது ஒரு தலைமுறையையே பாழாக்கிவிட்டது. ஐரோப்பா, கனடா வாழும் தமிழ் இளைஞர்களில் பலர் தாம் ஆடிமுடித்ததும் இலங்கையை நோக்கிப் போவது வரை கொண்டுவந்து விட்டுள்ளது.

இத்தகைய சூழலில் சிறார்கள் பாலியற் பலாத்தகாரத்திற்குப் பலியாவது நாளாந்தம் நிகழும் காரியமாகி விட்டது,

எய்தவர்கள் பட்டொளி வீசும் வெளித்தோற்றத்துடன் கோவில் முகப்புகளிலும்,பெரியமனசு படைத்த கொடை வள்ளல்களாகவும் பவனி வருதல் நம் மத்தியில் சகஜம்.

தனிமனிதர்களினது பிரச்சனையாக இருந்த இந்தப் பிரச்சனை இப்போது சமூகத்தையே பாதிக்கும் பாரிய பிரச்சனையாக ஊதிப் பெருத்துவிட்டது. இன்றைய சினிமா மற்றும் வர்த்தக விளபரங்கள் வடிவமைக்கும் பெண் தோற்றங்கள் திட்டமிட்ட கயமைத்தனத்தை தன்னகத்தே கொண்டியங்குகிறது,இது முற்று முழுதாக இளைஞர்களைத் தமது நுகர்வுக்கு ஏற்ற அடிமைகளாக்கி கோடிகோடியாய்ச் சம்பாதிக்கும் தமிழ்ச் சினிமாவாக அஜீத்தும், விஜேயும், 5கோடி சம்பாதிப்பதில் வெற்றி பெற அப்பாவிச் சிறார்கள் பாலியல் வல்லுறவுக்குட்பட நாம் கையாலாகாதவர்களாய் சங்கடப்படுகிறோம்.நமது சமூகத்தில் நிலவும் ஆணுக்கும் பெண்ணுக்குமான இடைவெளி பயங்கரமான பாலியற் கற்பனைகளை உருவகப்படுத்துகிறது. இது மனித வாழ்வின் சகல படைப்பாற்றலையும் கருக்கி வக்கரமான சமூக உளவியலைத் தோற்றவிக்கிறது!இதன் வெளிப் பாடுகள் "கொண்டை போட்ட பெண்டுகளின் கோவணத்துள் வெடியமுக்கி கொலை கொள்ளும்" காரியமாக, எத்தனை கோணேஸ்வரிகள்,சின்னஞ்சிறார்கள் இன்னும் பலி கொள்ளப் படுவார்களோ அத்தனையும் நம் சமுதாயத்தின் முடிவை மிக விரைவாக்கிவிடும்.

**பெப்ரவரி 2004. ப.வி.ஸ்ரீரங்கன்**





படிப்பகம்

www.padippakam.com



# ஏதுரைப்பேன் ?

- வாசுதேவன் -

*ஹலோ !*
*சொல்லடாப்பா.*

*வழமைபோன்று ஆரம்பிக்கும்தொலைபேசி உரையாடல்கள்.*

*'அந்த இடத்தில் அவரைப்பற்றி நீயும் ஏதும் சொல்லியிருக்கலாம்தானே' என்ற குற்றச்சாட்டு இம்முறை முன்வந்து நின்றது ?*

*திரு. யாதவராயர் பத்மநாதன் அவர்களின் இறுதியாத்திரையில் என்னைப்போலவே கலந்து கொண்ட நண்பனின் பண்பான கண்டிப்பான குற்றச்சாட்டு.*

*கூறியிருக்கலாம்தான். கூறுவதற்கு என்னிடம் நிறையவிடயங்கள் இருந்தன. கூட்டம் கூட்டமாக என்னிடம் வந்து போன சிந்தனைகள் மடையுடைத்துப் பாய்ந்து கொண்டிருந்த அந்தக் கணங்களில் நான் எதைக் கூறியிருக்க முடியும் நண்பனே.*

*உனக்கு ஞாபகம் இருக்கும் என எண்ணுகிறேன். நானும் நீயும் கடவுள் போகும் பாதைகளைத் தேடி அங்கு கண்ணி வெடி தாட்டுவிடுவற்கு அலைந்த காலம். அக்காலம் கடந்து விட்டதாக நீ கருதக்கூடும். உனது போரையும் நீ கைவிட்டிருக்கக் கூடும். ஆனால், நான் என் போரைக் கைவிட்டுவிடவில்லை. நான் தனியாகப் போராடிக்கொண்டிருக்கிறேன். அவ்வப்போது என்னையும் நான் தனியாக அழைத்து உரையாடிக் கொள்கிறேன்.*

*அன்றும் அப்போதும் நான் என்னைத் தவிர்த்து விடமுடியாதபடி என்னுடன் தன்னந்தனியாகப் போராடிக்கொண்டிருந்தேன்.* Père Lachaise *இடு-சுடு காடு எமக்கு ஒன்றும் புதியதல்ல. ஆனால் ஒவ்வொரு தடவை அங்கு செல்லும் போதும் அதற்கு முன்னர் வந்துபோன ஞாபகங்களும் வந்து சேர்ந்து விடுகின்றன. ஒவ்வொரு தடவையும் எம்மிலிருந்து ஏதோ ஒன்றை அரித்துச் செல்கிறது காலம்.*

*மாதமொருமுறை நடைபெறும் நமது பாடசாலைப் பழைய மாணவர் சங்கக் கூட்டங்களில் வந்தமர்ந்து மாறாத புன்சிரிப்புடன் தன்கருத்துகளை வெளியிடும் பத்மநாதன் அண்ணன் அவர்களை அவ்வப்போது கூட்டங்கள் தவிர்ந்த வேறு இடங்களிலும் சந்தித்திருக்கிறேன். அவருடன் உரையாடும் அரிய சந்தர்ப்பங்களும் எனக்குக் கிடைத்தது. அவருடன் விவாதித்திருக்கிறேன். அவருடன் முரண்பட்டிருக்கிறேன். முரண்பட்டதால் அவரிடமிருந்து நிறையவே அறிந்திருக்கிறேன். அவரின் அறிவாற்றல் என்னை அதிரவைத்திருக்கிறது. அவரின் ஆன்மீகத்திற்கு நான் அடிமை என்றுணர்ந்திருக்கிறேன். அவரின் தன்னடக்கம் எனக்கு எப்போதும் என்மீது வெட்கத்தையே ஊட்டியது.*

*ஓடிக்கொண்டிருக்கும் கூட்டத்தில் அசையாது தனித்து நின்று உற்றுப் பார்த்து விடயங்களை உணர்ந்து கொண்ட இம்மனிதரின் இறுதி யாத்திரையில் நான் எதைப் புலம்பியிருக்கமுடியும் ?*

*வாசித்து, வாழ்ந்து, எழுதி, சிந்தித்து, தியானித்து தீர்மானமான பிடிவாதத்துடன் தன் பாதையைத் தீர்மானித்து அநாமதேயமாக அவ்வப்போ புன்னகைத்து விட்டு தம்முள் சமாதியடைந்து.... காலத்தின் புகார்களுக்குள் போய்விடும் ஞானிகளைப் பற்றி வெறும் மனிதர்களுக்கு எதைக் கூறவேண்டுமென்று என்னிடம் வினாவினாய் ?*



படிப்பகம்

www.padippakam.com



இறப்பு ஏதோ ஒன்றை என்னில் உலுப்பிவிடுகிறது. நான் அவ்வப்போ சுடலைகளைச் சுற்றிப் பயணம் செய்கிறேன். இறப்புக்காக நான் அழுவதில்லை.

என்துணைவியுடன் ஒருநாள் Père Lachaise ல் நடைபயின்றேன். அப்போது அவள் நிறைமாதக் கர்ப்பிணியாயிருந்தாள். நான் அயலில்லுள்ள கடைக்கு தண்ணீர்ப்போத்தல் வாங்கச் சென்றிருந்தேன். திரும்பி வரும்போது இரண்டு கல்றைகளின் நடுவே களைப்பு மிகுதியால் அவள் கண்ணயர்ந்து சலனமின்றித் தூங்கிக் கொண்டிருந்தாள்.

இரண்டு கல்லறைகளுக்கு மத்தியில் இரண்டு இதயங்கள் துடித்துக்கொண்டிருந்தன. துடிப்பிழந்து தூசியாய்பபோன இதயங்களை தாங்கிய கல்லறைகளுக்கிடையே இரண்டு இதயங்கள் துடித்துக்கொண்டிருந்தன. தூக்கத்தைக் கெடுக்காது நின்று தியானித்தேன். துடிக்கும் எல்லா இதயங்களும் ஒருநாள் துடிப்பொழிந்து போகும் என்பதைத் துல்லியமாகத் தரிசித்தேன், துடிப்புகளிலெல்லாம் ஓடிக்கொண்டிருக்கும் ஜீவநதியைத் தரிசித்தேன்.

துடித்துத் துடிப்பிழக்கும் இதயங்கள் என்னில் ஓங்கி எரிந்து கொண்டிருக்ககும் தீபங்களை அவித்துச் செல்கின்றன. அதனால்தான் நான் அதிர்ந்து விடுகிறேன்.

நண்பனே, நண்பனே ! நான் என்ன கூறவேண்டுமென நீ எண்ணினாய் ?

'அண்ணே, கையில நாலு காசிருந்தாத்தான் அண்ணே உலகம் மதிக்கும்' என்று உயிருடன் இருப்பவர்களுக்கு இலவச ஆலோசனை கூறுபவர்களிடம் போய் நீ உரையாற்றக் கேள். உயிருடன் இருக்கும்போது அவரவரின் திறமைகளை மதிக்கத் தவறுகிறோம் என அப்பால் போய்விட்டவர்களை எண்ணி அலறுபவர்களிடம் சென்று உரையாற்றக் கேள்.

என்னால் எதைக் கூறியிருக்க முடியும் ?

வாழ்க்கையைத் தியானமாக்கி வாழும் மனிதர்கள் இருப்பதுவும், போவதுவும் யாருக்கும் புலப்படுவதில்லை. புலப்படுதல்களினால் ஆக்கிரமிக்கப்பட்டு பிரக்ஞைகளில் ஒளிபெற்ற மனிதர்களைப் பற்றி, ஓடும் உலகத்தின் வேகத்திடம் அகப்பட்டவர்களிடம் சென்று எதைக் கூறவேண்டுமென்று கேட்டாய் ?

அடுத்த முறை Père Lachaise ன் அந்த இறுதிநாள் மண்டபத்தின் நுழைவாயிலின் அகப்புறத்தில் எழுதியிருக்கும் வசனங்களை எனக்காக ஒருமுறை வாசி:

'இதோ நாங்கள் பிரிந்து போகும் நேரம் வந்து விட்டது, நீங்கள் வாழ்வின் பக்கமும் நான் மரணத்தின் பக்கமும். எப்பக்கம் இதில் நற்பக்கம் என யாரறிவார் ?'

சோக்கிரட்டீஸ், தண்டனையின்படி தான் நஞ்சருந்துவதற்கு முன் தன் சீடர்களுக்குக் கூறிய வசனங்களே இவை. நாம் ஒவ்வொருவரும் இக்கேள்வியை ஒவ்வொரு முறையும் Père Lachaise க்குச் செல்லும்போது நம்மையே கேட்டுப்பார்ப்போம்.

வேறு எதைச் செல்லுவது ?

இப்போது எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது. போதலயர் எனும் ஒரு கவிஞனைப்பற்றி நீ கேள்வியுற்றிருக்கமாட்டாய். போதையுடன் அவன் எழுதிய கவிதைகளில் ஒன்றை உனக்காக மொழிபெயர்க்கிறேன். அது பின்வருமாறு:

நீள் சலிப்பிற் கிரையாகி முனகும் மனதில் மூடியைப்போல்
பாரமுற்றுப் பதிந்த மேகம் சுமையாகும் போது,
முழுவட்டத்தையும் உட்கொண்ட அடிவானிலிந்து
அது எம்மில் இரவினும் இருண்ட பகலை
வார்க்கும் போது,

பூஞ்சணம் பீடித்த மேற்சுவர்களில் தலையை மோதி,
பறக்க மறுக்கும் இறக்கைகளால் சுவர்களை தட்டி,
வௌவால் ஒன்றைப்போல் நல்லெதிர்பார்ப்பு விட்டுச் செல்லும்
ஈரநிலவறையாய் இவ்வுலகம் மாறிவிட்ட போது,



படிப்பகம்

www.padippakam.com



*பரந்த தன் சுவடுகளை விரவும் மழைக்கதிர்கள்*
*பூமியெனும்*
*மிக அகன்ற சிறைச்சாலைக் கம்பிகளாய்த்*
*தோற்றமுறும் போது,*
*நம் மூளைகளின் ஆழத்தில் அருவருக்கும்*
*ஊமைப்*
*புலிநகச் சிலந்திகளின் கூட்டம்*
*வலைவிரிக்கும்போது,*

*தேசமின்றியவையும் அலைபவையுமான*
*ஆத்மாக்கள்*
*பிடிவாதமாய் சிணுங்கி அழுவதுபோல்,*
*ஆவேசமாய்த் திடீரென (ஆலய) மணிகள்*
*அடித்து*
*ஆகாயத்தை நோக்கித் தாங்கொணாது*
*அலறுகின்றன.*

*இசையின்றிப் பறையுமின்றி நீள் பாடைகள் என்*
*உயிருக்குள்மெதுவாய்ஊர்வலம் போகின்றன.*

*தோற்கடிக்கப்பட்ட எதிர்பார்ப்பு அழுகின்றது.*

*கொடூரம் நிறைந்த இனந்தெரியாப்பய உணர்வு*
*தன் கருங்கொடியை*

*என் சாய்ந்த மண்டையோட்டில் சர்வாதிகாரமாய்*
*நாட்டுகிறது.*

*மறுமுறையும் ஏதோ ஒருவகையில், ஏதோ ஒரு*
*வடிவில் நானும் நீயும்* Père Lachaise *ல்*
*சந்திக்க நேரிட்டால்... நிச்சயமாகச் சந்திப்போம்.*
*ஏதோ ஒரு வகையில்.*

*அப்போது நீ என்னைக் கேட்பதற்குக் கேள்விகள்*
*இல்லாதிருக்குமென எண்ணுகிறேன்.*
*அதுவரையும், கடவுளின் பாதைகளைத்*
*தேடிப்பிடித்துக் கண்ணிவெடி தாட்டுவிடுவதற்கு*
*இன்னமும் விரும்பியிருந்தால் என்னுடன் வா.*

•

# திருநீறின் சிறப்பு

சிவசின்னங்களில் ஒன்றான திருநீறானது சைவர்களுக்கு முக்கியமானதாகும். திருநீற்றுக்கு விபூதி என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. பசுவினுடைய சாணத்தை நன்றாக உலர்த்தி வைக்கோலுடன் சேர்த்து எ ரித்துக் கிடைக்கும் வெண்சாம்பலின் நுண்ணிய பொடியே விபூதி ஆகும். சாணத்தில் மருத்துவ குணம் நிறைந்திருக்கின்றன. என்பது அறிவியல் பூர்வமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சாணத்தில் தொற்று நோய்க் கிருமிகளை அழிக்கும் சக்தி வாய்ந்த கிருமிநீக்கி காணப்படுகின்றது. தங்கத்தை விட தங்கபஸ்பத்துக்கு அதிக ஆற்றல் போல் சாணத்தைவிட சுட்டெரித்த சாணத்திற்கு நச்சு கிருமியை அழிக்கும் அற்றல் அதிகம் என்பதை ரஷ்ய விவசாயக் குழுவினர் கூறியுள்ளனர்கள்.
தமிழ் மூதாட்டி கூட 'நீறில்லா நெற்றி பாழ்' என்று திருநீற்றின் பெருமையைக் கூறுகின்றார். திருநீற்றை உடலில் பூசுவதனால் துர்நாற்றத்தைப் போக்கி தொற்று நோய்களிலிருந்தும் உடலைப் பாதுகாக்கிறது. தினசரி நெற்றியில் திருநீறை பூசிவந்தால் நரம்புகளின் செயற்பாடுகள் உந்தப்பட்டு நினைவாற்றல் அதிகரிக்கின்றது. இதனை தவிர தலையிலுள்ள ஈரப்பதம் அகற்றப்பட்டு சளி. காய்ச்சல் முதலான உபாதைகளில் இருந்து உடல் பாதுகாக்கப்படகிறது.
விபூதியின் பெருமையயை அதிசங்கரர் தனது பாடலில் கூறுகின்ற போது 'கால் கை வலிப்பு,

காசம் கயம், குட்டம் முதலிய நோய்கள் அறவே நீங்குமென்று குறிப்பிடுவார். மனிதனை நெறிப்படுத்தும் நிலையில் என்றோ ஒருநாள் நீ சாம்பலாக போகப்போகின்றாய் எனவே நீ பாவங்களைச் செய்யாதே நன்மைகளைச் செய்து நலமாக வாழ் என்ற ஆன்மீக தத்துவத்தையும் திருநீறு எமக்கு கூறி நிற்கின்றது.

ஆக்கம் : **நர்மதா கந்தசாமி**
ஆண்டு 4



படிப்பகம்

www.padippakam.com





இன்றைய அதிபர்
பொ. அருணகிரிநாதன்




பிரெஞ்சுக் கிளையின் நிர்வாகிகள் 2003-2004



படிப்பகம்

www.padippakam.com







படிப்பகம்

www.padippakam.com

# பூவரசு

கடற்கரைப் பூவரசு
காற்றாட நமக்கோர் தனியரசு
உடற்பயிற்சி, ஊர்க்கதைகள்
படக்கதைகள், பாவையரின் உடற்கதைகள்
நாடகங்கள், வில்லிசைகள்
நானாவிதக் கதைகள்
படைத்தளிக்க கடற்கரையில்
படைத்திருந்தாள் பூமித்தாய்

தன்னந்தனியே தாய்மடியில் கிடப்பதுபோல்,
என்னை மறந்து இனிய கவிதைசொல்ல
அன்னை பூமித்தாய் அளித்திட்ட பூவரசு
காதல்வரும் கானம் வரும் கனகன கதைகள்வரும்
வானமெல்லாம் பறந்து வரண்ட உவர் காற்றுவரும்
பரவைக் கடல் நுரையின் பஞ்சுத்திவலையெல்லாம்
வானத்துத் தேவதைகள் மலர்தூவிச் செல்வதுபோல்
மேலைத்தடவும் மிதமான சுகம் தெரியும்

சின்னக்கடற்பரப்பில் சிறுபடகில் மீனவரின்
கொட்டு வலைச்சத்தம் என்கவிக்குச் சந்தம் தரும்
சந்தம் தொடுத்த சத்தமிட்ட புதுப்பாட்டு
முந்திக் கொண்டுவர நானும் ஓர் கவிஆவேன்

பூவரசு நிழலிலே நான் கண்ட புதுமைகளோ ஏராளம்
சிலநாளில்
மாலை நேரத்து மஞ்சள் ஒளிவெள்ளத்தில்
காளை பசுக்களுடன் கலவி கொள்ளல் ஒரு காட்சி
நாளைய பொழுதுக்காய் மீனவர்கள் கரையிலே
தோணி தள்ளல் ஒருகாட்சி
இலையில்லாக் கிளைகளிலே இளங்காற்றின் விண்ணோசை
இதமான மறுகாட்சி

தூரத்தே சிறுவர்களின் கிளித்தட்டு விளையாட்டும்
ஓரத்தே வேறுசிலர், ஒருத்தாயம், இருத்தாயம்
உரக்கச் சொன்னபடி ஊடுகாய் ஓடுவதும்
பூவரசே உன்நிழலில் நான்
புகன்றது ஒரு கோடி என்பேன்

பொறிமுறை வாழ்வுக்குள் சிறைப்பட்ட நானும்
ஓர் தகப்பனாய் தமையனாய் நெறிகொண்டேன்
ஆனாலும், அரிய என் பூவரசே!
எனக்கு அறிவு தந்த பூவரசே
அரிது அரிது இனி அத்தகைய சுகம் காணல்
பெரிது பெரிது நீ தந்த புரிதல்களோ
மிகப்பெரிது.
அன்னை பூவரசே அழிவின்றி நீ வாழி!

ஆரணி.



படிப்பகம்